
அக்டோபர் - 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்








| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 01. | 2022 – உலகளாவிய புத்தாக்க குறியீடு | 03 |
| 02. | இந்தியாவின் புதிய அட்டார்னி ஜெனரல் | 03 |
| 03. | காவிரியாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மீனினம் | 05 |
| 04. | நாட்டின் மூன்றாவது 'வந்தே பாரத்' இரயில் சேவை | 06 |
| 05. | சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் | 09 |
| 06. | வாட்ஸ்ஆப் கணக்குகள் முடக்கமும் காரணமும் | 11 |
| 07. | 2022 – மருத்துவத்திற்கான நோபல் | 14 |
| 08. | தனுஷ்கோடி: 30 GW காற்றுவளம் | 16 |
| 09. | 2022 – இயற்பியலுக்கான நோபல் | 17 |
| 10. | உலக முதலுதவி நாள் | 19 |
| 11. | தமிழ்நாடு: இணைய சூதாட்டத்துக்குத் தடை | 27 |
| 12. | GSLV Mk–III | 33 |
| 13. | இந்தியாவின் முதல் லித்தியம் மின்கல உற்பத்தியகம் | 35 |
| 14. | இந்தியாவின் 50ஆவது தலைமை நீதியரசர் | 38 |
| 15. | இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம் | 45 |
| 16. | இந்தியாவின் முதல் 'ஸ்வச் சுஜல் பிரதேசம்' | 53 |
| 17. | ஆசிய மகளிர் T20 சாம்பியன்: இந்தியா | 54 |
| 18. | சர்வதேச பட்டினிக் குறியீடு | 54 |
| 19. | SARS–CoV–2 வைரஸுக்கு எதிரான இந்தியாவின் முதல் மாற்று மருந்து | 56 |
| 20. | மங்கள்யான்: பயண நிறைவு! | 63 |

*மேலும் பல...*

### 1. 'WIPO உலகளாவிய புத்தாக்க குறியீடு – 2022'இல் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 25

**ஆ. 40 ☑**

இ. 50

ஈ. 75



✓ உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) வெளியிட்டுள்ள தரவரிசையின்படி, 2022ஆம் ஆண்டின் உலகளாவிய புத்தாக்க குறியீட்டில், 132 நாடுகளுள் இந்தியா 40ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஓராண்டிற்கு முன்பு இருந்ததை விட ஆறு இடங்கள் முன்னேறியுள்ளது இந்தியா. இந்த உயர்வுக்கு முக்கியமாக தகவல் மற்றும் தகவல் தொடர்பு சேவைகள், ஏற்றுமதி தொழில்நுட்பங்களில் முன்னேற்றம் காரணமாக அமைந்துள்ளது. சுவிச்சர்லாந்து, அமெரிக்கா, சுவீடன், UK மற்றும் நெதர்லாந்து ஆகியவை உலகின் மிகப்புதுமையான பொருளாதாரங்களாக விளங்குகின்றன.

### 2. இந்தியாவின் புதிய அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டவர் யார்?

**அ. R வெங்கடரமணி ☑**

ஆ. A J சதாசிவா

இ. D Y சந்திரசூட்

ஈ. இரஞ்சன் கோகோய்



✓ இந்தியாவின் புதிய அட்டர்னி ஜெனரலாக மூத்த வழக்கறிஞர் R வெங்கடரமணி மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போதைய அட்டர்னி ஜெனரல் K K வேணுகோபாலின் பதவிக்காலம் செப்டம்பர்.30ஆம் தேதி முடிவடைகிறது. 91 வயதான மூத்த வழக்கறிஞர் K K வேணுகோபால், கடந்த 2017 ஜூலையில் அந்தப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். மேலும், கடந்த ஜூன் மாதத்தில் மூன்றுமாத காலத்திற்கு மீண்டும் அவர் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார்.

### 3. 'உலகளாவிய தகவல் அணுகலுக்கான சர்வதேச நாள் மாநாடு' நடத்தப்படுகிற நகரம் எது?

**அ. தாஷ்கண்ட் ☑**

ஆ. டாக்கா

இ. நூர்சுல்தான்

ஈ. புது தில்லி




✓ உலகளாவிய தகவலணுகலுக்கான சர்வதேச நாள் ஆண்டுதோறும் செப்.28 அன்று UNESCOஆல் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. "தகவலைத்தேட, பெற மற்றும் விநியோகிக்க அனைவருக்கும் உரிமையுண்டு" என்ற கருத்தை ஆதரிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். "Artificial Intelligence, e-Governance and Access to Information" என்பது உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

### 4. நடுவண் MSME அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய SC–ST மைய மாநாட்டை நடத்துகிற மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. ஜார்கண்ட்

**இ. குஜராத் ☑**

ஈ. மகாராஷ்டிரா



✓ நடுவண் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகமானது குஜராத் மாநிலத்தில் தேசிய SC–ST மைய மாநாட்டை ஏற்பாடு செய்தது. NTPC லிட், இந்திய உணவுக்கழகம், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனம், பாரத வங்கி மற்றும் YES வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் பங்கேற்பு இந்தத் திட்டத்தில் அடங்கும்.

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஆபரேஷன் கருடா' என்பதுடன் தொடர்புடைய அமைப்பு எது?**

அ. நடுவண் ஊழல் கண்காணிப்பு ஆணையம்

**ஆ. நடுவண் புலனாய்வுப் பணியகம் (CBI) ☑**

இ. இந்திய வான்படை

ஈ. இந்திய கடற்படை

✓ சட்டத்துக்குப்புறம்பான போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பிற்கு எதிராக நடுவண் புலனாய்வுப்பிரிவு பல கட்ட 'ஆபரேஷன் கருடா'வைத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருங்கடல் பகுதியை மையமாகக்கொண்டு நடைபெறும் சட்டத்துக்குப்புறம்பான போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை எதிர்த்து, பன்னாட்டு காவலகம் (INTERPOL) மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத்துடன் ஒருங்கிணைந்து இந்த உலகளாவிய நடவடிக்கை தொடங்கப்பட்டது. இந்தச் சிறப்பு நடவடிக்கையின்போது 127 புதிய வழக்குகளை பதிவுசெய்த CBI, 175 பேரை கைது செய்தது மற்றும் ஏராளமான போதைப்பொருட்களையும் அப்போது அது கைப்பற்றியது.

**6. இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சமீபத்திய பணவியல் கொள்கைக் குழுக் கூட்டத்திற்குப்பிறகு (2022 அக்டோபர்), இந்தியாவின் 2022–23 காலத்திற்கான வளர்ச்சிக்கணிப்பு என்ன?**

அ. 6.5%

**ஆ. 7.0% ☑**

இ. 7.5%

ஈ. 8.2%



✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) சமீபத்திய பணவியல் கொள்கைக் குழுக் கூட்டத்திற்குப் பிறகு, அது அதன் முந்தைய மதிப்பீட்டான 7.2 சதவீதத்திலிருந்து 2022–23 காலத்திற்கான இந்தியாவின் வளர்ச்சிக்கணிப்பை 7 சதவீதமாகக் குறைத்தது. இந்த நிதியாண்டில் ரிசர்வ் வங்கி நான்காவது முறையாக வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது. ரெப்போ விகிதம் 50 அடிப்படைப்புள்ளிகள் உயர்த்தப்பட்டு 5.9%ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. Standing Deposit Facility (SDF) விகிதம் 5.65 சதவீதமாகவும், Marginal Standing Facility (MSF) விகிதம் மற்றும் வங்கி விகிதம் 6.15 சதவீதமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**7. இந்தியாவின் 50 பிரத்தியேக மற்றும் தனித்துவமிக்க பாரம்பரிய ஜவுளி கைவினைப்பொருட்களின் பட்டியலை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ. UNESCO ☑**


ஆ. NITI ஆயோக்

இ. நடுவண் கலாச்சார அமைச்சகம்

ஈ. FICCI

✓ UNESCO, இந்தியாவின் ஐம்பது பிரத்தியேக மற்றும் தனித்துவமிக்க பாரம்பரிய ஜவுளி கைவினைப் பட்டியலை, "21 ஆம் நூற்றாண்டிற்கான நெசவு: பாரம்பரிய இந்திய ஜவுளியைப் பாதுகாத்தல்" என்ற பெயரில் வெளியிட்டது. இது அவற்றின் தயாரிப்பின் பின்னணியிலுள்ள செயல்முறைகளை விவரிக்கிறது; அவற்றின் புகழ் மங்கிவருவதற்கான காரணங்களைக்குறிப்பிடுகிறது மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கான உத்திகளை வழங்குகிறது. தமிழ்நாட்டைச் சார்ந்த தோடா பூத்தையல் மற்றும் சுங்குடி, ஹைதராபாத்தில் இருந்து ஹிம்ரூ நெசவுகள் மற்றும் ஒடிசாவிலிருந்து பந்தா சாய நெசவு ஆகியவை இப்பட்டியலில் அடங்கும்.

**8. சமீபத்தில், பசிபிக் தீவு நாடுகளுடனான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு எது?**




அ. சீனா


**ஆ. அமெரிக்கா ☑**

இ. ரஷ்யா

ஈ. ஜெர்மனி

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளானது (USA) ஒரு வரலாற்று முக்கியத்துவம்மிக்க உச்சிமாநாட்டை நடத்தியது. அப்போது பிஜி, மார்ஷல் தீவுகள், பப்புவா நியூ கினியா, டோங்கா உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட பசிபிக் தீவு நாடுகளுடனான கூட்டு ஒப்பந்தத்தில் அது கையெழுத்திட்டது. சீனாவின் வளர்ந்துவரும் இராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கு குறித்து அதிகரித்துவரும் அச்சங்களுக்கு இடையே, பசிபிக் பிராந்தியத்தில் தனது இருப்பை அதிகரிக்க உறுதி பூண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளும் இவ்வுச்சிமாநாட்டில் பார்வையாளர்களாகப் பங்கேற்றன.

**9. அண்மையில் காவிரியாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட *Pangasius Icaria* என்பது சார்ந்த இனம் எது?**



அ. ஆமை

**ஆ. கெளுத்தி மீன் ☑**

இ. தவளை

ஈ. பாம்பு

✓ மேட்டூர் அணைக்கருகே காவிரியாற்றில் *Pangasius Icaria* (P. icaria) என்ற பெயரில் புதிய உண்ணத்தகு கெளுத்தி மீன் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இனத்தை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்தது; இது *Pangasius* இனத்தைச் சேர்ந்ததாகும். ஏறக்குறைய இருநூறாண்டுகளாக *Pangasius* இனம் இந்தியாவிலும் தெற்கு ஆசியாவிலும் *Pangasius pangasius* என்று ஓர் இனத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது

**10. UNICEFஇன் சமீபத்திய அறிக்கையின்படி, பெண் குழந்தைகளுக்கு உயர்கல்வி வழங்கினால் எத்தனை சதவீத அளவுக்குக் குழந்தைத்திருமணங்கள் குறையும்?**




அ. 25 சதவீதம்

ஆ. 40 சதவீதம்

இ. 60 சதவீதம்

**ஈ. 80 சதவீதம் ☑**

✓ சமீபத்தில் வெளியிடப்பட்ட UNICEF அறிக்கையின்படி, அனைத்து சிறுமிகளுக்கும் உயர்கல்வி வழங்கினால் 80% குழந்தைத் திருமணங்கள் குறையும். ஆரம்பப்பள்ளிக்கல்வியைவிட இடைநிலைக் கல்வி என்பது குழந்தைத் திருமணத்திற்கு எதிரான மிகவும் வலுவான மற்றும் நிலையான பாதுகாப்பு என்றும் அவ்வறிக்கை குறிப்பிட்டது. கடந்த தசாப்தத்தில் தெற்காசியாவில் மிகவும் முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது; அங்கு ஒரு பெண்ணின் குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்துகொள்ளும் ஆபத்து 1/3 பங்காக 30 சதவீதத்திற்கும் கீழே குறைந்துள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வட்டி விகிதங்களை 0.5% உயர்த்தியது RBI**

நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகமாகவே உள்ள நிலையில், அதை கட்டுக்குள் கொண்டுவரும் வகையில் வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ ரேட்) இந்திய ரிசர்வ் வங்கி 0.5 சதவீதம் உயர்த்தியுள்ளது. அதன் காரணமாக, வீட்டுக்கடன், வாகனக்கடன், மாதாந்திர தவணைத்தொகை உள்ளிட்டவற்றுக்கான வட்டியை வங்கிகள் உயர்த்தவுள்ளன.

கடந்த மே மாதத்தில் இருந்து தொடர்ந்து 4ஆவது முறையாக ரெப்போ வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக வட்டி விகிதமானது 1.90% அதிகரிக்கப்பட்டு தற்போது 5.90 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகபட்சமாகும்.

நாட்டில் பணவீக்கம் 2 முதல் 6 சதவீதத்துக்குள் இருக்கவேண்டுமென RBI இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் முதலே பணவீக்கம் 6 சதவீதத்துக்கு அதிகமாக உள்ளது. அதை கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் ரெப்போ வட்டி விகிதம் ஏற்கெனவே கடந்த மே மாதம் முதல் 1.4 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம்:

பணவீக்கமானது நடப்பு 2022–23ஆம் நிதியாண்டில் 6.7%ஆக இருக்கும் என RBI கணித்துள்ளது. நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் பணவீக்கம் 7.1 சதவீதமாகவும், மூன்றாவது காலாண்டில் 6.5 சதவீதமாகவும், 4ஆவது காலாண்டில் 5.8 சதவீதமாகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் பணவீக்கம் கட்டுக்குள் வரும் எனவும் RBI நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி:

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) நடப்பு நிதியாண்டில் 7.2 சதவீதமாக இருக்கும் என்று RBI முன்பு கணித்திருந்த நிலையில், அந்தக் கணிப்பை 7 சதவீதம் எனத் தற்போது குறைத்துள்ளது.

---

**2. நாட்டின் 3–ஆவது 'வந்தே பாரத்' இரயில் சேவை**

குஜராத் தலைநகர் காந்திநகரையும் மகாராஷ்டிர தலைநகர் மும்பையையும் இணைக்கும் வகையில் நாட்டின் 3ஆவது 'வந்தே பாரத்' இரயில் சேவையைப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கிவைத்தார்.

நவீன வசதிகள்கொண்ட, 'வந்தே பாரத்' இரயிலை இந்தியா உள்நாட்டிலேயே தயாரித்து வருகிறது. முக்கியமாக, வந்தே பாரத் இரயிலின் பெட்டிகள் சென்னையில் உள்ள ICFஇல் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் ஏற்கெனவே புது தில்லி–வாராணசி, புது தில்லி–ஸ்ரீமாதா வைஷ்ணவ தேவி காத்ரா ஆகிய இருவழித்தடங்களில் 'வந்தே பாரத்' இரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

---

**3. சர்வதேச புத்தாக்க குறியீடு: 40–ஆவது இடத்தில் இந்தியா**

நவீன தொழில்நுட்பங்கள் தொடர்ந்து வளர்ந்துவரும் நிலையில், புத்தாக்கம் முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. தொழில்முனைவுக்கு அடிப்படையாக இருப்பவை புத்தாக்க நடவடிக்கைகள். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் புத்தாக்க ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை உலக நாடுகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

புத்தாக்கத்தில் நாடுகள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பதற்கான ஆய்வை உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு ஆண்டுதோறும் நடத்திவருகிறது. நடப்பாண்டுக்கான ஆய்வின் அடிப்படையில் சர்வதேச புத்தாக்க குறியீட்டை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியா 6 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது 40ஆம் இடத்திலுள்ள இந்தியா, இந்தக்குறியீட்டில் தலைசிறந்த 40 நாடுகள் பட்டியலுக்குள் வருவது இதுவே முதல்முறையாகும். அதிலும் குறிப்பாக, கடந்த 2015ஆம் ஆண்டில் சர்வதேச புத்தாக்க குறியீட்டில் இந்தியா 81ஆவது இடத்தில் இருந்தது. தற்போது 40ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது சிறப்புமிக்கது.

கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி, அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு, தொழில்தொடங்குவதற்கு சாதகமான சூழல், நவீன தொழில்நுட்பங்கள் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இந்தியா வளர்ச்சி கண்டுள்ளதே இந்த முன்னேற்றத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

புத்தாக்க குறியீட்டில் முதல் 3 நாடுகள்

1 சுவிட்சர்லாந்து

2 அமெரிக்கா

3 சுவீடன்

---

**4. 02-10-2022: உத்தமர் காந்தியடிகளின் 154ஆவது பிறந்தநாள்.**

---

### 1. 'ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகள் – 2022'இல் முதலிடத்தில் உள்ள நகரம் எது?



அ. மைசூரு

**ஆ. இந்தூர் ☑**

இ. சென்னை

ஈ. பெங்களூரு

✓ 'ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகள்–2022'இல் சிறப்பாகச் செயல்படும் நகரங்களின் பிரிவில், தொடர்ச்சியாக ஆறாவது முறையாக இந்தூர் 'தூய்மையான நகரமாக' அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சூரத் மற்றும் நவி மும்பை உள்ளன. மாநிலங்களின் பிரிவில், மத்திய பிரதேசம் முதலிடத்தையும், சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிரா அடுத்தடுத்த இடங்களையும் பெற்றன. ஸ்வச் சர்வேக்ஷனின் ஏழாவது பதிப்பு, தூய்மை இந்தியா இயக்கத்தின் (நகர்ப்புறம்) முன்னேற்றம் மற்றும் பல்வேறு தூய்மை மற்றும் சுகாதார அளவுருக்களின் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைத் தரவரிசைப்படுத்துவதற்காக நடத்தப்பட்டது.

### 2. அண்மையில் (2022 அக்டோபரில்) இயக்கப்பட்ட மூன்றாவது 'வந்தே பாரத்' விரைவு இரயிலானது, கீழ்க்காணும் எந்த இருநகரங்களுக்கு இடையே இயக்கப்படுகிறது?



அ. புது தில்லி மற்றும் குருகிராம்

**ஆ. மும்பை மற்றும் அகமதாபாத் ☑**

இ. பெங்களூரு மற்றும் மைசூரு

ஈ. மும்பை மற்றும் இந்தூர்

✓ 'வந்தே பாரத்' வரிசையில் மூன்றாவது இரயிலான காந்திநகர்–மும்பை 'வந்தே பாரத்' விரைவு இரயிலை மும்பை மற்றும் அகமதாபாத்தில் பிரதமர் மோதி தொடங்கிவைத்தார். மற்ற இரண்டு 'வந்தே பாரத்' விரைவு இரயில்கள் 2019 பிப்ரவரி மற்றும் அக்டோபர் மாதங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன; அவை முறையே புது தில்லியிலிருந்து வாரணாசி மற்றும் கத்ராவிற்கு இயக்கப்பட்டன. 'வந்தே பாரத் 2.0' என்றழைக்கப்படும் காந்திநகர்–மும்பை விரைவு இரயில் சுமார் 540 கிலோமீட்டர் தூரத்தை 6 மணி 30 நிமிடங்களில் கடக்கிறது.

### 3. 'Universal Service Obligation Fund (USOF)' என்பதுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

**அ. தகவல் தொடர்பு அமைச்சகம் ☑**

ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ. MSME அமைச்சகம்

ஈ. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

संचार मंत्रालय
MINISTRY OF
**COMMUNICATIONS**
सत्यमेव जयते

✓ தொலைத்தொடர்புத் துறையின் (தகவல் தொடர்பு அமைச்சகம்) கீழுள்ள ஓர் அமைப்பான 'Universal Service Obligation Fund (USOF)', தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் உள்நாட்டு உற்பத்தி மற்றும் துறையில் புதுமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கிராமப்புறம் சார்ந்த தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு நிதியளிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 4. 'உலக அல்சைமர் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




அ. செப்டம்பர்.20 **ஆ. செப்டம்பர்.21 ☑**

இ. செப்டம்பர்.25 ஈ. செப்டம்பர்.27

✓ ஆண்டுதோறும் செப்.21 அன்று உலக அல்சைமர் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் அல்சைமர் நோய், அதன் காரணங்கள், அறிகுறிகள் மற்றும் அதை கையாளும் முறைகள்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதை தனது

நோக்கமாகக்கொண்டுள்ளது. அல்சைமர் நோய் என்பது மூளையின் நினைவாற்றல் & அறிவாற்றல் திறன்களை குறைக்கின்ற ஒரு நோயாகும். முதியோர்களில் பொதுவாகக்காணப்படும் ஞாபக மறதி நோய்க்கு இது காரணமாகும்.

### 5. "New Technologies for Greener Shipping" என்பது செப்.30 அன்று வரும் எந்த நாளின் கருப்பொருளாகும்?




அ. உலக கடற்படையினர் நாள்

**ஆ. உலக கடல்சார் நாள் ☑**

இ. உலக பெருங்கடலியல் நாள்

ஈ. உலக மீன்வள நாள்

✓ பன்னாட்டு கடல்சார் அமைப்பு (IMO) என்பது ஐக்கிய நாடுகள் (UN) அவையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும். அது கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகிறது. அதன் தலைமையகம் இலண்டனில் உள்ளது. உலக கடல்சார் நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.30 அன்று கொண்டாடப்படுகிறது. COVID தொற்றால் இன்னல்களை எதிர்கொள்ளும் கடற்படையினருக்காக, IMO, 2021'ஐ அவர்களுக்கான ஓர் ஆண்டாக அறிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டிற்கான உலக கடல்சார் நாளின் கருப்பொருள், "New Technologies for Greener Shipping" என்பதாகும்.

### 6. உணவு இழப்பு மற்றும் சேதம் குறித்த சர்வதேச விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




**அ. செப்டம்பர்.29 ☑**


ஆ. செப்டம்பர்.30

இ. அக்டோபர்.01

ஈ. அக்டோபர்.02

✓ செப்டம்பர்.29 அன்று உணவிழப்பு மற்றும் சேதம் குறித்த மூன்றாவது சர்வதேச விழிப்புணர்வு நாளை உலகம் கொண்டாடியது. "Stop Food Loss and Waste; For the People; For the Planet" என்பது இந்த ஆண்டின் (2022) கருப்பொருளாகும். உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்களில் சுமார் 14% அறுவடை மற்றும் சில்லறை விற்பனையின் போது வீணாகின்றது. அதே நேரத்தில், உலகளாவிய உணவு உற்பத்தியில் 17% வரை பல்வேறு நிலைகளில் வீணாகின்றது. உலக இருதய நாளானது செப்டம்பர்.29 அன்று கொண்டாடப்படுகிறது. "Use Heart for Every Heart" என்பது இந்த ஆண்டின் (2022) கருப்பொருளாகும்.

### 7. சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?




**அ. செப்டம்பர்.30 ☑**

ஆ. அக்டோபர்.01

இ. அக்டோபர்.02

ஈ. அக்டோபர்.03

✓ ஆண்டுதோறும் செப்.30 அன்று சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிறது. மொழிபெயர்ப்பாளர்களின் தந்தையாகக் கருதப்படும் விவிலிய மொழிபெயர்ப்பாளர் புனித ஜெரோம் நினைவாக இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கடந்த 2017'இல் ஐநா பொதுச்சபையால் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடுகளை இணைப்பதி–லும் அமைதியை மேம்படுத்துவதிலும் மொழிவல்லுநர்கள் வகிக்கும் பங்கை அங்கீகரிப்பதற்காக இந்தச்சிறப்பு நாள் கொண்டாடப்படுகிறது. "A World without Barriers" என்பது நடப்பாண்டில் (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**8. தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர்.01 ☑**

ஆ. அக்டோபர்.02

இ. அக்டோபர்.03

ஈ. அக்டோபர்.04




✓ தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாளானது ஒவ்வோராண்டும் அக்.1 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது குருதிக்கொடைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தன்னார்வ குருதிக்கொடையை ஊக்குவிப்பதை –யும் நோக்கமாகக் கொண்டுள்ளது. நம் நாட்டிற்கு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.45 கோடி அலகு (யூனிட்) இரத்தம் தேவைப்படுகிறது. நாடு முழுவதும் 3500 உரிமம் பெற்ற இரத்த வங்கிகள்மூலம் இந்த இரத்தம் சேகரிக்கப்படுகிறது.

**9. உலக வாழ்விட நாள் கடைப்பிடிக்கப்படுகிற நாள் எது?**

**அ. அக்டோபர் முதல் திங்கள் ☑**

ஆ. அக்டோபர் முதல் ஞாயிறு

இ. செப்டம்பர் கடைசி ஞாயிறு

ஈ. செப்டம்பர் கடைசி சனிக்கிழமை




✓ ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தில் வரும் முதல் திங்களன்று, ஐநா அவையால், "உலக வாழ்விட நாள்" அனுசரிக்கப்படுகிறது. அனைவருக்கும் போதுமான தங்குமிடத்தை வலியுறுத்தி இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, அக்.3 அன்று அனுசரிக்கப்பட்டது. "Mind the Gap. Leave No One and Place Behind" என்பது இந்த ஆண்டு (2021) வரும் உலக வாழ்விட நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**10. பன்னாட்டு அகிம்சை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர்.01 ☑**

ஆ. அக்டோபர்.02

இ. அக்டோபர்.03

ஈ. அக்டோபர்.04




✓ இந்தியாவின் 'தேசத்தந்தை' 'மகாத்மா' காந்தியடிகளின் பிறந்தநாள், ஒவ்வோர் ஆண்டும் அக்.2 அன்று பன்னாட்டு அகிம்சை நாளாக அனுசரிக்கப்படுகிறது. கல்வி மற்றும் பொதுமக்களிடையேயான விழிப்புணர்வுமூலம் அகிம்சையை பரப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2004ஆம் ஆண்டில், நோபல் பரிசு பெற்ற ஈரானியர் ஷிரின் எபாடி, இந்த நினைவேந்தல் யோசனையை முதன் முதலில் முன்மொழிந்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கிராமப்புறங்களில் 55% குடியிருப்புகளுக்கு குழாய்மூலம் குடிநீர்: தமிழ்நாடு அரசுக்கு நடுவணரசு விருது**

ஜல் ஜீவன் திட்டத்தின்படி, தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் 55 சதவீத குடியிருப்புகளுக்கு குழாய்மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே பெருமளவில் இந்தப் பணிகளை மேற்கொண்டதற்காக முதல் பரிசை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் உள்ள 124.93 லட்சம் குடியிருப்புகளில் இதுவரை 69.14 லட்சம் குடியிருப்புகளுக்கு (55%) குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 55.79 லட்சம் குடியிருப்புகளுக்கு பல்வேறு

திட்டங்கள் வாயிலாக குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாக தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை முன்னிட்டு ₹18,000 கோடி அளவிற்கு 42 புதிய குடிநீர் திட்டங்கள், 56 குடிநீர் திட்டங்களின் மறுசீரமைப்பு பணிகள் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

**2. வாட்ஸ்ஆப் கணக்குகள் முடக்கமும் காரணங்களும்**

மெட்டா நிறுவனத்துக்குச் சொந்தமான வாட்ஸ்ஆப், கடந்த ஜூலையில் 23 இலட்சம் கணக்குகளை முடக்கியுள்ளது. பயனர்கள் தெரிவித்த புகார்கள் அடிப்படையிலும், விதிமீறல்களைக்கண்டறியும் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலும் கணக்குகளை வாட்ஸ்ஆப் முடக்கியுள்ளது.

**வாட்ஸ்ஆப் கணக்குகள் முடக்கப்படுவதற்கான காரணங்கள் சிலவற்றைக் காணலாம்:**

**போலிக்கணக்கு உருவாக்குதல்**

மற்றவர்கள் பெயரில் போலிக்கணக்குகளை உருவாக்கினால், சம்பந்தப்பட்ட நபரின் கணக்கு முடக்கப்படும்.

**அதிக குறுஞ்செய்திகளை அனுப்புதல்**

கைப்பேசியில் பதிவுசெய்து வைக்கப்படாத எண்ணுக்கு மிக அதிக எண்ணிக்கையிலான குறுஞ்செய்திகளை அனுப்பினால், சம்பந்தப்பட்ட வாட்ஸ்ஆப் கணக்கு முடக்கப்படும்.

**அங்கீகரிக்கப்படாத பயன்பாடு**

வாட்ஸ்ஆப் டெல்டா, GB வாட்ஸ்ஆப், வாட்ஸ்ஆப்+ உள்ளிட்ட அங்கீகரிக்கப்படாத செயலிகளைப் பயன்படுத்தினாலும் சம்பந்தப்பட்ட கணக்கை வாட்ஸ்ஆப் நிறுவனம் முடக்கும். அத்தகைய செயலிகளில் தனிநபர் தரவுகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால், அவற்றின் பயன்பாட்டை வாட்ஸ்ஆப் அனுமதிப்பதில்லை.

**பயனர்களால் முடக்கம்**

பல வாட்ஸ்ஆப் பயனர்கள் உங்களை முடக்கியிருந்தால் (பிளாக்) வாட்ஸ்ஆப் நிறுவனத்தால் கணக்கு அதிகாரபூர்வ –மாக முடக்கப்படும் அபாயமுள்ளது. போலிச்செய்திகளைப் பரப்பும் நபர் எனக்கருதி, வாட்ஸ்ஆப் இந்நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**பயனர்களின் புகார்**

உங்களுக்கு எதிராக வாட்ஸ்ஆப் பயனர்கள் பலர் புகார் தெரிவிக்கும்பட்சத்தில், உங்கள் கணக்கை வாட்ஸ்ஆப் அதிகாரபூர்வமாக முடக்கும்.

**போலி தகவல்களை அனுப்புதல்**

கைப்பேசிக்கோ மடிக்கணினிக்கோ அபாயம் ஏற்படுத்தும் வகையிலான தரவுகளையும் மென்பொருளையும் மற்றவர் –களுக்கு அனுப்பினால், உங்கள் கணக்கு முடக்கப்படும்.

**ஆபாச படங்களை அனுப்புதல்**

ஆபாச படங்கள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், அவமதிக்கும் பதிவுகள் உள்ளிட்டவற்றைப் பயனர்களுக்கு அனுப்பினால், அக்கணக்கு முடக்கப்பட வாய்ப்புள்ளது.

**வன்முறையைப் பரப்புதல்**

வன்முறையைப் பரப்பும் வகையிலான செய்திகள், காணொலிகளை மற்ற பயனர்களுக்குப் பகிர்ந்தால், உங்கள் கணக்கு முடக்கப்படும்.

**விதிகளை மீறுதல்**

வாட்ஸ்ஆப் நிறுவனத்தின் விதிகளை மீறி நடக்கும் பயனர்களின் கணக்குகள் முடக்கப்படும்.

**அதிகாரபூர்வ பதிவிறக்கம்**

கூகுள் பிளே ஸ்டோர், ஆப்பிள் ஆப் ஸ்டோர் உள்ளிட்ட அதிகாரபூர்வ வலைதளங்களில் இருந்து மட்டுமே வாட்ஸ்ஆப் செயலி பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும். நம்பகத்தன்மை அற்ற தளங்களிலிருந்து பதிவுசெய்யப்படும் கணக்குகள் முடக்கப்படும்.

**அடையாளம் தெரியாத நபரை இணைத்தல்**

அடையாளம் தெரியாத பயனரைக் குறிப்பிட்ட குழுவில் இணைத்தால், சம்பந்தப்பட்ட நபரின் வாட்ஸ்ஆப் கணக்கு முடக்கப்படும்.

**விளம்பரச்செய்திகளை அனுப்புதல்**

பயனர்களின் அனுமதியின்றி விளம்பரச்செய்திகளை அனுப்பினால், சம்பந்தப்பட்டவர்களின் கணக்கு முடக்கப்படும்.

**சட்டவிரோத செய்திகளை அனுப்புதல்**

சட்டவிரோத செய்திகளை மற்ற பயனாளர்களுக்கு அனுப்பினால், வாட்ஸ்ஆப் கணக்கு முடக்கப்படும்.

**ஒரே செய்தியைப் பலருக்கு அனுப்புதல்**

குறிப்பிட்ட செய்தியைக் குறைந்த நேரத்தில் பலருக்கு அனுப்பினால், உங்களின் வாட்ஸ்ஆப் கணக்கு முடக்கப்படும்.

**1. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் இலகுரக போர் உலங்கு வானூர்திகளின் பெயர் என்ன?**

அ. பிரதாப்

**ஆ. பிரசந்தா ☑**

இ. பிரகாஷ்

ஈ. விகாஸ்



✓ இந்திய வான்படையானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இலகுரக போர் உலங்கு வானூர்திகளின் முதல் தொகுதியை அறிமுகப்படுத்தியது. இந்த இலகுரக போர் உலங்கு வானூர்திக்கு, 'பிரசந்தா' எனப் பெயர் சூட்டப்பட்டு உள்ளது. அவை ஏவுகணைகள் மற்றும் பிற ஆயுதங்களைச் சுட்டு வீழ்த்தும் திறன்கொண்டவை. இந்த இலகுரக போர் உலங்கு வானூர்திகளை பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) உருவாக்கியுள்ளது. உயரமான பகுதிகளில் சேவையாற்றும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜோத்பூரில் நடந்த விழாவில் இந்திய வான்படையில் இது சேர்க்கப்பட்டது.

**2. 'YUVA 2.0' என்ற திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. கல்வி அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

ஈ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

शिक्षा मंत्रालय
MINISTRY OF EDUCATION
सत्यमेव जयते

✓ கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித்துறை, அக்.2 அன்று YUVA 2.0 (Young, Upcoming மற்றும் Versatile Authors) என்ற திட்டத்தைத் தொடங்கியது. இது இளம் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் பிரதமரின் ஒரு திட்டமாகும். YUVA 2.0 என்பது இந்திய இலக்கியத்தை பன்னாட்டளவில் வளர்ப்பதற்காக 30 வயதுக்குட்பட்ட இளம் மற்றும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான ஓர் ஆசிரியர் வழிகாட்டல் திட்டமாகும்.

**3. இந்தியாவில், 'ஸ்வச் பாரத் திவாஸ்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர்.02 ☑**

ஆ. அக்டோபர்.04

இ. அக்டோபர்.06

ஈ. அக்டோபர்.08




✓ அக்.02 அன்று இந்தியா முழுவதும், 'ஸ்வச் பாரத் திவாஸ்' கொண்டாடப்பட்டது. ஸ்வச் பாரத் திவாஸ்–2022'ஐ ஏற்பாடு செய்யும் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை, தூய்மை இந்தியா இயக்கம் – ஊரகம் (SBM–G) மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய இரண்டு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. தூய்மை கணக்கெடுப்பு – ஊரகம் (SSG) 2022, ஸ்வச்தா கி சேவா–2022, சுஜலாம் 1.0 மற்றும் 2.0, ஜல் ஜீவன் இயக்கத்தின் செயற்பாட்டு மதிப்பீடு, கிராண்ட் கர் ஜல் சான்றளிப்பு மற்றும் துளிர் நிறுவல்கள் ஆகியவற்றுக்கான விருதுகளை இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.

**4. பங்குச்சந்தைகளில் பட்டியலிடத் தகுதிபெற, பிராந்திய கிராமப்புற வங்கிகளின் (RRBs) குறைந்தபட்ச நிகர மதிப்பு எவ்வளவாக இருத்தல் வேண்டும்?**

அ. ரூ.100 கோடி ஆ. ரூ.250 கோடி

**இ. ரூ.300 கோடி ☑** ஈ. ரூ.500 கோடி



✓ நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட வரைவு வழிகாட்டுதல்களின்படி, பிராந்திய கிராமப்புற வங்கிகள் (RRBs) பங்குச் சந்தைகளில் பட்டியலிடவும், முந்தைய 3 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ₹300 கோடி நிகர மதிப்பு இருந்தால் நிதி திரட்டவும் தகுதிபெறும். அத்தகைய வங்கிகள் முந்தைய மூன்றாண்டுகளில் ஒவ்வொன்றிலும் 9 சதவீத அளவுக்கு போதுமான மூலதனத்தைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் முந்தைய ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளின் குறைந்தபட்சம் ₹15 கோடி அளவுக்கு செயல்பாட்டு இலாபத்தை பதிவுசெய்திருக்க வேண்டும்.

**5. ஸ்வச் சர்வேக்ஷன் – ஊரகம் – 2022இன்கீழ், பெரிய மாநிலங்கள் பிரிவின்கீழ் முதல் பரிசை வென்ற மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. தெலுங்கானா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா



✓ ஸ்வச் சர்வேக்ஷன் – ஊரகம் (SSG) – 2022இன்கீழ் பெரிய மாநிலங்கள் பிரிவின்கீழ் தெலுங்கானா முதல் பரிசை வென்றது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ஊரகங்களின் சுகாதார நிலையை ஆய்வுசெய்து விருதுகளை வழங்கினார். SSG விருதுகள் – 2022இல், ஹரியானா இரண்டாவது மற்றும் தமிழ்நாடு மூன்றாவது சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டன. தூய்மை இந்தியா இயக்கம் – ஊரகம் இரண்டாம் கட்டத்தில், இந்தியாவில் உள்ள அனைத்து 6 லட்சம் கிராமங்களையும் திறந்தவெளி மலங்கழித்தல் இல்லாததாக மாற்றுவதே நோக்கமாகும்.

**6. உடலியல் அல்லது மருத்துவத்திற்கான 2022ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசை வென்ற ஸ்வான்டே பாபோ என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டைச் சேர்ந்த மரபியல் நிபுணராவார்?**

அ. அமெரிக்கா

ஆ. ஜெர்மனி

இ. ஆஸ்திரேலியா

**ஈ. சுவீடன் ☑**



✓ சுவீட மரபியலாளர் ஸ்வாண்டே பாபோ, அழிந்துபோன ஹோமினின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாமம் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக உடலியல் அல்லது மருத்துவத்திற்கான 2022 – நோபல் பரிசை வென்றார். தற்கால மனிதர்களின் அழிந்துபோன உறவினரான நியாண்டர்தாலின் மரபணுவை பாபோ வரிசைப்படுத்தினார். 'டெனிசோவா' என்ற முன்பின் அறிந்திராத ஹோமின்குறித்த கண்டுபிடிப்பையும் அவர் மேற்கொண்டார். மதிப்புமிக்க இவ்விருது தங்கப்பதக்கம் மற்றும் 10 மில்லியன் சுவீட குரோனர் ($1.14 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல்) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**7. UNCTADஇன் வருடாந்திர வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கையின்படி, 2022–23ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் GDP வளர்ச்சிக்கணிப்பு என்ன?**

அ. 6.2% ஆ. 6.0%

**இ. 5.7% ☑** ஈ. 5.5%

✓ வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு (UNCTAD) இந்தியாவின் பொருளாதாரம் 2022ஆம் ஆண்டில் 5.7 சதவீதமும் 2023ஆம் ஆண்டில் 4.7 சதவீதமும் வளர்ச்சியடையும் என்று மதிப்பிடுகிறது. அதன் 2022 – வருடாந்திர வர்த்தக மற்றும் மேம்பாட்டு அறிக்கையில், உலகப்பொருளாதாரம் 2022ஆம் ஆண்டில் 2.6% வளர்ச்சியடையும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, மேம்பட்ட பொருளாதாரங்களில் நிலவும் பணவியல் மற்றும் நிதி இறுக்கத்தின் தற்போதைய கொள்கைப்போக்கை விரைவாக மாற்றாத வரை உலகம் உலகளாவிய மந்தநிலை மற்றும் தேக்கநிலையை நோக்கியே செல்லும்.

**8. மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்களின் டிஜிட்டல் இந்தியா மாநாட்டை நடத்துகிற மாநிலம்/UT எது?**



அ. வாரணாசி

**ஆ. புது தில்லி ☑**

இ. மும்பை

ஈ. மைசூரு

✓ தில்லியில் அண்மையில், 'மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்களின் டிஜிட்டல் இந்தியா மாநாடு' நடைபெற்றது. நடுவண் தகவல்தொடர்பு, மின்னணுவியல் மற்றும் தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. அடுத்த 500 நாட்களில் புதிதாக 25,000 கோபுரங்கள் அமைக்க ₹26,000 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக நடுவண் அமைச்சர் அறிவித்தார்.

**9. இந்திய இராணுவமும் இந்திய வான்படையும் இணைந்து கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'ககன் ஸ்ட்ரைக்' என்ற கூட்டுப்பயிற்சியை நடத்தின?**



அ. ஆந்திர பிரதேசம்

ஆ. உத்தரகாண்ட்

இ. சிக்கிம்

**ஈ. பஞ்சாப் ☑**

✓ இந்திய இராணுவத்தின் கர்கா படையணியும் இந்திய வான்படையும் பஞ்சாபின் பல பகுதிகளில் நான்கு நாட்களாக 'ககன் ஸ்ட்ரைக்' என்ற கூட்டுப்பயிற்சியை நடத்தின. இந்த நடவடிக்கையானது அப்பாச்சி 64E மற்றும் அதிநவீன இலகுரக உலங்கு வானூர்தி WSI ஆகியவை ஆற்றல்வாய்ந்த ஆயுத விநியோகிகளாக அங்கீகரிக்கப்பட்டதாக இராணுவம் அறிவித்தது. இந்தப் பயிற்சியின்போது தரைப்படைகளுக்கு ஆதரவாக தாக்குதல் உலங்கு வானூர்திகள் வான்வழிப்படையாகப் பயன்படுத்தப்பட்டன.

**10. சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுறுவதாக அறிவித்த ஆரோன் பிஞ்ச் சார்ந்த நாடு எது?**



அ. இங்கிலாந்து

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. நியூசிலாந்து

✓ ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் ஆரோன் பிஞ்ச் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். பிஞ்ச் 145 ஒருநாள் போட்டிகளில் ஆஸ்திரேலியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். இந்த ஆண்டு ICC T20 உலகக்கோப்பையில் ஆஸ்திரேலிய அணிக்கான அணித்தலைவராக பிஞ்ச் தொடர்ந்து இருப்பார். அவரது தொழிற்முறை வாழ்வில் 17 சதங்களுடன் 5400 இரன்களுக்கு மேல் எடுத்துள்ளார். 2013இல் இலங்கைக்கு எதிராக அறிமுகமான அவர், ஸ்காட்லாந்துக்கு எதிராக தனது முதல் சதத்தை அடித்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் 30 ஜிகாவாட் மின்னுற்பத்திக்கான காற்றுவளம் உள்ளது**

நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே வடலிவிளையில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவிலேயே அதிக மின்னுற்பத்தி திறன்கொண்ட காற்றாலையை நடுவணரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை, இரசாயனம் மற்றும் உரங்கள் துறை இணையமைச்சர் பகவந்த் கூபா பார்வையிட்டார்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த WEG நிறுவனம் ₹88 கோடி மதிப்பில் இந்தக் காற்றாலை டர்பைனை அமைத்துள்ளது. இதன்மூலம் 4.2 MW மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் காற்றாலை டர்பைனைப் பார்வையிட்டு ஆய்வுசெய்த நடுவணமைச்சர், அந்த நிறுவன அதிகாரிகளிடம் அதிக மின்னுற்பத்தி திறன்கொண்ட காற்றாலை செயல்பாடு, உற்பத்தி செலவு உள்ளிட்ட விபரங்களைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், எதிர்காலத்தில் 7 MW மின்சார உற்பத்தித்திறன் கொண்ட டர்பைனைத் தயாரிக்கவுள்ளோம். இந்திய கடலோரப்பகுதியில் 70 GW காற்றுவளம் உள்ளது. குஜராத்திலும், தமிழ்நாட்டிலும் 35 GW காற்று வளம் உள்ளது. குறிப்பாக இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் சுமார் 30 GW காற்றுவளம் உள்ளது. இங்கு இரண்டு காற்றாலை டர்பைன் நிறுவ உள்ளோம். இதன் மூலம் ராமேஸ்வரம் நகர் முழுவதும் மின்சாரத்தை விநியோகிக்க முடியும் என்றார். 2030–ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் மரபுசாரா எரிசக்திமூலம் 500 GW மின்னுற்பத்தி செய்ய பிரதமர் இலக்கு நிர்ணயித்துள்ளார். இதற்கு போதுமான அளவு வாய்ப்பும் வளமும் இந்தியாவில் உள்ளது. சூரிய சக்தி மூலம் 300 GW மின்சாரமும் பிற மரபு சாரா எரிசக்திமூலம் 200 GW மின்சாரமும் உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

---

**2. சுவீடன் விஞ்ஞானிக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு**

மனித சமூகத்தின் பரிணாமம் தொடர்பான ஆராய்ச்சிக்காக ஸ்வீடன் விஞ்ஞானி ஸ்வான்டே பாபோவுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிதர்களின் பரிணாமம்குறித்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்ட பாபோ, நவீன மனிதர்களின் மரபணுக்களின் தொகுதியை (ஜீனோம்), மனிதர்களின் முந்தைய பரிணாமமான நியாண்டர்தால், டெனிசோவன் ஆகியவற்றின் மரபணுத்தொகுதிகளுடன் ஒப்பிட்டு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். நியாண்டர்தால், டெனிசோவன் ஆகிய இனக்குழுக்கள் இணைந்தே மனித இனம் உருவானதாகத் தனது ஆய்வின் மூலமாக அவர் கண்டறிந்து தெரிவித்தார்.

முந்தைய இனக்குழுக்களில் இருந்து மனிதர்களின் இனக்குழு தனித்துவமானது என்ற அவரது கண்டுபிடிப்பால் மனிதர்களின் நோயெதிர்ப்பு மண்டலம் குறித்து அதிக தகவல்கள் தெரியவந்ததாக நோபல் தேர்வுக்குழு தெரிவித்து உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் நியாண்டர்தாலின் எலும்புகள் கண்டறியப்பட்டு மரபணு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஆராய்ச்சியின்மூலமாக மனிதர்களின் பரிணாம வளர்ச்சிகுறித்து தெரியவந்ததாகத் தேர்வுக்குழு தெரிவித்தது. பாபோ குழுவினரின் கண்டுபிடிப்பானது கரோனா உள்ளிட்ட நோய்த்தொற்றுகளுக்கு எதிராக மனிதர்களின் மரபணு எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் அறிந்துகொள்ள உதவியதாகக்குழு தெரிவித்தது.

நோபல் பரிசு பெற்றுள்ள ஸ்வான்டே பாபோவுக்கு சுமார் 9 லட்சம் அமெரிக்க டாலர் பரிசுத்தொகையாக வழங்கப்பட உள்ளது. வரும் டிச.10–ஆம் தேதி நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் நோபல் பதக்கத்துடன் பரிசுத்தொகை அவருக்கு வழங்கப்படவுள்ளது.

---


**1. 2022ஆம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு 3 அறிவியலாளர்களால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. அம்மூவரும் சார்ந்த துறை எது?**

அ. அணு இயற்பியல்

**ஆ. குவாண்டம் இயக்கவியல் ☑**

இ. அணு அறிவியல்

ஈ. விண்வெளி அறிவியல்



✓ 2022ஆம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு, குவாண்டம் இயக்கவியலில் பணியாற்றியதற்காக, அலைன் ஆஸ்பெக்ட், ஜான் எப் கிளாசர் மற்றும் அன்டன் ஜெயிலிங்கர் ஆகிய மூன்று அறிவியலாளர்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இந்த 3 அறிவியலாளர்களும் சிக்கிய குவாண்டம் நிலைகளில் தொடர்ச்சியான சோதனைகளை நடத்தினர்; அந்தச் சோதனையில் இரண்டு தனித்தனி துகள்கள் ஓர் அலகுபோல செயல்படுகின்றன. அவற்றின் விளைவுகள் குவாண்டம் கணினிகள், குவாண்டம் வலையமைப்புகள் மற்றும் பாதுகாப்பான குவாண்டம் மறைகுறியாக்கப்பட்ட தகவல்தொடர்பு ஆகிய துறைகளில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

**2. இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, கீழ்க்காணும் எந்நகரத்தில், பெண் தொழில்முனைவோருக்கான துளிர் நிறுவல்கள் தளமான, 'herSTART'ஐத் தொடங்கினார்?**

அ. மும்பை

**ஆ. அகமதாபாத் ☑**

இ. வாரணாசி

ஈ. லக்னோ

✓ இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குஜராத் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட பெண் தொழில் முனைவோருக்கான துளிர் நிறுவல்கள் தளமான, 'herSTART'ஐ அகமதாபாத்தில் வைத்து தொடங்கி வைத்தார். பெண் தொழில்முனைவோருக்காக அர்ப்பணிக்கப்பட்ட இத்தளம், பெண் தொழில்முனைவோரின் புதுமை மற்றும் துளிர் நிறுவல்கள் முனைவுகளை ஊக்குவிக்கும். மேலும், பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் பெண் தொழில்முனைவோரை இது இணைக்கும்.

**3. அகதிகளுக்கான ஐநா உயராணையரால் வழங்கப்பட்ட 2022 – நான்சென் விருதைப் பெற்றவர் யார்?**

அ. ஜி ஜின்பிங்

**ஆ. ஏஞ்சலா மேர்க்கல் ☑**

இ. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி

ஈ. அந்தோணி அல்பானீஸ்




✓ அகதிகளுக்கான ஐநா உயராணையரகத்தால் வழங்கப்பட்ட நான்சென் விருதைப் பெறுபவராக முன்னாள் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் அறிவிக்கப்பட்டுள்ளார். பதினாறு ஆண்டுகளாக தனது நாட்டை வழிநடத்திய முன்னாள் அறிவியலாளரான அவர், 1.2 மில்லியனுக்கும் அதிகமான அகதிகள் மற்றும் சிரிய மோதலின்போது வன்முறையில் இருந்து தப்பியோடிய புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு புகலிடம் வழங்கியதற்காக இவ்விருதைப்பெற்றார்.

**4. 'பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY)'ஐச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

அ. நிதி அமைச்சகம் **ஆ. திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம் ☑**

இ. கல்வி அமைச்சகம் ஈ. MSME அமைச்சகம்

कौशल विकास और उद्यमशीलता मंत्रालय
MINISTRY OF SKILL DEVELOPMENT AND ENTREPRENEURSHIP
सत्यमेव जयते

✓ பர்த்ருஹரி மஹ்தாப் தலைமையிலான தொழிலாளர், ஜவுளி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான நிலைக்குழு, 'பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) அமலாக்கம்' குறித்த தனது அறிக்கையைச்சமர்ப்பித்தது. இது திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. அவ்வறிக்கையின்படி, PMKVY 3.0இன்கீழ், 2021–22இல், 72 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. PMKVY 3.0இன்கீழ், சுமார் நான்கு இலட்சம் விண்ணப்பதாரர்களில், 8% பேர் மட்டுமே பணி பெற்றுள்ளனர். PMKVY 1.0, 2.0 மற்றும் 3.0 இன்போது, மொத்த பதிவு செய்தவர்களில் சுமார் 20% பேர் பயிற்சித்திட்டத்திலிருந்து வெளியேறினர்.

**5. அண்மைய அரசாங்கத் தரவுகளின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு இடையிலான குழந்தை இறப்பு விகிதத்தில் அதிக இடைவெளியைக் கொண்டுள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

✓ மாதிரி பதிவுமுறை புள்ளிவிவர அறிக்கை – 2020இன்படி, பெண் குழந்தை இறப்பு விகிதம் 41 உடன் ஒப்பிடும்போது ஆண் குழந்தை இறப்பு விகிதம் 35 என்ற வகையில், சத்தீஸ்கர் மாநிலம் 2020இல் சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு இடையிலான குழந்தை இறப்பு விகிதத்தில் அதிக இடைவெளியைக் கொண்டுள்ள மாநிலம் ஆனது. இந்தியாவில் ஆண் மற்றும் பெண் குழந்தை இறப்பு விகிதம் (IMR) 2020இல் சமமாக உள்ளது. குழந்தை இறப்பு விகிதம் என்பது ஒவ்வொரு 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கும் நிகழும் குழந்தை இறப்புகளின் எண்ணிக்கையாகும்.

✓ கிராமப்புற இந்தியாவில், இடைவெளி குறைந்திருந்தாலும், ஆண் IMRஐவிட பெண் IMR சற்றதிகமாகவே உள்ளது. நகர்ப்புற இந்தியாவில், 2020ஆம் ஆண்டளவில் பெண்களின் IMR ஆண்களைவிட குறைவாக உள்ளது.

**6. பொது சேவை மையத்தின் (CSC) SPVஇன் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. K சுப்ரமணியன்

**ஆ. சஞ்சை குமார் இராகேஷ் ☑**

இ. K V காமத்

ஈ. சாரதா குமார் ஹோதா

CSC
e-GOVERNANCE SERVICES INDIA LIMITED

✓ பொது சேவை மையத்தின் (CSC) சிறப்பு நோக்க வாகனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சஞ்சை குமார் ராகேஷ், நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். நடுவண் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தில் நடைபெற்ற CSCஇன் வாரியக்கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. சஞ்சை குமார் ராகேஷ் இஆப–இலிருந்து விருப்ப ஓய்வுபெற்றபிறகு கடந்த 2020ஆம் ஆண்டில் CSC SPVஇன் CEOஆக பொறுப்பேற்றார். திரிபுராவின் கூடுதல் தலைமைச் செயலாளராகவும், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இணைச் செயலாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

**7. ஜெனரல் பிபின் இராவத்தின் பெயரிடப்பட்ட கிபித்து இராணுவப்படை அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ. உத்தரகாண்ட் **ஆ. அருணாச்சல பிரதேசம் ☑**

இ. லடாக் ஈ. பஞ்சாப்

✓ அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் லோகித் பள்ளத்தாக்கின் கரையிலுள்ள உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த கிபித்து இராணுவப்படைக்கு இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைத்தளபதி ஜெனரல் பிபின் இராவத்தின் பெயர் சூட்டப்பட்டது. இது மெய்யெல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் அமைந்துள்ளது. ஜெனரல் இராவத் 1999–2000 வரை கிபித்துவில் தனது பட்டாலியன் கோர்க்கா ரைபிள்களுக்கு தலைமைதாங்கினார் மற்றும் அப்பகுதியில் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதில் பங்களித்தார்.

**8. 'சர்வதேச PCOS விழிப்புணர்வு மாதமாக' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?**

அ. ஆகஸ்ட்

**ஆ. செப்டம்பர் ☑**

இ. அக்டோபர்

ஈ. நவம்பர்




✓ செப்டம்பர் மாதம் சர்வதேச PCOS விழிப்புணர்வு மாதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பாலிசிஸ்டிக் ஓவரி சிண்ட்ரோம் (சினைப்பை நோய்க்குறி PCOS) என்பது பெண்களுக்கு ஏற்படும் ஒரு பொதுவான ஹார்மோன் கோளாறாகும்; இது பெண் மலட்டுத்தன்மைக்கும் ஒரு காரணமாக அமைகிறது. PCOS மரபணு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் கலவையால் ஏற்படுகிறது. உலகளவில், பத்தில் 3 முதல் 4 பெண்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

**9. 2022 – உலக முதலுதவி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Leaving No one Behind

**ஆ. Lifelong First Aid ☑**

இ. Learning First Aid

ஈ. First Aid; Second Life




✓ உலக முதலுதவி நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் வரும் இரண்டாவது சனிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2022), உலக முதலுதவி நாள் 2022 செப்டம்பர்.10 அன்று வந்தது. "Lifelong First Aid" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். முதலுதவியின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்கும், விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றுவதுகுறித்து உலக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

**10. 'இராச மிளகாய்க்கு' புகழ்பெற்ற எந்த இந்திய மாநிலம், 'மிர்ச்சி திருவிழாவை' (மிளகாய்த்திருவிழா) நடத்தியது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. நாகாலாந்து ☑**

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. ஹரியானா



✓ நாகாலாந்து மாநிலம், 'நாகா மிர்ச்சா' என்றும் அழைக்கப்படும் 'இராச மிளகாய்க்குப்' புகழ்பெற்றதாகும். இது உலகின் காரமான மிளகாய் வகைகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. தோட்டக்கலைத் துறையின் நிதியுதவியுடன் செய்யாமா கிராமச்சபையால் முதன்முதலில், 'நாகா மிர்ச்சா' திருவிழா அண்மையில் நடத்தப்பட்டது. 'நாகா இராச மிளகாய்' உட்பட பல்வேறு வகையான பயிர்களுக்கு செய்யாமா கிராமம் புகழ்பெற்றதாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு**

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பிரெஞ்சு எழுத்தாளர் ஆனி எர்னாக்ஸுக்கு (Annie Ernaux) அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. வேதியியல்: மூவருக்கு நோபல்

மருந்துகளை உருவாக்க உதவியாக மூலக்கூறுகளை ஒன்றிணைக்கும் வழியை உருவாக்கியதற்காக கரோலின் ஆர் பெர்டோசி, மோர்டென் மெல்டல் மற்றும் பாரி ஷார்ப்லெஸ் ஆகிய மூவருக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதில் பெர்டோசி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர். ஷார்ப்லெஸ் கலிபோர்னியா ஸ்கிரிப்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர். மெல்டல் டென்மார்க்கின் கோபென்ஹெகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்.

புற்றுநோய்க்கான மருந்தை உருவாக்கவும், DNA வரைபடமாக்கல் மற்றும் ஒருகுறிப்பிட்ட நோக்கத்துக்கான மிகவும் பொருத்தமான பொருள்கலை உருவாக்குவதற்கும் பயன்படும் 'கிளிக் கெமிஸ்ட்ரி' மற்றும் உயிரி ஆர்த்தோகனல் எதிர்வினைகள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டதற்காக இந்த நோபல் பரிசு அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளது.

இவர்களில் ஷார்ப்லெஸ் ஏற்கெனவே கடந்த 2001ஆம் ஆண்டும் நோபல் பரிசை வென்றுள்ளார். அதன்மூலமாக, நோபல் பரிசை இரண்டு முறை வென்ற 5ஆவது நபர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். மனிதர்களின் பரிணாமம் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்ட சுவீடன் விஞ்ஞானியான சுவான்டெ பாபோவுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

**இயற்பியலுக்கான நோபல் பரிசு:** குவாண்டம் தகவல் அறிவியல் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்ட பிரான்ஸைச் சேர்ந்த அலைன் ஆஸ்பெக்ட், அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் கிளாசெர், ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஆன்டன் சீலிங்கெர் ஆகிய மூவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

---

3. புதிய 'பாரத் சீரிஸ்' வாகனப்பதிவு நடைமுறை: 24 மாநிலங்களில் நடைமுறை

நாடு முழுவதும் எந்தவித தடையுமின்றி சொந்த வாகனத்தில் பயணம் செய்ய வசதியாக அறிமுகம் செய்யப்பட்ட புதிய 'பாரத் சீரிஸ்' வாகனப்பதிவு நடைமுறை 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்ப –ட்டிருப்பது தெரியவந்துள்ளது.

பெங்களூரில் கடந்த மாதம் நடைபெற்ற போக்குவரத்து மேம்பாட்டு கவுன்சிலின் 41ஆவது ஆண்டு கூட்டத்தின் தீர்மானம்மூலமாக இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

அதில் மேலும் கூறியிருப்பதாவது: ஒருவர் தனது சொந்த வாகனத்தில் ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்துக்கு அல்லது யூனியன் பிரதேசத்துக்கு குடிபெயரும்போதும், அந்த வாகனத்தை மறுபதிவு செய்யவேண்டும். இதனால் பல்வேறு சிக்கல்களை வாகன ஓட்டிகள் சந்தித்து வந்தனர். வாகன உரிமையாளர்களுக்கு ஏற்படும் இந்த சிரமத்தைப் போக்கும் வகையில், புதிய வாகனப்பதிவு நடைமுறை தொடர்பான அறிவிக்கையை நடுவணரசு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிட்டது.

இந்தப் புதிய 'பாரத் சீரிஸ்' வாகனப்பதிவு நடைமுறை மூலமாக, நாடு முழுவதும் சொந்த வாகனத்தில் பயணிப்போர் அல்லது சுற்றுலா வாகனங்கள் எந்தவொரு சோதனைச் சாவடியிலும் நிறுத்தப்படமாட்டாது. மேலும், மாநில மற்றும் உள்ளூர் நடைமுறைகள் அடிப்படையிலான வாகன வரிகளைச்செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

இந்தப் புதிய நடைமுறையின்கீழ் 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 20,000–க்கும் அதிகமான வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும், வாகனங்களுக்கான 30,000 பர்மிட்டுகள் மற்றும் 2.75 இலட்சம் அங்கீகாரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

வாகன வேகம் அதிகரிப்பு: மேலும், தேசிய விரைவுச் சாலைகளில் வாகனங்களின் இயக்க வேகத்தை மணிக்கு 140 கிமீ என்ற அளவுக்கு உயர்த்த நடுவண் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் திட்டமிட்டிருப்பதாக அந்தத்துறையின் அமைச்சர் நிதின் கட்கரி அண்மையில் கூறியிருந்தார்.

மேலும், நான்கு வழி தேசிய நெடுஞ்சாலைகளில் வாகன இயக்க வேகம் குறைந்தபட்சம் மணிக்கு 100 கிமீ என்ற அளவிலும், இரண்டு வழி தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்களின் வேகம் மணிக்கு 80 கிமீ முதல் 75 கிமீ வரை இருக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

**1. அண்மையில் சைபர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட டெலிகாம் ஜெயண்ட் ஆப்டஸ் சார்ந்த நாடு எது?**

அ. கனடா

ஆ. அமெரிக்கா

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. ரஷ்யா




✓ அண்மைய சைபர் தாக்குதலில் 1.2 மில்லியன் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அடையாள வடிவங்கள் திருடப்பட்டதாக ஆஸ்திரேலிய தொலைத்தொடர்பு நிறுவனமான ஆப்டஸ் தெரிவித்துள்ளது. கனடா கண்ட மிகப்பெரிய இணைய மீறல்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இந்த இணைய மீறல் 10 மில்லியன் வாடிக்கையாளர்களை பாதிப்புக்குள்ளாக்கியது; அது ஆஸ்திரேலியாவின் மக்கள்தொகையில் 40 சதவீதத்துக்குச் சமமாகும். இம்மீறலுக்குப்பிறகு, தொலைத்தொடர்பு சட்டங்களில் மாற்றங்களை நடுவணரசு வெளியிட்டுள்ளது.

**2. ₹2,000 வரையிலான பரிவர்த்தனைகளுக்கு UPIஇல் RuPay கடனட்டை பயன்படுத்துவதற்கு விதிக்கப்படும் கட்டண சதவீதம் எவ்வளவு?**

அ. 0.5%

ஆ. 2%

இ. 5%

**ஈ. கட்டணம் இல்லை ☑**

✓ ₹2,000 வரையிலான பரிவர்த்தனைகளுக்கு யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸில் (யுபிஐ) ரூபே கடன் அட்டை பயன்படுத்துவதற்கு கட்டணம் ஏதும் விதிக்கப்படாது என்று இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (என்பிசிஐ) தெளிவுபடுத்தியுள்ளது. Nil Merchant Discount Rate (MDR) ஆனது இந்த வகைக்கு ₹2,000க்கும் குறைவான பணப் பரிமாற்றத்துக்குப் பொருந்தும். செப்டம்பரில், RBI ஆளுநர் UPI வலையமைப்பில் ரூபே கடன் அட்டை பயன்பாட்டை அறிமுகப்படுத்தினார்.

**3. உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் (2022–23) இந்தியாவின் GDP வளர்ச்சிக் கணிப்பு என்ன?**

அ. 6.2%

**ஆ. 6.5% ☑**

இ. 7.0%

ஈ. 7.2%

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

✓ உலக வங்கி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை நடப்பு நிதியாண்டில் (2022–23) 6.5%ஆகக் குறைத்தது. அதன் முந்தைய ஜூன் மாத மதிப்பீட்டில் 7.5% என அது அறிவிக்கப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியும் பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ரெப்போ விகிதத்தை 50 அடிப்படைப்புள்ளிகளால் 5.9 சதவீதமாக உயர்த்திய பிறகு, முந்தைய மதிப்பீடான 7.2%இலிருந்து 7%ஆகக் குறைத்தது. மேலும் UNCTAD இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஆனது 2021இல் 8.2%ஆக இருந்து இந்த ஆண்டு 5.7%ஆக குறையும் என்று கணித்துள்ளது.

**4. 2022 – இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற எழுத்தாளர் அன்னி எர்னாக்ஸ் சார்ந்த நாடு எது?**

அ. அமெரிக்கா ஆ. ஆஸ்திரேலியா

**இ. பிரான்ஸ் ☑** ஈ. ஜெர்மனி



✓ பிரெஞ்சு எழுத்தாளர் அன்னி எர்னாக்ஸ் 2022ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்றவராக அறிவிக்கப்பட்டுள்ளார். 82 வயதான அன்னி எர்னாக்ஸ் வர்க்கம் மற்றும் பாலினம் குறித்த அவரது தனிப்பட்ட அனுபவத்தை வெளிப்படுத்திய அவரது புதினங்களுக்குப் பெயர்பெற்றவர். அன்னி எர்னாக்ஸ் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் பல தசாப்தங்களாக பிரான்சில் பள்ளிப் பாடநூல்களாக உள்ளன. இந்த ஆண்டு இலக்கியப் பரிசுக்கான போட்டியாளர்களில் ஒருவராக, இந்தியாவில் பிறந்த எழுத்தாளரான சல்மான் ருஷ்டியும் இருந்தார்.

**5. 2022இல் டெல் அவிவ் ஓபன் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?**



அ. ரபேல் நடால்

ஆ. ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ்

இ. ரோஜர் பெடரர்

**ஈ. நோவக் ஜோகோவிச் ☑**

✓ 2022இல் இஸ்ரேலில் நடைபெற்ற டெல் அவிவ் ஓபன் பட்டத்தை மூத்த டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் வென்றார். இது டென்னிஸில் மிகப்பெரிய பரிசாகக் கருதப்படுகிறது. 35 வயதான ஜோகோவிச், இறுதிப்போட்டியில் குரோஷியாவின் மரின் சிலிக்கை 6–3, 6–4 என்ற செட்கணக்கில் வீழ்த்தி ஜூலை மாத விம்பிள்டனுக்குப்பிறகு தனது முதல் பட்டத்தை வென்றார். மூன்றடி உயரமுள்ள கோப்பை அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

**6. 2022இல் நடைபெற்ற ஆறாவது ஆசிய கோப்பைப்போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற நாடு எது?**



அ. இந்தியா

ஆ. பாகிஸ்தான்

**இ. இலங்கை ☑**

ஈ. வங்காளதேசம்

✓ துபாயில் நடைபெற்ற ஆசிய கோப்பைக்கான இறுதிப்போட்டியில் பாகிஸ்தானை 23 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இலங்கை அணி தனது ஆறாவது கோப்பையை கைப்பற்றியது. இலங்கை 20 ஓவர்களில் 170–6 ரன்கள் எடுத்தது, பானுகா ராஜபக்சே 45 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 71 ரன்கள் எடுத்தார். இலங்கை கிரிக்கெட் அணிக்கு முன்னாள் இங்கிலாந்து பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் பயிற்சியாளராக உள்ளார்.

**7. IBM குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்த இந்தியாவின் முதல் நிறுவனம் எது?**

அ. ஐஐடி பாம்பே ஆ. ஐஐஎம் அகமதாபாத்

இ. ஐஐஎம் பெங்களூரு **ஈ. ஐஐடி மெட்ராஸ் ☑**

✓ இந்திய தொழில்நுட்பக்கழகம் – மெட்ராஸ் (IIT–M) ஆனது நியூயார்க்கைச் சார்ந்த IBM குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்த முதல் இந்திய கல்வி நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. IIT–M மற்றும் IBM இடையேயான இந்த ஒத்துழைப்பு, IBM ரிசர்ச் இந்தியா நிறுவனத்தின் தொழிற்துறை ஆதரவுடன் பயன்பாட்டு குவாண்டம் கம்ப்யூட்டிங் துறைசார்ந்த ஆராய்ச்சியில் ஐஐடி மெட்ராஸின் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயனளிக்கும்.

**8. புற்றுநோய் இறப்புகளைக் குறைப்பதற்காக, 'ARPA–H (நலத்திற்கான மேம்பட்ட ஆராய்ச்சித் திட்ட முகமைகள்)' என்பதை தொடங்கிய நாடு எது?**



அ. ஜப்பான்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரான்ஸ்

✓ அமெரிக்காவில் புற்றுநோய் இறப்புகளை குறைக்கும் நோக்கில் ஒரு இலட்சிய திட்டத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்திற்காக, 'ARPA–H, நலத்திற்கான மேம்பட்ட ஆராய்ச்சித்திட்ட முகமைகள்' என்ற புதிய முகமை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டில் இதய நோய்க்கு அடுத்தபடியாக அதிக இறப்புகளுக்கு காரணம் புற்றுநோயாகும். ARPA–H ஆனது புற்றுநோய், அல்சைமர், நீரழிவு மற்றும் பிறநோய்கள் உள்ளிட்ட நோய்களைத் தடுப்பது, கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. இந்தியாவில், 'ஹிந்தி திவாஸ் அல்லது தேசிய ஹிந்தி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ. செப்டம்பர்.14

ஆ. செப்டம்பர்.12

**இ. செப்டம்பர்.14 ☑**

ஈ. செப்டம்பர்.18

✓ 'ஹிந்தி திவாஸ் அல்லது தேசிய ஹிந்தி நாளானது' 1949 செப்.14 அன்று அரசியலமைப்பு அவையால் அதிகாரப்பூர்வ மொழியாக (தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டது) ஹிந்தி ஏற்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்.14 அன்று இந்த நாள் கொண்டாடப்படுகிறது. உலக ஹிந்தி நாள் 2020 ஜனவரி.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் 1975 ஜன.10 அன்று நாக்பூரில் நடந்த முதல் உலக ஹிந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

**10. அண்மையில் ஜப்பான் மற்றும் சீனாவைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?**



**அ. முய்ஃபா ☑**

ஆ. ரீட்டா

இ. பங்கா

ஈ. டிஃபானி

✓ ஜப்பான் வானிலை ஆய்வுமையத்தின்படி, தைவான் அருகேயுள்ள இஷிகாகி தீவை, 'முய்ஃபா' சூறாவளி தாக்கியது. ஜப்பானின் தென்தீவுகளை அந்தச் சூறாவளி நெருங்கியது. 'முய்ஃபா' சூறாவளியானது ஜப்பானின் ஒகினாவாவில் உள்ள தீவுகளில் பலத்த மழையையும் காற்றையும் கொண்டுவந்தது. இந்தச் சூறாவளி நெருங்கிவரும் நிலையில் சீனாவும் அவசர நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நில ஆவணங்களை 22 மொழிகளில் மொழிபெயர்க்க நடுவணரசு திட்டம்!**

நாடு முழுவதும் நில ஆவணங்களை ஆங்கிலம், ஹிந்தி உள்பட 22 மாநில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த நடுவணரசு திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து நடுவணரசின் நில வளத்துறை இணைச்செயலாளர் கூறியதாவது:

நாடு முழுவதிலும் உள்ள பலர் நில ஆவணங்களில் மொழியியல் தடைகளை எதிர்கொள்கின்றனர், இதனை போக்கும் விதமாக நடுவணரசு, இப்போது நில ஆவணங்களில் மொழிபெயர்ப்பு முறையைக் கொண்டு வருவதன் மூலம் தீர்க்க திட்டமிட்டுள்ளது.

அதாவது, நாட்டில் உள்ள அந்தந்த மாநில மொழிகளில் எழுதப்படும் நில ஆவணங்களை ஆங்கிலம், ஹிந்தி உள்பட 22 மாநில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது நடுவணரசு.

இந்தப்புதிய திட்டத்தை சோதனை முறையாக தமிழ்நாடு, புதுச்சேரி, மகாராஷ்டிரம், குஜராத், உத்தர பிரதேசம், பிகார் திரிபுரா மற்றும் ஜம்மு, காஷ்மீர் ஆகிய 8 மாநிலங்களில் தொடங்கவுள்ளது.

**1. 'DAKSH' என்ற புதிய 'SupTech முனைவை' அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ. SEBI

ஈ. NABARD




✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ், 'DAKSH' என்ற புதிய சூப்டெக் முனைவைத் தொடங்கினார். ரிசர்வ் வங்கியின் அதிநவீன மேற்பார்வை கண்காணிப்பு அமைப்பான இது, மேற்பார்வை செயல்முறைகளை மேலும் வலுவாக மாற்றுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. DAKSH என்பது இணைய அடிப்படையிலான ஆதி முதல் அந்தம் வரையிலான செயற்பாட்டை மேற்கொள்ளும் ஒரு பணிப்பாய்வு பயன்பாடாகும். இதன்மூலம் வங்கிகள், NBFC–கள் போன்ற ஏற்கனவே மேற்பார்வையிலுள்ள நிறுவனங்களில் இணக்க கலாச்சாரத்தை மேம்படுத்துதற்கு தேவையானவற்றை RBI கண்காணிக்கும்.

**2. சிவிங்கிகள் விடப்பட்ட குனோ தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. மத்திய பிரதேசம் ☑**

ஆ. குஜராத்

இ. இராஜஸ்தான்

ஈ. மகாராஷ்டிரா



✓ மத்திய பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள குனோ தேசியப்பூங்கா மற்றும் பிற அறிவிக்கப்பட்ட பகுதிகளில் விடப்பட்ட சிவிங்கிப்புலிகளைக் கண்காணிக்க ஒன்பதுபேர்கொண்ட பணிக்குழுவை நடுவணரசு அமைத்துள்ளது. தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் சிவிங்கிப்புலிகளுக்கான இந்த அதிரடிப்படையின் பணிக்கு உதவும். இது ஈராண்டு காலத்திற்கு அமலில் இருக்கும். சிவிங்கிப்புலிகளின் சுகாதார நிலை, தனிமைப்படுத்தல் மற்றும் அந்தப் பகுதியின் பாதுகாப்பு நிலை மற்றும் குனோ தேசியப்பூங்காவின் வாழ்விடத்தைச் சிவிங்கிப்புலிகள் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றை அந்தக்குழு கண்காணிக்கும்.

**3. 'இணையவழி சூதாட்டத்தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம், 2022' நடைமுறைக்கு வந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. ஒடிசா

ஈ. தெலுங்கானா



✓ தமிழ்நாட்டில் இணையவழி சூதாட்டத்தைத் தடைசெய்யவும், இணையவழி விளையாட்டுக்களைக் கட்டுப்படுத்தவும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் R N இரவி ஓர் அவசரச்சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இதன்மூலம், தமிழ்நாடு 'இணையவழி சூதாட்டத்தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம், 2022' அமலுக்கு வந்தது. சட்ட விதிமுறைகளின்கீழ், உள்ளூர் இணையவழி விளையாட்டுக்களை வழங்குவோர்கள் பதிவு செய்த பின்னரே சேவையை வழங்கவியலும்; அந்தப்பதிவு மூன்றாண்டுகளுக்குச் செல்லுபடியாகும். பணஞ்செலுத்தி விளையாடப்படும் எந்த ஒரு இணையவழி விளையாட்டு ரீதியான சேவையையும் இந்தச் சட்டம் அனுமதிக்காது.

**4. 'இரத்ததான் அம்ரித் மகோத்சவத்தின்'கீழ், எந்தச்செயலிமூலம் தன்னார்வ இரத்ததானம் தொடங்கப்பட்டுள்ளது?**

**அ. ஆரோக்ய சேது ☑**

ஆ. டிஜிட்டல் இலாக்கர்

இ. மைகௌ

ஈ. ஆயுஷ்மான் பாரத்

✓ செப்.17 முதல் அக்.1 வரை நாடு முழுவதும் திட்டமிடப்பட்டுள்ள பிரம்மாண்ட தன்னார்வ இரத்ததான இயக்கத்தின் ஒருபகுதியாக ஆரோக்ய சேது செயலியிலும் இ-ரத்தகோஷ் இணையதளத்திலும் 'இரத்ததான் அம்ரித் மகோத்சவத்-திற்கான' பதிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. அக்.1 அன்று தேசிய தன்னார்வ இரத்த தான நாள் அனுசரிக்கப்படுகிறது. தன்னார்வமாக இரத்ததானம் செய்பவர்களின் களஞ்சியத்தை உருவாக்குவதே இந்த நாளின் முக்கிய நோக்கமாம்.

**5. 'GEF சிறுமானியத் திட்டத்துடன்' தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

**ஆ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் ☑**

இ. நிதியமைச்சகம்

ஈ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

✓ 'உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (Global Environment Facility) சிறுமானியத் திட்டம்' என்பது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனம் (TERI) ஆகியவற்றால் கூட்டாகச் செயல்படுத்தப்படுகிறது. இது உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் அதே வேளையில் சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிதியுதவிமூலம் பல்லுயிர்ப்பெருக்கம், பருவநிலை மாற்றம் மற்றும் நிலச்சீரழிவு ஆகியவற்றில் பணியாற்றுவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. பன்னாட்டு பாதுகாப்புப்பயிற்சியான, 'ககாடு-2022'ஐ நடத்தும் நாடு எது?**

அ. இந்தியா

ஆ. பாகிஸ்தான்

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. வங்காளதேசம்



✓ 'ககாடு-2022' என்னும் பயிற்சியானது ஆஸ்திரேலிய நாட்டின் டார்வினில் இராயல் ஆஸ்திரேலிய கடற்படையால் அதிகாரப்பூர்வமாக நடத்தப்படுகிறது. இந்திய கடற்படையானது தனது 14 கடற்படைக் கப்பல்களுடன் இப்பயிற்சியில் இணைந்தது. இப்பன்னாட்டுப் பயிற்சியில் பங்கேற்க இந்தியக் கடற்படையின் INS சாத்புரா மற்றும் கடல்சார் ரோந்து விமானம் டார்வின் சென்றடைந்தது. இரண்டு வார காலம் நீளும் இந்தப் பயிற்சி, துறைமுகத்திலும் கடற்புறத்திலும் நடைபெறும்.

**7. காசநோய் முக்த் பாரத் அபியான் திட்டத்தின்கீழ், 100,000 காசநோயாளிகளை தத்தெடுப்பதாக அறிவித்துள்ள தொழிற்சங்கம் எது?**

அ. CII

**ஆ. FICCI ☑**

இ. NASSCOM

ஈ. ASSOCHAM

✓ காசநோய் முக்த் பாரத் அபியானின்கீழ், 100,000 காசநோயாளிகளைத் தத்தெடுப்பதற்கு இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு (FICCI) சமீபத்தில் உறுதியளித்துள்ளது. இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு செப்.9 அன்று பிரதம மந்திரி காசநோய் முக்த் பாரத் அபியானைத் தொடங்கினார். காசநோயை ஒழிப்பதில் நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைப்பதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. எந்தப் புகழ்பெற்ற ஆளுமையைப் போற்றும் வகையில், செப்.15 அன்று இந்தியா தேசிய பொறியாளர் நாளைக் கொண்டாடுகிறது?**



அ. ஹோமி J பாபா

ஆ. Dr APJ அப்துல் கலாம்

**இ. M விஸ்வேஸ்வரையா ☑**

ஈ. சதீஷ் தவான்

✓ இந்தியாவின் தலைசிறந்த பொறியாளர்களுள் ஒருவரான M விஸ்வேஸ்வரையாவின் சாதனைகளை அங்கீகரித்து கௌரவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.15 அன்று 'தேசிய பொறியாளர்கள் நாளை' இந்தியா கொண்டாடுகிறது. இந்தியாவுடன், இலங்கை மற்றும் தான்சானியாவும் பொறியாளர்கள் நாளைக் கொண்டாடுகின்றன.

✓ விஸ்வேஸ்வரையா மைசூருவில் அமைந்துள்ள கிருஷ்ணராஜ சாகர அணையின் கட்டுமானத்தின் தலைமைப் பொறியாளராகவும், ஹைதராபாத் வெள்ளப்பாதுகாப்பு கட்டமைப்பின் முதன்மை வடிவமைப்பாளராகவும் இருந்தார். கடந்த 1955இல் அவருக்கு, 'பாரத இரத்னா' விருது வழங்கப்பட்டது. அவர் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின் (KCIE) 'நைட் கமாண்டர்' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**9. 'உலக மக்களாட்சி நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. செப்டம்பர்.10

**ஆ. செப்டம்பர்.15 ☑**

இ. செப்டம்பர்.20

ஈ. செப்டம்பர்.25

✓ உலக மக்களாட்சி நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.15 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2022), "The Importance of Media Freedom to Democracy, Peace, and Delivering on the Sustainable Development Goals" என்பது இந்த நாளுக்கானக் கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. மக்களாட்சி, அமைதி மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை வழங்குவதற்கு ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது. இது உலகின் மக்களாட்சியின் நிலையை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

**10. 2022ஆம் ஆண்டில், SAFF 17 வயதுக்குட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற நாடு எது?**




அ. வங்காளதேசம்

ஆ. நேபாளம்

**இ. இந்தியா ☑**

ஈ. இலங்கை

✓ கொழும்புவில் நடந்த இறுதிப்போட்டியில் நேபாளத்தை வீழ்த்தி இந்தியா 17 வயதுக்குட்பட்ட SAFF சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது. இந்த வெற்றியின்மூலம் இந்திய அணி நான்காவது முறையாக சாம்பியன் பட்டத்தை தக்க வைத்துக்கொண்டது. இப்போட்டியின் மிகவும் மதிப்புமிக்க வீரராக இந்திய கேப்டன் வன்லால்பேகா கிட் தேர்வு செய்யப்பட்டார்; அதே வேளையில் 16 வயதான சாகில் பூனியா சிறந்த கோல்கீப்பர் விருதை வென்றார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இணைய சூதாட்டத்துக்குத் தடை: அவசர சட்டத்துக்கு ஆளுநர் ஒப்புதல்**

தமிழ்நாட்டில் இணைய சூதாட்டங்களுக்குத் தடை விதிக்கும் அவசர சட்டத்துக்கு ஆளுநர் ஆர் என் இரவி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச்சட்டம் தமிழ்நாட்டின் அரசிதழில் கடந்த 3ஆம் தேதி வெளியிடப்பட்டு, அப்போது முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**அவசர சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்:**

தமிழ்நாட்டில் இணைய சூதாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பணம் அல்லது பணம் மதிப்பிலான பொருள்களைக்கொண்டு, இணைய வழியில் விளையாடப்படும் சூதாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, இணைய சூதாட்டங்கள் எதையும் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக அளிக்கவும் தடை விதிக்கப்படுகிறது.

**விளம்பரங்கள் கூடாது:** இணைய சூதாட்டங்கள் தொடர்பாக யாரும் எந்தவகை விளம்பரங்களையும் மின்னணு ஊடகம் உள்பட எந்த ஊடகங்களிலும் வெளியிடக்கூடாது. நேரடியாக/மறைமுகமாக இத்தகைய விளம்பரங்களைச் செய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இணைய சூதாட்ட நடவடிக்கைகளில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், இணைய பணப்பரிவர்த்தனை அமைப்புகள் ஈடுபடக்கூடாது.

**உள்ளூர் இணைய விளையாட்டுக்குச்சலுகை:** உள்ளூர் இணைய விளையாட்டுகளை வழங்கும் நிறுவனங்களுக்கென கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதன்படி, உள்ளூர் இணைய விளையாட்டுகளை முறைப்படுத்துவதற்கான ஆணையத்தில் உரிய சான்றிதழைப் பெற வேண்டும். இந்தச் சான்றிதழை வைத்துள்ள உள்ளூர் விளையாட்டு வழங்குநர்கள் மட்டுமே இணைய விளையாட்டுகளை வழங்க முடியும். இதற்கென உரிய அனுமதிச்சான்றைப் பெற ஆணையத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் ஆணையம், உரிய விசாரணைக்குப் பிறகு அனுமதிச்சான்றை அளிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.

**சூதாட்டம் நடத்தக்கூடாது:** உள்ளூரளவில் இணையவழி விளையாட்டுகளை வழங்கும் நிறுவனங்கள் சில முக்கிய அம்சங்களை கவனத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக, பணம் அல்லது வேறு வகை பொருள்களைக் கொண்டு சூதாட்ட அடிப்படையில் இணையவழி விளையாட்டுகளை நடத்தக்கூடாது. அனுமதிச்சான்றிதழ் 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். தவறான தகவல்களை அளித்தோ அல்லது மோசடியாகவோ அனுமதி சான்றிதழ்களைப் பெற்றிருந்தாலோ, உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படாவிட்டாலோ, அவசரச் சட்டத்திலுள்ள அம்சங்களுக்கு முரணாக இயங்கினாலோ சான்றிதழ் திரும்பப்பெறப்படும்.

இணைய வழி விளையாட்டுக்கான சான்றிதழைத் திரும்பப் பெறவோ அல்லது நிறுத்தி வைப்பதற்கு முன்பாகவோ பாதிக்கப்படும் நபருக்கு உரிய வாய்ப்பை வழங்கலாம். சான்றிதழ் தொடர்பான நிறுத்தம் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் பாதிக்கப்படும் நபர்கள் முறையீடு செய்யலாம். இதற்கான மேல் முறையீட்டு ஆணையத்தை அரசே அமைக்கும். இதன்மூலம், உள்ளூரளவிலான இணையவழி விளையாட்டுகளை தவிர்த்து, சூதாட்ட அடிப்படையிலான எந்த விளையாட்டுகளுக்கும் மாநிலத்தில் அனுமதியில்லை.

**தண்டனை என்ன?** பணம் அல்லது பணம் மதிப்பிலான பொருள்களைக் கொண்டு இணையவழி சூதாட்டத்தில் யாரேனும் ஈடுபட்டால் 3 மாதங்கள் வரை சிறை, ₹5,000 வரையிலான அபராதம் / இரண்டுமே தண்டனையாக விதிக்கப்படும். சூதாட்டத்தை மையப்படுத்தும் இணைய வழி விளையாட்டுகள் தொடர்பான விளம்பரங்களை யாரேனும் வெளியிட்டால் அவர்களுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை அல்லது ₹5 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

மீண்டும் இந்தத் தவறைச் செய்தால் மூன்றாண்டுகள் வரை சிறைத்தண்டனையும், ₹10 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். சூதாட்டத்துடன் இணைத்து இணையவழி விளையாட்டுகளை வழங்கும் நபர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ₹10 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டுமே சேர்த்து விதிக்கப்படும். மீண்டும் இதே தவறைச்செய்தால் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், அதிகபட்சம் ₹20 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். இதிலுள்ள குற்ற முகாந்திரங்களை நீதிமன்றங்கள் கண்டறிய முடியாது என அவசர சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. அமைதிக்கான நோபல் பரிசு மூன்றாகப் பகிர்வு**

மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் காப்பதற்காகத் தொடர்ந்து போராடி வருவதற்காக பெலாரஸ் ஆர்வலர் அலெஸ் பியலியட்ஸ்கிக்கு நடப்பாண்டுக்குரிய (2022) அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷியாவைச் சேர்ந்த குரூப் மெமோரியல், உக்ரைனைச் சேர்ந்த மனித சுதந்திர மையம் ஆகியவற்றுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

**அலெஸ் பியலியட்ஸ்கி**

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் பெலாரஸில் ஜனநாயக உரிமைகளுக்காக 1980ஆம் ஆண்டுகளில் இருந்து போராடி வரும் முக்கியத் தலைவர். நாட்டில் மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமெனத் தொடர்ந்து வலியுறுத்தி வருபவர். அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்ததன் காரணமாகக் கடந்த 2020–ஆம் ஆண்டில் பெலாரஸ் அரசு அவரை கைதுசெய்தது. தற்போது வரை எந்தவித விசாரணையுமின்றி அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

**ரஷியாவின், 'மெமோரியல்' அமைப்பு**

சோவியத் யூனியனில் 1987ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மையம், கம்யூனிஸ அடக்குமுறைக்கு எதிராகப் போராடியது. ரஷிய அரசின் மனித உரிமைகள் மீறல் தொடர்பான விவரங்களை இந்த மையம் தொடர்ந்து சேகரித்து வருகிறது. ரஷியாவில் அரசியல் கைதிகளின் நிலை குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

ரஷியாவில் அடக்குமுறைக்கு முடிவுகொண்டு வந்து, மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென இம்மையம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி அமல்படுத்த வேண்டுமெனவும் மையம் கோரி வருகிறது.

**உக்ரைன், 'மனித சுதந்திர மையம்'**

உக்ரைன் கடும் நெருக்கடியைச் சந்தித்துவந்த சமயத்தில் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் வலியுறுத்தி 2007ஆம் ஆண்டில் இம்மையம் தொடங்கப்பட்டது. உக்ரைனை ஜனநாயக நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கை–ளை இம்மையம் மேற்கொண்டது. நாடு சட்டத்தின் அடிப்படையில் ஆளப்படுவதையும் இந்த மையம் உறுதிசெய்தது.

உக்ரைனில் ரஷியா போர்தொடுத்தபிறகு, ரஷியாவின் போர் விதிமீறல்களை இம்மையம் தொடர்ந்து ஆவணப்படுத்–தி வருகிறது. விதிமீறலில் ஈடுபட்ட ரஷிய அதிகாரிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத்தரவேண்டும் என்ற நோக்கில் மையம் செயல்பட்டு வருகிறது.

---

**3. மதம் மாறிய தலித் சமூகத்தினருக்கு SC அந்தஸ்து: ஆய்வுசெய்ய நடுவணரசு குழு அமைப்பு**

மதம் மாறிய தலித் சமூகத்தினருக்கு SC அந்தஸ்து வழங்குவது தொடர்பாக ஆய்வுசெய்ய உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் K G பாலகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்றை நடுவணரசு அமைத்துள்ளது.

இந்த 3 பேர் குழுவில் ஓய்வுபெற்ற இ ஆ ப அதிகாரி ரவீந்தர் குமார் ஜைன், யுஜிசி (பல்கலைக்கழக மானியக்குழு) உறுப்பினர் பேராசிரியர் சுஷ்மா யாதவ் ஆகியோர் இடம்பெற்றிருப்பதாக நடுவண் சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு, அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 341–இன்கீழ் அவ்வப்போது வெளியிடப்படும் குடியரசுத்தலைவர் உத்தரவுகளின் அடிப்படையில் இந்த விவகாரத்தை ஆய்வுசெய்யும்.

மேலும், தலித் சமூகத்தினர் வேறு மதங்களுக்கு மாறிய பிறகு அவர்களின் பழக்கவழக்கங்கள், மரபுகள், அவர்களின் சமூக பாகுபாடு மற்றும் தாழ்வுநிலை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கணக்கில் எடுத்துக்கொள்வதோடு, இவர்களுக்கு மீண்டும் SC அந்தஸ்து அளிக்கப்படும்போது தற்போதைய SC பிரிவினருக்கு ஏற்படும் தாக்கங்ளையும் ஆய்வுசெய்து, அதுதொடர்பான அறிக்கையை அடுத்த 2 ஆண்டுகளுக்குள் நடுவணரசிடம் சமர்ப்பிக்கும் என்றும் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்ட 1950–ஆம் ஆண்டு திருத்த (SC) உத்தரவின்படி, ஹிந்து அல்லது சீக்கியம் அல்லது பௌத்த மதத்திலிருந்து வேறு மதத்துக்கு மாறிய தலித் சமூகத்தினர் SC அந்தஸ்து கோரமுடியாது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்கு தலைமை வகிக்கும் நீதிபதி K G பாலகிருஷ்ணன், உச்சநீதிமன்றத்தின் முதல் தலித் தலைமை நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராகவும் அவர் இருந்துள்ளார்.

---

**4. விமானப்படையில் ஆயுத அமைப்பு பிரிவுக்கு ஒப்புதல்**

இந்திய வான்படை அதிகாரிகளுக்கென தனி ஆயுத அமைப்புப்பிரிவை அமைக்க நடுவணரசு ஒப்புதல் அளித்ததாக அப்படையின் தலைமைத்தளபதி வி ஆர் சௌதரி தெரிவித்துள்ளார்.

தனி ஆயுதப்பிரிவு: வான்படை அதிகாரிகளுக்கென தனி ஆயுத அமைப்புப்பிரிவை உருவாக்க நடுவணரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பிரிவு அமைக்கப்படுவது சுதந்திரத்துக்குப் பிறகு இதுவே முதல்முறையாகும்.

தரையிலும் வானிலும் உள்ள இலக்குகளைத் தரையில் இருந்து தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், தொலைவில் இருந்து 'ரிமோட்' வாயிலாகக் கட்டுப்படுத்தக் கூடிய விமானங்கள், விமானங்களில் இடம்பெறும் ஆயுதங்கள் உள்ளிட்டவை ஆயுத அமைப்புப்பிரிவில் இடம்பெறும். இதன்மூலமாக அதிகாரிகளுக்கு எளிதில் பயிற்சியளிக்க முடியும். அதனால் ₹3,400 கோடி வரை சேமிக்கப்படும்.

---

**1. 'Poverty and Shared Prosperity – 2022' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. உலக பொருளாதார மன்றம்

இ. பன்னாட்டு செலாவணி நிதியம்

ஈ. UNICEF

✓ உலக வங்கியானது அண்மையில், "Poverty and Shared Prosperity 2022: Correcting Course" என்ற தலைப்பில் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, உணவு மற்றும் ஆற்றல் சார்ந்தவற்றின் அதிகரித்த விலைகள் COVID–19க்குப் பிறகான விரைவான மீளெழுச்சிக்குத் தடையாய் உள்ளன; இது பல தசாப்தங்களாக உலகளாவிய வறுமையொழிப்புக்கு மிகப்பெரிய பின்னடைவாக உள்ளது.

✓ தீவிர வறுமை நிலையானது துணை–சஹாரா ஆப்பிரிக்க நாடுகளில் அதிகரித்து வருகிறது. அந்நாடுகள் சுமார் 35 சதவீதம் வரை வறுமை விகிதத்தைக் கொண்டுள்ளன. மேலும், தீவிர வறுமையில் உள்ள மக்கள்தொகையுள் 60% பேரையும் அது கொண்டுள்ளது.

**2. மதம் மாறிய ஒடுக்கப்பட்டோரை பட்டியலினத்தில் (SC) சேர்ப்பதற்கான நிலையை ஆராய்வதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர் யார்?**

**அ. நீதியரசர் K G பாலகிருஷ்ணன் ☑**

ஆ. நீதியரசர் H L தத்து

இ. நீதியரசர் அருண் குமார் மிஸ்ரா

ஈ. நீதியரசர் T S தாக்கூர்



✓ ஹிந்து, பௌத்தம் மற்றும் சீக்கியம் அல்லாத பிற மதங்களுக்கு மாறிய பட்டியலினத்தோருக்கு 'SC' என்ற அந்தஸ்து வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலிக்க நடுவணரசு ஓர் ஆணையத்தை அமைத்துள்ளது. இந்தியாவின் முன்னாள் தலைமை நீதியரசர் K G பாலகிருஷ்ணன் தலைமையில் மூவர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு இவ்வாணையத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**3. UNICEFஇன் சமீபத்திய அறிக்கையின்படி, கீழ்க்காணும் எந்தத் தென்கிழக்கு ஆசிய நாட்டில் 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர்?**

அ. ஆப்கானிஸ்தான்

**ஆ. மியான்மர் ☑**

இ. இலங்கை

ஈ. சீனா

✓ கடந்த ஆண்டு நிகழ்ந்த இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் மியான்மரில் இருந்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் புலம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அவையின் சிறார் முகமை (UNICEF) தனது சமீபத்திய அறிக்கையில் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் ஆங் சான் சூகியின் அரசை இராணுவம் நீக்கியதில் இருந்து மியான்மர் கிளர்ச்சியிலேதான் உள்ளது. புலம்பெயரவேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அந்த நாட்டின் வடமேற்கு சாகேயிங் பிராந்தியத்தில் இருப்பதாக அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

**4. 'துளிர் நிறுவல்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்துடன்' தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

**ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ. நிதியமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

✓ வணிகம்&தொழிற்துறை அமைச்சகத்தின் கீழுள்ள தொழிற்துறை & உள்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான துறை, துளிர் நிறுவல்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தை நிறுவுவது குறித்து அறிவித்துள்ளது. அட்டவணைப்–படுத்தப்பட்ட வணிக வங்கிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் SEBI பதிவுசெய்யப்பட்ட மாற்று முதலீட்டு நிதியங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் கடன்களுக்கு கடன் உத்தரவாதங்களை வழங்குவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. முதன்முறையாக, கீழ்க்காணும் எந்த ஆயுதப்படைக்காக, 'அதிகாரிகளுக்கான ஆயுத அமைப்புக்கிளை'க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது?**

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய வான்படை ☑**

ஈ. இந்திய கடலோரக் காவல்படை

✓ இந்திய வான்படையின் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாக, ஆயுத அமைப்புகள் (WS) கிளை என்ற புதிய கிளையை உருவாக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. WS கிளையை உருவாக்கியதன் நோக்கமானது, அனைத்து ஆயுத அமைப்பு நிபுணர்களையும் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைத்து, அனைத்து தரை மற்றும் வான்வழி ஆயுத அமைப்புகளின் செயல்பாடுகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

✓ தரையிலிருந்து தரை இலக்கைத்தாக்கும் ஏவுகணைகள், தரையிலிருந்து வான் இலக்கைத்தாக்கும் ஏவுகணைகள், தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் ஆளில்லா வானூர்தி மற்றும் இரட்டை விமானிகள், படையினர் பலர் பயணிக்கும் விமானம் ஆகியவற்றில் ஆயுத அமைப்பை இயக்கும் தொகுப்பு உள்ளிட்டவற்றைக் கொண்டதாக இந்தக் கிளை இருக்கும். இந்திய வான்படையின் போர்த்திறனை மேம்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளில் இந்தக் கிளை தனது மகத்தான பங்களிப்பை வழங்கும்.

**6. எந்த அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்கள் சமீபத்தில் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியத்துடன் ₹215 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன?**

அ. நிதியமைச்சகம்

**ஆ. எரிசக்தி அமைச்சகம் ☑**

இ. நிலக்கரி அமைச்சகம்

ஈ. எஃகு அமைச்சகம்

✓ விளையாட்டுத்துறையின் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியமானது நடுவண் எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள இரண்டு பெரிய பொதுத்துறை நிறுவனங்களான NTPC மற்றும் REC லிட் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. NTPC, வில்வித்தைக்காக ₹115 கோடி தருவதாக உறுதியளித்தது; REC லிட் பெண்கள் ஹாக்கி, குத்துச்சண்டை மற்றும் தடகளப் போட்டிகளுக்காக 3 ஆண்டுகளுக்கு ₹100 கோடி அளிப்பதாக உறுதியளித்தது.

**7. 2022 – எம்மி விருதுகளில், 'நாடகத்தொடரில் சிறந்த நடிகர் மற்றும் நடிகை' பட்டத்தை வென்றவர் யார்?**

**அ. லீ ஜங்-ஜே மற்றும் ஜெண்டயா ☑**

ஆ. வில் ஸ்மித் மற்றும் ஜெண்டயா

இ. பிரட் கோல்ட்ஸ்டைன் மற்றும் ஜெண்டயா

ஈ. வில் ஸ்மித் மற்றும் கில்லியன் ஆண்டர்சன்




✓ 2022 – எம்மி விருதுகள் வழங்கும் விழாவானது சமீபத்தில் லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்றது. நாடகத்தொடரில் சிறந்த நடிகர் மற்றும் நடிகைக்கான விருதை ஸ்குவிட் கேம் என்ற தொடருக்காக முறையே நடிகர் லீ ஜங்–ஜேவும், யுபோரியா என்ற தொடருக்காக நடிகை ஜெண்டயாவும் வென்றனர்.

✓ பிறமுலக கொரிய திகில்மிகுந்த ஸ்குவிட் கேம் தொடரை இயக்கிய ஹ்வாங் டோங்–ஹியூக் சிறந்த இயக்கத்திற்கான எம்மி விருதை வென்றார். ஆப்பிளின் டெட் லாஸ்ஸோ நிகழ்ச்சிக்காக, 'நகைச்சுவைத்தொடரில் சிறந்த நடிகருக்கான விருதை' ஜேசன் சுடேகிஸ் பெற்றார்.

**8. இந்தியாவின் தலைமைத்துவ முன்னெடுப்பான, 'LEADS உச்சிமாநாட்டை' ஏற்பாடு செய்கிற தொழிற்சங்கம் எது?**

அ. NASSCOM

**ஆ. FICCI ☑**

இ. CII

ஈ. ASSOCHAM

✓ FICCI ஆனது இந்தியாவின் தலைமைத்துவ முனைவான, 'LEADS (Leadership, Excellence, Adaptability, Diversity, Sustainability) உச்சிமாநாட்டை புது தில்லியில் ஏற்பாடு செய்கிறது. இதில் சுமார் 50 நாடுகளிலிருந்து 250–க்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள். 3ஆவது பதிப்பான இதில் 36 உலகளாவிய சிந்தனைத்தலைவர்களின் விவாதங்கள் அடங்கும்; இதில் அனைவருக்கும் உணவு;புதுமை;இயக்கம் உட்பட 11 கருப்பொருள்களில் கருத்துகள் பரிமாறப்படும்; இந்திய நடுவண் அமைச்சர்கள் மற்றும் ஜெர்மனி மற்றும் நியூசிலாந்தில் இருந்து வரும் அவர்களுக்கு இணையான பிரதிநிதிகள் பல்வேறு கருப்பொருள்களின்கீழ் நடைபெறும் அமர்வுகளில் உரையாற்றுவார்கள்.

**9. 'The Green Fins Hub' என்ற முதலாவது உலகளாவிய கடல்சார் சுற்றுலாத்துறை தளத்துடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ. WEF

**ஆ. UNEP ☑**

இ. IMF

ஈ. UNICEF

✓ 'தி கிரீன் ஃபின்ஸ் ஹப்' என்பது முதலாவது உலகளாவிய கடல்சார் சுற்றுலாத்துறை தளமாகும். ஐநா சுற்றுச்சூழல் திட்டத்துடன் (UNEP) இணைந்து 'The Reef–World' அறக்கட்டளை இந்தக் கருவியை உருவாக்கியுள்ளது. கடல்சார் பாதுகாப்புச் சுற்றுலாத்துறையில் நிலைத்தன்மை சவால்களைச் சமாளிக்க இந்தக் கருவி உதவுகிறது. சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் தங்கள் அன்றாட நடைமுறைகளில் எளிய மாற்றங்களைச்செய்யவும், அவர்களின் வருடாந்திர வளர்ச்சிகளைக் கண்காணிக்கவும், அவர்களின் சமூகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளவும் இது உதவுகிறது.

**10. 'ANGAN – 2022' என்ற மாநாட்டை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ. எரிசக்தித் திறன் பணியகம் ☑**

இ. NITI ஆயோக்

ஈ. நடுவண் மறைமுக வரிகள் வாரியம்

✓ குறைந்த செலவில் புதிய பசுமை குடியிருப்புகள்மூலம் இயற்கையை விரிவுபடுத்துதல் என்ற பொருளுடைய அங்கன் – 2022 என்னும் மூன்று நாள் சர்வதேச மாநாடு 2022 செப்.14 அன்று தொடங்கியது. "கட்டடங்களைக் கரியமில வாயு வெளியேற்றமில்லாமல் மாற்றுவது" என்று தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றது. இந்தியா – சுவிஸ் கட்டுமான எரிசக்தித்திறன் திட்டத்தின்கீழ், வளர்ச்சி & ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகமையுடன் ஒருங்கிணைந்து எரிசக்தி அமைச்சகத்தின் எரிசக்தித் திறன் பணியகம் அங்கன் 2.0 மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், கட்டடங்களில் எரிசக்தித் திறன் ஆகிய தலைப்புகளில் விவாதங்கள் நடந்தேறின.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உலகில் ஆற்றல்வாய்ந்த ஏவுகலமாக தயாராகும், 'GSLV Mk–III'**

உலகின் அதிக திறன், ஆற்றல்வாய்ந்த ஏவுகலமாக 'GSLV Mk–III' தயாராகி வருகிறது. விண்வெளி ஆராய்ச்சியில் உலகளவில் இந்தியா 2ஆவது இடம் வகித்து வருகிறது.

ஆண்டுதோறும் விண்வெளி வாரத்தை அக்.4 முதல் 10–ஆம் தேதி வரை கொண்டாட வேண்டுமென ஐநா சபையில் கடந்த 1999ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, 2000ஆம் ஆண்டு முதல் உலக விண்வெளி வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகில் 100 நாடுகளில் உலக விண்வெளி வாரம் கொண்டாடப்படுகிறது.

**1. இந்தியாவின் முதல் 24×7 சூரிய ஆற்றலிலியங்கும் கிராமமாக அறிவிக்கப்பட்ட மொதேரா அமைந்துள்ள மாநிலம்/ யூனியன் பிரதேசம் எது?**



அ. ஹிமாச்சல பிரதேசம்

ஆ. இராஜஸ்தான்

**இ. குஜராத் ☑**

ஈ. மகாராஷ்டிரா

✓ குஜராத் மாநிலத்தின் மேசானா மாவட்டத்தில் உள்ள மொதேரா கிராமத்தை இந்தியாவின் முதல் சூரிய ஆற்றலில் இயங்கும் கிராமமாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். மொதேரா, சூரியன் கோவிலுடன் தொடர்புடைய ஒரு கிராமமாகும். குஜராத் மாநில அரசின் கூற்றுப்படி, கிராமத்து வீடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோலார் பேனல்கள் நிறுவப்பட்டு, கிராம மக்களுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களுக்கு சுழிய விலையில் சூரியவொளி மின்சாரம் வழங்கப்படும்.

**2. 'கல்வி 4.0 இந்தியா' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

WORLD ECONOMIC FORUM

அ. IMF **ஆ. WEF ☑**

இ. உலக வங்கி ஈ. UNICEF

✓ அதன் 'கல்வி 4.0 இந்தியா' முனைவின் ஒருபகுதியாக, உலகப்பொருளாதார மன்றம் புதிய, 'கல்வி 4.0 இந்தியா' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. எண்மம் மற்றும் பிற தொழில்நுட்பங்கள் கற்றல் இடைவெளிகளை எவ்வாறு நிரப்பலாம் என்பது குறித்தும் அனைவருக்கும் கல்வியை அணுகக்கூடியதாக எவ்வாறு மாற்றுவது என்பது குறித்தும் இந்த அறிக்கை விவாதிக்கிறது. உலகப்பொருளாதார மன்றம், UNICEF மற்றும் YuWaah ஆகியவற்றின் கூட்டு உழைப்பின்கீழ் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**3. அண்மையில் தொடங்கப்பட்ட, 'Tele-MANAS' என்ற முனைவுடன் தொடர்புடைய துறை எது?**



அ. குழந்தை நலம்

**ஆ. மனநலம் ☑**

இ. தொற்றுநோய்கள்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

✓ மத்திய நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம், "Tele Mental Health Assistance and Networking Across States" (Tele-MANAS) என்ற மனநலச் சேவையை அறிமுகப்படுத்தியது. தேசிய மனநலத் திட்டத்தின் டிஜிட்டல் பிரிவாக Tele-MANAS இருக்கும். இத்திட்டத்திற்கான மைய முகமையாக தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனமும் (NIMHANS) தொழில்நுட்ப ஆதரவு வழங்குநராக ஐஐடி-பாம்பே நிறுவனமும் இருக்கும்.

**4. சிறுத்தைகள் காணப்பட்ட அசோலா பாட்டி வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்/UT எது?**



அ. அஸ்ஸாம்

**ஆ. புது தில்லி ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. ஜார்கண்ட்

✓ அசோலா பாட்டி வனவுயிரி சரணாலயத்தில் எட்டுச் சிறுத்தைகள் இருப்பது ஓராண்டுகாலம் நடத்தப்பட்ட ஆய்வின்படி உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது அதன் செழிப்பான சுற்றுச்சூழலமைப்பின் உணர்த்தியாகக் கருதப்படுகிறது. கடந்த 1940ஆம் ஆண்டுக்குப்பிறகு பல பத்தாண்டுகளாக இச்சரணாலயத்தில் சிறுத்தைகள் தென்படாமலேயே இருந்தன.

✓ கடந்த 2019ஆம் ஆண்டில், தில்லி வனத்துறையானது அந்தச்சரணாலயத்தில் சிறுத்தைப்புலியின் அடையாளங்கள் மற்றும் கீறல்களைப் புதிதாகப் பார்த்ததாக அறிவித்தது. வரிக்கழுதைப்புலி, காட்டுப்பூனை, பொன்னரி, இந்திய முயல், இந்தியப்பன்றி, கரும்புலி மற்றும் புள்ளிமான்போன்ற பாலூட்டிகளின் இருப்பு குறித்தும் இந்த ஆய்வு சிறப்பித்துக் கூறியுள்ளது.


**5. 2022ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் நினைவுப்பரிசு, கீழ்க்காணும் எந்தத் துறையில் ஆராய்ச்சி மேற்கொண்டமைக்காக மூன்று அறிவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது?**

அ. போக்குசார் பொருளியல்

ஆ. உலகளாவிய வறுமை

**இ. வங்கிகள் மற்றும் நிதி நெருக்கடிகள் ☑**

ஈ. அளவு முறைமைகள்



✓ 2022ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் நினைவுப்பரிசானது அமெரிக்க பெடரல் ரிசர்வின் முன்னாள் தலைவர் பென் S பெர்னான்கே, டக்ளஸ் W டைமண்ட் மற்றும் அமெரிக்காவின் பிலிப் H டைப்விக் ஆகியோருக்கு வங்கிகள் மற்றும் நிதி நெருக்கடிகள் குறித்த அவர்களது ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டது.

✓ நோபல் பரிசுக்குழுவின் கூற்றுப்படி, "வங்கிகள் ஏன் தேவைப்படுகின்றன, அவை ஏன் பாதிக்கப்படக்கூடிய நிலை கொண்டுள்ளன, அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கான நமது நவீன புரிதலுக்கு பரிசுபெற்றவர்கள் ஓர் அடித்தளத்தை வழங்கியுள்ளனர்".

**6. 'ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான உலக நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. செப்டம்பர்.10 ☑**

ஆ. செப்டம்பர்.20

இ. செப்டம்பர்.30

ஈ. அக்டோபர்.10



✓ உலக ஓசோன் நாள் அல்லது ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான உலக நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.16 அன்று கொண்டாடப்படுகிறது. ஓசோன் படலத்தில் ஏற்படும் தீங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Global Cooperation to Protect Life on Earth" என்பது இந்த ஆண்டு (2022) வரும் உலக ஓசோன் நாளுக்கானக் கருப்பொருளாகும். முதலாவது ஓசோன் நாள் 1995 செப்.16 அன்று கொண்டாடப்பட்டது.

**7. SCO சுற்றுலா மற்றும் கலாச்சார தலைநகரமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள முதல் இந்திய நகரம் எது?**

அ. மதுரை

**ஆ. வாரணாசி ☑**

இ. கன்னியாகுமரி

ஈ. ஏதென்ஸ்



✓ இந்திய நகரமான வாரணாசி சமீபத்தில் முதல் SCO சுற்றுலா மற்றும் கலாச்சார தலைநகராக பரிந்துரைக்கப்பட்டது. உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாட்டுத்தலைவர்கள் கவுன்சிலின் 22ஆவது கூட்டத்தில், 2022–2023 காலகட்டத்திற்கு இது பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பிரணவ் ஆனந்த் என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. ஸ்குவாஷ் **ஆ. சதுரங்கம் ☑**

இ. டேபிள் டென்னிஸ் ஈ. பூப்பந்து



✓ பெங்களூருவைச் சேர்ந்த 15 வயது செஸ் வீரர் பிரணவ் ஆனந்த் சமீபத்தில் இந்தியாவின் 76ஆம் கிராண்ட்மாஸ்டர் ஆனார். ருமேனியாவின் மாமியாவில் நடந்துவரும் உலக இளையோர் செஸ் சாம்பியன்ஷிப்பில் அவர் 2,500 Elo மதிப்பெண்களைக் கடந்தார். ஒரு கிராண்ட்மாஸ்டர் ஆக, ஒரு வீரர் மூன்று GM விதிமுறைகளைப் பெறவேண்டும் மற்றும் 2,500 Elo புள்ளிகளின் நேரடி மதிப்பீட்டைக் கடக்கவேண்டும். 2022 ஜூலையில் சுவிச்சர்லாந்தில் நடந்த 55ஆவது பீல் செஸ் விழாவில் பிரணவ் ஆனந்த் மூன்றாவது மற்றும் இறுதி GM நெறிமுறையை அடைந்தார்.

### 9. இந்தியாவின் முதல் லித்தியம் மின்கல உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ. மைசூரு

ஆ. திருப்பதி ☑

இ. சிவகாசி

ஈ. ஓசூர்



✓ சென்னையைச் சார்ந்த முனோத் தொழிற்துறை நிறுவனத்தால் ₹165 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் லித்தியம் மின்கல உற்பத்தி நிலையத்தை ஆந்திர மாநிலம் திருப்பதியில் வைத்து நடுவண் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் இராஜீவ் சந்திரசேகர் தொடங்கி வைத்தார். தற்போது, இந்தியா தனது லித்தியம் அயன் மின்கலத் தேவைகளுக்காக 100 சதவீதம் வரை சீனா, தென் கொரியா, வியட்நாம் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளைச் சார்ந்துள்ளது.

### 10. 2022 – 'உலக நோயாளிகள் பாதுகாப்பு நாளுக்கானக்' கருப்பொருள் என்ன?

அ. Medication Safety ☑

ஆ. Ask Before Googling

இ. Expanding Healthcare

ஈ. Warning in Medication




✓ உலக நோயாளிகள் பாதுகாப்பு நாளானது செப்.17 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பு (WHO) செப்.17ஆம் தேதியை உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் என அறிவித்தது. "Medication Safety" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் உலக நோயாளிகள் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருளாகும். மேலும், "Medication Without Harm" என்ற முழக்கவரியுடன் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. பொருளாதாரம்: அமெரிக்க அறிவியலாளர்கள் மூவருக்கு நோபல்

வங்கிகள் குறித்தும், நிதி நெருக்கடி தொடர்பாகவும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர்கள் மூவருக்கு நடப்பாண்டுக்கான பொருளாதாரத்துக்குரிய நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய வங்கியின் தலைவராக 2006 முதல் 2014 வரை பணியாற்றிய பென் பெர்னன்கே, நிபுணர்கள் டக்ளஸ் W டைமண்ட், பிலிப் H டிப்விக் ஆகியோருக்கு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பை ஸ்டாக்ஹோமில் வெளியிட்ட தேர்வுக்குழு தலைவர் ஜான் ஹேஸ்லர் கூறுகையில், "நிதி நெருக்கடியும் பொருளாதார வீழ்ச்சியும் நாட்டுக்குப் பெரும் இன்னல் விளைவிக்கக்கூடியவை. அவை ஒருமுறை மட்டுமல்லாமல் மீண்டும் மீண்டும் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே, அவை குறித்து தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டியது கட்டாயமாக உள்ளது. அந்தப் புரிதலை வெளிப்படுத்திய நிபுணர்களுக்கே நடப்பாண்டுக்கான பொருளாதாரத்துக்குரிய நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது. வங்கிகள் சந்திக்கும் நிதி நெருக்கடியைக் கண்டு கொள்ளாமல் ஏன் இருக்கக்கூடாது என்பதற்கான விடையை நிபுணர்கள் மூவரும் வழங்கியுள்ளனர்.

உலக நாடுகள் 2008–ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தபோது, அதில் இருந்து மீள்வதற்கு மூவரின் ஆராய்ச்சிகளும் முக்கியப்பங்கு வகித்தன" என்றார்.

முதன்மை ஆராய்ச்சி: கடந்த 1930–ஆம் ஆண்டில் உலக நாடுகள் சந்தித்த பொருளாதார நெருக்கடிக்கு வங்கிகளின் தோல்வியே முக்கிய காரணம் எனத் தனது 1983–ஆம் ஆண்டு ஆய்வறிக்கையில் பெர்னன்கே வெளிப்படுத்தினார். வங்கி அமைப்பு முற்றிலும் தோல்வியடைந்ததே நவீன வரலாற்றின் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக அமைந்ததென அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

2008–ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியை உலக நாடுகள் சந்தித்தபோது, அமெரிக்க மத்திய வங்கியின் தலைவராக பெர்னன்கே செயல்பட்டார். அப்போது, அமெரிக்க நிதித்துறையுடன் இணைந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை அவர் விரைந்து மேற்கொண்டார். தற்போது வாஷிங்டன் புரூகிங்ஸ் நிறுவனத்தில் அவர் பணியாற்றி வருகிறார்.

**நிதிநெருக்கடி:** சிகாகோ பல்கலைக்கழகப்பேராசிரியரான டைமண்ட், வாஷிங்டன் பல்கலை பேராசிரியரான டிப்விக் ஆகியோர் நிதி நெருக்கடியின் விளைவுகள் குறித்து விரிவான ஆராய்ச்சி மேற்கொண்டனர். வங்கிக்கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளிப்பதன்மூலமாக நிதி நெருக்கடியின் விளைவுகளைத் தடுக்க முடியும் என அவர்கள் கூறினர். வங்கியை முறையாக நிர்வகிப்பது தொடர்பாக கடந்த 1983ஆம் ஆண்டில் அவர்கள் இருவரும் இணைந்து ஆய்வறிக்கையை வெளியிட்டனர். 2008ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின்போது மூவரின் ஆராய்ச்சிகளும் முதலீட்டாளர்களுக்குப் பெருமளவில் உதவியதாக நோபல் பரிசு தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

**1. IMFஇன் அண்மைய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையின்படி (2022 அக்டோபர்), இந்தியாவின் 2022-23 காலகட்டத்திற்கான GDP கணிப்பு என்ன?**

அ. 5.8%

ஆ. 6.0%

**இ. 6.8% ☑**

ஈ. 7.0%

✓ பன்னாட்டு செலாவணி நிதியம் அதன் அண்மைய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையில், 2022-23 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சிக்கான முன்கணிப்பை 6.8 சதவீதமாகக் குறைத்துள்ளது. IMF ஆனது உலகளாவிய பணவீக்க நெருக்கடியைக் குறிப்பிட்டு இதில் காட்டியுள்ளது. IMF இந்தியாவின் வளர்ச்சிக்கணிப்பை கடந்த ஜூலை மாதத்தில் 7.4 சதவீதமாகக் குறைத்திருந்தது; இதிலிருந்து 0.6% தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

**2. ஐக்கிய நாடுகளின் 2022 – உலக இடஞ்சார் மாநாட்டு (UNWGIC) நிகழ்வை நடத்தும் நகரம் எது?**

அ. பெங்களூரு

**ஆ. ஹைதராபாத் ☑**

இ. டாக்கா

ஈ. மாலே

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி ஹைதராபாத்தில் வைத்து ஐக்கிய நாடுகளின் 2022 – உலக இடஞ்சார் மாநாட்டு (UNWGIC) நிகழ்வைத் தொடங்கி வைத்தார். "Geo-Enabling the Global Village: No one should be left behind" என்பது 2022 – UNWGICஇன் கருப்பொருளாகும். இது மனிதர்கள் குறித்த தரவு மற்றும் இடம் ஆகியவற்றிற்கான சமூகத்தை உருவாக்குவதில் தனது கவனத்தைச் செலுத்துகிறது.

**3. நீதியரசர் U U லலித்துக்குப்பிறகு, இந்தியாவின் 50ஆவது தலைமை நீதியரசராக பதவியேற்கவுள்ளவர் யார்?**

**அ. நீதியரசர் DY சந்திரசூட் ☑**



ஆ. நீதியரசர் சஞ்சை கிஷன் கௌல்

இ. நீதியரசர் S அப்துல் நசீர்

ஈ. நீதியரசர் K M ஜோசப்

✓ நீதியரசர் தனஞ்சய யஷ்வந்த் சந்திரசூட் இந்தியாவின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக தற்போதைய தலைமை நீதியரசர் U U லலித் முறைப்படி அவரை பரிந்துரைத்ததை அடுத்து பதவியேற்கவுள்ளார். நடைமுறையின்படி, மூத்த நீதியரசரான உச்சநீதிமன்ற நீதியரசர் இந்தியாவின் தலைமை நீதியரசராக பணியாற்றுகிறார்; மேலும் அவருக்குப் பின் அப்பதவிக்கு வருவோர் யாரென அரசாங்கம் பரிந்துரை கோருகிறது. நீதியரசர் DY சந்திரசூட், ஒரினச்சேர்க்கை என்பது குற்றமில்லை என்றும் சபரிமலையில் பெண்களை அனுமதிக்கலாம் என்றும் தீர்ப்பு வழங்கிய அமர்வுகளின் ஒரு பகுதியாக இருந்தார்.

**4. Crypto-Asset Reporting Framework (CARF) என்பதை உருவாக்கிய உலகளாவிய கூட்டமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. உலக பொருளாதார மன்றம்

இ. பன்னாட்டு செலவாணி நிதியம்

**ஈ. OECD ☑**

✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) நாடுகளுக்கு இடையே கிரிப்டோ சொத்துக்கள் தொடர்பான தகவல்களைத் தானாக பரிமாற்றம் செய்வதற்கான புதிய உலகளாவிய வரி வெளிப்படைத்தன்மை கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. Crypto–Asset Reporting Framework (CARF) எனப்பெயரிடப்பட்ட கட்டமைப்பானது, கிரிப்டோ சொத்துகளின் எல்லை தாண்டிய பரிமாற்றத்தைக் கண்காணிக்க நாடுகளால் பயன்படுத்தப்படும். இந்த வாரம் வாஷிங்டன் DCஇல் வைத்து G20 நிதியமைச்சர்களுக்கு CARF வழங்கப்படும்.

**5. அண்மையில் தொடங்கப்பட்ட மகாகல் லோக் திட்டம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. குஜராத்



✓ பிரதமர் நரேந்திர மோதி, மத்திய பிரதேச மாநிலம் உஜ்ஜயினியில் உள்ள ஸ்ரீ மஹாகல் லோக்கில் மகாகல் லோக் திட்டத்தின் முதற்கட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். மொத்த திட்டத்திற்கான மொத்த செலவு சுமார் ₹850 கோடி ஆகும். மகாகல் வழித்தடத்தில் சிவபெருமானின் ஆனந்த தாண்டவச் சொரூபங்களை (நடன வடிவம்) சித்தரிக்கின்ற நூற்றெட்டு (108) ஸ்தம்பங்கள் (தூண்கள்) உள்ளன.


**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'நான்மடோல்' புயல் கீழ்க்காணும் எந்த நாட்டில் கரையைக் கடக்கும்?**

அ. இந்தோனேசியா

**ஆ. ஜப்பான் ☑**

இ. பிலிப்பைன்ஸ்

ஈ. இலங்கை



✓ 'நான்மடோல்' புயலானது ஜப்பானில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆற்றல்வாய்ந்த இந்தப் புயல் குறித்து அந்நாட்டு வானிலை மையம் எச்சரிக்கையை விடுத்துள்ளது. நான்மடோல் சூறாவளிக்கு கரையைக் கடக்கும் முன் மக்கள் அனைவரும் தஞ்சமடைய வேற்றிடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய அமைப்பு கடந்த 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து ஒகினாவா பிராந்தியத்திற்கு வெளியே அறிவிக்கப்பட்ட முதல் சூறாவளி தொடர்பான சிறப்பு எச்சரிக்கை இதுவாகும்.

**7. 'உணவு மற்றும் உழவிற்கான தாவர மரபணு வளங்களுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின் (ITPGRFA)' ஆளும் குழு அமர்வை நடத்தும் நாடு எது?**

**அ. இந்தியா ☑**

The International Treaty
ON PLANT GENETIC RESOURCES FOR FOOD AND AGRICULTURE

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. ஆஸ்திரேலியா

✓ 'உணவு மற்றும் உழவிற்கான தாவர மரபணு வளங்களுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின் (ITPGRFA)' ஆளும் குழு அமர்வை இந்தியா நடத்தவுள்ளது. கடந்த 2004ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த இவ்வொப்பந்தத்தை 149 நாடுகள் அங்கீகரித்துள்ளன. ITPGRFAஇன் புது தில்லி உச்சிமாநாட்டில் உறுப்புநாடுகள் அனைத்திற்கும் சிறந்த தரமான விதைகளுக்கான அணுகலை வழங்கும், 'மூலவுயிருருவின் பயன்–பகிர்வு' குறித்து ஒருமித்த ஆமோதிப்பு பெற வாய்ப்புள்ளது.

**8. 2023இல் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (SCO) சேருவதற்கான முறையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு எது?**

அ. இஸ்ரேல்

**ஆ. ஈரான் ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. ஈராக்

✓ 2023ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (SCO) நிரந்தர உறுப்பினராவதற்கான ஒரு முறையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டுள்ளது. SCO உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதன்மூலம் இருபது ஆண்டுகளில் உசுபெகிஸ்தானுக்கு வருகைதரும் முதல் ஈரானிய அதிபராக இப்ராகிம் ரைசி ஆனார். 2005 ஜூனில் ஈரான் SCO அமைப்பில் பார்வையாளர் அந்தஸ்தைப்பெற்றது. 15 ஆண்டு காத்திருப்புக்குப்பிறகு 2021 செப்டம்பரில் அதன் முழுநேர உறுப்பினருக்கான முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டது.

**9. 'சுற்றுச்சூழல் நிலைத்தன்மை 2020-21' ஆண்டறிக்கையை வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?**

அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. இரயில்வே அமைச்சகம் ☑**

இ. MSME அமைச்சகம்

ஈ. பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ இரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், 'ஸ்வச்சதா பக்வாரா – 2022'ஐ தொடங்கிவைத்து, 'சுற்றுச்சூழல் நிலைத்தன்மை 2020-21' ஆண்டறிக்கையை வெளியிட்டார். பசுமை மற்றும் தூய எரிசக்தியை வளர்த்தெடுக்க இரயில்வே அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துரைக்கும் விரிவான ஆவணமாக இந்த அறிக்கை உள்ளது. இவ்வறிக்கை, நிகர சுழிய மாசு வெளியேற்றத்தை நோக்கிய இரயில்வே அமைச்சகத்தின் முனைவுகளை வெளிப்படுத்துகிறது.

**10. UNICEF நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்ட காலநிலை ஆர்வலர் வனேசா நகேட் சார்ந்த நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. உகாண்டா ☑**

இ. வெனிசுலா

ஈ. ஆப்கானிஸ்தான்



✓ 25 வயதான உகாண்டா காலநிலை ஆர்வலர் வனேசா நகேட் UNICEF நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டார். அவர் ஆப்பிரிக்க காலநிலை ஆர்வலர்களுக்கு ஆதரவாக எழுச்சி இயக்கம் என்ற தளத்தை உருவாக்கினார். அவர் ஆப்பிரிக்க மழைக்காடுகளை அழிப்பதைத் தடுக்கும் ஒரு முனைவுக்குத் தலைமைதாங்கினார். தனது சொந்த நாடான உகாண்டாவின் தொலைதூரப்பகுதிகளில் சூரியப்பலகங்களை (solar-panel) நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட, 'வாஷ் பசுமை பள்ளிகள் திட்டத்தை' அவர் தொடங்கினார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதி DY சந்திரசூட்: UU லலித் பரிந்துரை**

உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக DY சந்திரசூட்டை நியமிக்குமாறு, உச்சநீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதி UU லலித் பரிந்துரை செய்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் UU லலித் வரும் நவ.8–ஆம் தேதி ஓய்வுபெறவிருக்கிறார்.

இந்நிலையில், மத்திய சட்ட அமைச்சகத்திடமிருந்து வந்த பரிந்துரையை ஏற்று, உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக சந்திரசூட்டை நியமிக்கலாம் என்று UU லலித் பரிந்துரை கடிதம் அனுப்பியிருக்கிறார். இதையடுத்து, உச்சநீதிமன்றத்தின் 50ஆவது தலைமை நீதிபதியாக DY சந்திரசூட் பதவியேற்பது கிட்டத்தட்ட உறுதியாகியிருக்கிறது. அவர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக 2024 நவ.10–ஆம் தேதி வரை பதவியில் இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 6.8%ஆக குறைத்தது IMF**

நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 6.8 சதவீதமாக சர்வதேச செலாவணி நிதியம் (IMF) குறைத்துள்ளது. 2022–23ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8.2 சதவீதமாக இருக்கும் என்று கடந்த ஜனவரியில் IMF கணித்திருந்தது. பின்னர், இது 7.4 சதவீதமாக கடந்த ஜூலையில் குறைக்கப்பட்டது.

நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை ஏற்கெனவே பல்வேறு சர்வதேச அமைப்புகள் குறைத்துள்ள நிலையில், அந்த வரிசையில் IMF இணைந்துள்ளது. IMF சார்பில் உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. உலக வங்கி மற்றும் IMF அதிகாரிகளின் வருடாந்திர கூட்டத்துக்குப்பின் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு 6.8 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை கணிப்புடன் ஒப்பிடுகையில் இது 0.6 சதவீதம் குறைவாகும். 2021–22ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளா்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது.

உலகப் பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு குறைப்பு: உலகப் பொருளாதார வளர்ச்சி 2021இல் 6.0 சதவீதமாக இருந்த நிலையில், 2022இல் 3.2 சதவீதமாகவும் 2023இல் 2.7 சதவீதமாகவும் குறையும் என்று IMF அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கணிப்புகள், பெரும் பொருளாதார நாடுகளின் (அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா) குறிப்பிடத்தக்க அளவிலான மந்தநிலையை எதிரொலிப்பதாக IMF தெரிவித்துள்ளது.

---

**1. "பெண்குழந்தைகள் திறமையானவர்கள் – மரபுசாரா வாழ்வாதார வழிகளில் பெண்களுக்கான திறன்கள்" என்பது கீழ்க்காணும் எந்த முதன்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது?**

அ. பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ ☑

ஆ. இராஷ்டிரிய மகிளா கோஷ்

இ. போஷான் அபியான்

ஈ. பிரதமர் மாத்ரு வந்தனா யோஜனா

✓ நடுவணரசானது, 'பெண் குழந்தையைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' என்ற அதன் முதன்மை திட்டத்தில், "பெண்குழந்தைகள் திறமையானவர்கள்–மரபுசாரா வாழ்வாதார வழிகளில் பெண்டிர்க்கான திறன்கள்" என்பதை சேர்ப்பதாக அறிவித்தது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் தரமான கல்வியை வழங்குவதற்கு பல்வேறு துறைகளுக்கு இடையே தேவைப்படும் ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

**2. 'ஒரே நாடு, ஒரே கட்டமைப்பு, ஒரே அதிர்வெண் மற்றும் ஒரே தேசிய சுமை அனுப்பும் மையத்துடன்' தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. தகவல் தொடர்பு அமைச்சகம்

ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**இ. எரிசக்தி அமைச்சகம் ☑**

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ புதைபடிவ எரிபொருள் அல்லாத எரிசக்தி ஆதாரங்களை தேசிய மின்சார கட்டமைப்புடன் ஒருங்கிணைக்க, நடப்பு ஆண்டில் 66.5 கிகாவாட் திறன்கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்களுக்கான பரிமாற்ற அமைப்புகளை அமைக்கும் செயல்முறையை நடுவண் எரிசக்தி அமைச்சகம் தொடங்கியுள்ளது. இது தலைமுறையின் மாறுபாட்டை நிவர்த்தி செய்ய 13 RE மேலாண்மை மையங்களையும் (REMC) நிறுவும். 2026–27க்குள் கூடுதலாக 52 GW திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்களை ஒருங்கிணைப்பதற்காக ஒரு செலுத்துகை அமைப்பும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. 'ஒரே நாடு, ஒரே கட்டமைப்பு, ஒரே அதிர்வெண் மற்றும் ஒரே தேசிய சுமை அனுப்பும் மையம்' (NLDC) உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து எரிசக்தித் துறை அமைச்சர் விளக்கினார்.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'PM–DevINE' திட்டம் என்பது கீழ்க்காணும் எந்தப் பிராந்தியத்தின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டதாகும்?**

அ. கடலோரப் பகுதிகள்

ஆ. மலையகங்கள்

**இ. வடகிழக்குப்பகுதி ☑**

ஈ. எல்லைப்புறப் பகுதிகள்




✓ 2022–23 முதல் 2025–26 வரையிலான பதினைந்தாவது நிதி ஆணையத்தின் எஞ்சிய நான்கு ஆண்டுகளுக்கு "பிரதமரின் வடகிழக்குப் பிராந்தியத்திற்கான வளர்ச்சி முனைவு" என்ற புதிய திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோதி தலைமையிலான நடுவணமைச்சரவைக் கூட்டம் ஒப்புதலளித்துள்ளது. 100 சதவீதம் நடுவணரசின் நிதியிலான இப்புதிய திட்டத்தை வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் அமலாக்கும். இந்த நான்காண்டு காலத்திற்கான திட்ட ஒதுக்கீடு ₹6600 கோடியாக இருக்கும்.

**4. சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட CPI அடிப்படையிலான சில்லறை பணவீக்கம் என்ன?**



அ. 6.25%

ஆ. 7.2%

**இ. 7.41% ☑**

ஈ. 7.91%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட அதிகாரப்பூர்வ தகவலில், நுகர்வோர் விலைக்குறியீட்டின் (CPI) அடிப்படையிலான சில்லறை பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 7.41 சதவீதமாக இருந்தது. ஆகஸ்ட் மாதத்தில் இது 7 சதவீதமாக இருந்தது. விலையுயர்ந்த உணவுப் பொருட்களால் சில்லறை பணவீக்கம் ஐந்து மாதங்களில் இல்லாத அளவுக்கு செப்டம்பர் மாதத்தில் 7.41 சதவீதமாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து ஒன்பதாவது மாதமாக சில்லறை பண வீக்கம் இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்திருந்த 6 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.

**5. 'உலகளாவிய கிரிப்டோ ஏற்றுக்கொளல் குறியீடு – 2022'இல் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**



அ. இரண்டாவது

**ஆ. நான்காவது ☑**

இ. ஆறாவது

ஈ. எட்டாவது

✓ சைனாலிஸிஸின் 2022 – உலகளாவிய கிரிப்டோ ஏற்றுக்கொளல் அறிக்கையின்படி, 'உலகளாவிய கிரிப்டோ ஏற்றுக்கொளல் குறியீடு – 2022'இல் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, கிரிப்டோகரன்சி ஏற்றுக்கொளலில் வியட்நாம் முதலிடத்தில் உள்ளது. 0.663 குறியீட்டு மதிப்பெண்ணுடன் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது. அனைத்து கிரிப்டோ கரன்சி வர்த்தகத்திற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தாலும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

**6. '2022– இந்திய பாகுபாடு' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

Oxfam International

அ. UNICEF

ஆ. WEF

இ. NITI ஆயோக்

**ஈ. ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் ☑**

✓ ஆக்ஸ்பாம் இந்தியா, '2022 – இந்திய பாகுபாடு அறிக்கை' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான 98 சதவீத வேலைவாய்ப்பு இடைவெளிக்கு பாலின பாகுபாடுதான் காரணமாக உள்ளது. தொழிலாளர் சந்தையில் கிராமப்புறங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் 100% வேலைவாய்ப்பு சமத்துவமின்மையையும் நகர்ப்புறங்களில் 98 சதவீதத்தையும் இப்பாகுபாடு ஏற்படுத்துகிறது என்பதையும் இது காட்டுகிறது. சுயதொழில் செய்யும் ஆண்கள் பெண்களைவிட 2.5 மடங்கு அதிகமாக ஈட்டுகிறார்கள்; இதில் 83 சதவீதம் பாலின அடிப்படையிலான பாகுபாடு காரணமாக அமைகிறது.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'SOVA வைரஸ்' என்றால் என்ன?**



அ. COVID-19 திரிபு

ஆ. இன்புளுயன்ஸா வைரஸ் திரிபு

**இ. தீம்பொருள் ☑**

ஈ. கிரிப்டோகரன்ஸி

✓ SOVA வைரஸ் என்பது புதிய அலைபேசி வங்கிச்சேவை ஊடாக வரும் டிரோஜன் வைரஸாகும்; இது ஆண்ட்ராய்டு அலைபேசி வழியாகப் பரவுகிறது. இந்தியாவில் ஜூலை மாதம் முதன்முதலில் இவ்வைரஸ் கண்டறியப்பட்ட பின்னர் அது அதன் ஐந்தாவது பதிப்பிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக இந்தியாவின் நடுவண் இணைய பாதுகாப்பு நிறுவனம் ஓர் ஆலோசனையை வெளியிட்டது. 2022 ஜூலையில், இந்தியா உட்பட பல நாடுகளை அவ்வைரஸ் அதன் இலக்கு பட்டியலில் சேர்த்தது. கீ லாக்கிங், குக்கீகளைத் திருடுதல் மற்றும் பல செயலிகளில் தவறான மேலடுக்குகளைச் சேர்ப்பதன்மூலம் பயனர் பெயர்கள் மற்றும் கடவுச்சொற்களை சேகரம் செய்யும் திறனை இது கொண்டுள்ளது.

**8. ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு சம ஊதிய நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. செப்டம்பர்.12

ஆ. செப்டம்பர்.14

**இ. செப்டம்பர்.18 ☑**

ஈ. செப்டம்பர்.20




✓ பாலின ஊதிய இடைவெளியை முன்னிலைப்படுத்தி ஆண்டுதோறும் உலக சம ஊதிய நாள் அனுசரிக்கப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் அவையால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வாகும்; இது செப்டம்பர்.18 அன்று வருகிறது. பன்னாட்டு சம ஊதிய நாள் முதன்முதலில் 1996இல் பே ஈக்விட்டிக்கான தேசியக் குழுவால் அனுசரிக்கப்பட்டது. உலகெங்கிலும் பெண்கள் எதிர்கொள்ளும் பாலின பாகுபாட்டை முடிவுக்குக்கொண்டுவருவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இராம்குமார் இராமநாதன் & பிரஜ்னேஷ் குணேஸ்வரன் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ. டென்னிஸ் ☑**

ஆ. பூப்பந்து

இ. ஸ்குவாஷ்

ஈ. சதுரங்கம்



✓ டேவிஸ் கோப்பை உலக குரூப்–1 டையில், நார்வேயின் லில்லிஹாமரில் நடந்த ஆட்டத்தில் இந்தியா 0–3 என்ற கோல் கணக்கில் நார்வேயிடம் தோல்வியடைந்தது. இந்திய டென்னிஸ் வீரர் இராம்குமார் இராமநாதன் அவரைவிட குறைவான தரவரிசையிலிருந்த துராசோவிச்சிடம் வீழ்ந்தார். மற்றொரு ஒற்றையர் பிரிவில், உலகின் நம்பர் 2ஆவது இடத்தில் உள்ள காஸ்பர் ரூடிடம் பிரஜ்னேஷ் குணேஸ்வரன் வீழ்ந்தார். இரட்டையர் ஆட்டத்தில், உலகின் நம்பர் 2ஆவது இடத்தில் உள்ள காஸ்பர் ரூட் மற்றும் விக்டர் துராசோவிக் அடங்கிய நார்வே ஜோடி, இந்திய ஜோடியான யூகி பாம்ப்ரி–சாகேத் மைனேனியை தோற்கடித்தது.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'The Fabelmans' என்ற திரைப்படத்தின் இயக்குநர் யார்?**

**அ. ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ☑**

ஆ. ஜார்ஜ் லூகாஸ்

இ. மார்ட்டின் ஸ்கோர்செஸி

ஈ. குவென்டின் டரான்டினோ



✓ ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின், 'தி ஃபேபல்மேன்ஸ்' என்ற திரைப்படம் டொராண்டோ பன்னாட்டு திரைப்பட விழாவில் (TIFF) 2022ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க, 'மக்கள் தேர்வு' விருதை வென்றது. இது மிகவும் பிரபலமான மற்றும் ஓரளவு சுயசரிதை சார்ந்த திரைப்படமாகும். TIFF பீப்பிள்ஸ் சாய்ஸ் ஆவணப்பட விருதை ஹூபர்ட் டேவிஸ் இயக்கிய 'பிளாக் ஐஸ்' வென்றது. TIFF பீப்பிள்ஸ் சாய்ஸ் மிட்நைட் மேட்னஸ் விருதை எரிக் அப்பல் இயக்கிய 'வியர்ட்: தி அல் யான்கோவிக் ஸ்டோரி' வென்றது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. திண்டுக்கல், கரூரில் இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு**

இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயங்கள் திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் 11,806 ஹெக்டேர் பரப்பில் அமைக்கப்படுகிறது எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: தேவாங்கு, இரவுநேர பாலூட்டி வகையைச் சேர்ந்தது. அளவில் சிறியதாக இருக்கும் அவை, மரவகை இனத்தைச் சேர்ந்தது. இந்த இனம் பயிர்களுக்குச் சேதம் உண்டாக்கும் பூச்சிகளை வேட்டையாடி விவசாயிகளுக்கு நன்மையயக்கிறது. இதனால், சுற்றுச்சூழல் மற்றும் நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்பில் தேவாங்குகள் முக்கியப்பங்கை வகிக்கின்றன.

இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச மையமானது தேவாங்கை அழிந்துவரும் இனங்களின் பட்டியலில் இணைத்துள்ளது. இந்த உயிரினங்களின் வாழ்விடத்தை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் அவைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தலை தணித்தல் ஆகியவற்றின்மூலம் தேவாங்கு இனத்தின் எண்ணிக்கையை பெருக்கவியலும்.

**கரூர்–திண்டுக்கல்:** அழிந்துவரும் தேவாங்குகள் இனத்தைப் பாதுகாக்கும் வகையில், கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் 11,806 ஹெக்டேர் பரப்பிலான வனப்பகுதிகள் அவற்றின் முக்கிய வாழ்விடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இனத்தை உடனடியாகப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, இந்தியாவின் முதல் தேவாங்குகளுக்கான வனவுயிரி சரணாலயம் கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தது. இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 11 ஆயிரத்து 806.56 ஹெக்டேர் பரப்பிலான நிலத்தைக் கடவூர் தேவாங்கு சரணாலயமாக அறிவித்து அறிவிக்கை செய்துள்ளது.

**புதிய வாழ்விடங்கள்:** தேவாங்கைப்போன்று, வேறு பல அழிந்துவரும் உயிரினங்களைக் காக்கவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, கடற்பசு பாதுகாப்பகம், கழுவேலி பறவைகள் சரணாலயம், அகத்தியர் மலை யானைகள் பாதுகாப்பகம், திருப்பூர் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம், 13 ஈரநிலப்பகுதிகளை இராம்சர் சாசனப்பகுதிகளில் இடம்பெறச்செய்தது போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை தெரிவித்துள்ளது.

---

**2. 4ஆவது, 'வந்தே பாரத்' இரயிலைத் தொடங்கிவைத்தார் பிரதமர் மோதி.**

ஹிமாசல பிரதேசத்தில், 'வந்தே பாரத்' விரைவு இரயிலின் நான்காவது ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைத்தார். நாட்டின் அதிவேக ரயிலான வந்தே பாரத் விரைவு ரயில் சுமார் 160 கிமீ வேகத்தில் பயணிக்க கூடியது. இந்த இரயில் சேவை கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. வந்தே பாரத் விரைவு ரயிலின் 3ஆவது ரயில் சேவையை குஜராத்தின் காந்தி நகருக்கும் மகாராஷ்டிரத்தின் மும்பைக்கும் இடையே கடந்த மாதம் பிரதமர் மோதி தொடக்கி வைத்தார்.

இந்நிலையில், 4ஆவது இரயில் சேவையை ஹிமாசல பிரதேச மாநிலம் உனா இரயில் நிலையத்திலிருந்து தில்லி செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை பிரதமர் நரேந்திர மோதி கொடியசைத்து தொடக்கிவைத்தார்.

---

**3. 'குட்டி காவலர்' மாணவர்களுக்கான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டம்: முதல்வர் தொடக்கி வைத்தார்**

'குட்டி காவலர்' என்ற மாணவர்களுக்கான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டத்தை முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இளம் பள்ளிச்சிறார்களுக்கு சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வுபற்றி நன்கு வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்மூலம் சாலைப்பாதுகாப்பு குறித்து கற்பித்து அவர்களை சாலைப்பாதுகாப்பின் தூதுவர்களாக மாற்றுவதே, 'குட்டி காவலர்' திட்டத்தின் நோக்கமாகும்.

---

**4. குவைத்துக்கான புதிய இந்திய தூதர் நியமனம்**

வளைகுடா நாடுகளில் ஒன்றான குவைத் நாட்டுக்கான புதிய இந்திய தூதராக வெளியுறவுப்பணி மூத்த அதிகாரி ஆதர்ஷ் ஸ்வைகா நியமிக்கப்பட்டார். கடந்த 2002ஆம் ஆண்டு பிரிவு இந்திய வெளியுறவுப்பணி அதிகாரியான ஆதர்ஷ் ஸ்வைகா, தில்லியிலுள்ள வெளியுறவுத்துறை அமைச்சக தலைமையகத்தில் இணைச்செயலராக தற்போது பணியாற்றி வருகிறார். அவர் விரைவில் தனது புதிய பொறுப்பை ஏற்பார் என்று அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குவைத்துக்கான தற்போதைய இந்திய தூதராக சிபி ஜார்ஜ் உள்ளார்.

வளைகுடா நாடுகளில் இந்தியாவின் முக்கிய கூட்டுறவு நாடாக குவைத் கருதப்படுகிறது. இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவு கடந்த சில ஆண்டுகளாக மேம்பட்டு வருகிறது. இதேபோல், கினியா குடியரசுக்கான அடுத்த இந்திய தூதராக ஔதார் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது வெளியுறவு அமைச்சகத்தில் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

---

**5. சர்வீசஸ் சாம்பியன்; தமிழ்நாடு 5ஆம் இடம்**

குஜராத்தில் நடைபெற்று வந்த 36ஆவது தேசிய விளையாட்டுப்போட்டிகள் நிறைவடைந்தன. இந்தப் போட்டியில் தொடர்ந்து 4ஆவது முறையாக சர்வீசஸ் அணி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது. தமிழ்நாடு 5ஆம் இடம் பிடித்தது. போட்டியின் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த சர்வீசஸ் அணிக்கு ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பை வழங்கப்பட்டது. மகாராஷ்டிரம், ஹரியானா முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தன. போட்டி முழுவதுமாக சிறப்பாகச் செயல்பட்ட அணியாக மகாராஷ்டிரம் தேர்வானது.

**வெள்ளியுடன் நிறைவுசெய்த தமிழ்நாடு:** கடைசி நாளான புதன்கிழமை, வாலிபால் ஆடவர் பிரிவு இறுதிச்சுற்றில் தமிழ்நாடு 0–3 என்ற கணக்கில் கேரளத்திடம் வெற்றியை இழந்து வெள்ளிப்பதக்கம் பெற்றது. போட்டியில் தமிழகம் மொத்தமாக 20 விளையாட்டுகளில் 74 பதக்கங்கள் வென்றுள்ளது. இதில் அதிகபட்சமாக தடகளத்தில் 7 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலம் என 18 பதக்கங்கள் கிடைத்துள்ளது.

**சிறந்த வீரர், வீராங்கனை...**

கேரளத்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ், இப்போட்டியில் 5 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என மொத்தமாக 8 பதக்கங்கள் வென்று சிறந்த வீரராகத் தேர்வானார். கர்நாடக நீச்சல் வீராங்கனை ஹாஷிகா இராமச்சந்திரா 6 தங்கம், 1 வெண்கலத்துடன் போட்டியிலேயே சிறந்த வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டார்.

---

**1. LEADS (Logistics Ease Across Different States) – 2022 என்ற அறிக்கையில் சரக்குப் போக்குவரத்து ரீதியில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திர பிரதேசம் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

✓ நடுவண் வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் LEADS (பல்வேறு மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரத்தை எளிதாக்குதல்) – 2022 என்ற அறிக்கையை வெளியிட்டது. 2022 – சரக்குப் போக்குவரத்திற்கான குறியீட்டில் சாதனையாளர்களாக வகைப்படுத்தப்பட்ட 15 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் குஜராத் ஆகியவை அடங்கும். இந்தக் குறியீடு ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குத் தேவையான சரக்குப் போக்குவரத்துச் சேவைகளின் செயல்திறனைக் குறிக்கிறது.

**2. '2022 – Living Planet' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ. இயற்கைக்கான உலகளாவிய நிதியம் ☑**

ஆ. UNEP

இ. UNESCO

ஈ. FAO

✓ இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் (WWF) அண்மைய 'Living Planet' என்ற அறிக்கையின்படி, கடந்த 50 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பாலூட்டிகள், பறவைகள், அருவிகள், ஊர்வனங்கள் மற்றும் மீன்களின் வன உயிரிகளின் எண்ணிக்கையில் 69% சரிவு ஏற்பட்டுள்ளது. அதிகபட்ச சரிவு (94%) இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதியில் காணப்படுகிறது. பல்லுயிர் இழப்பு மற்றும் காலநிலை நெருக்கடி ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பதையும் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. ஆப்பிரிக்கா 1970–2018 வரை அதன் வனவுயிரி எண்ணிக்கையில் 66% வீழ்ச்சியையும் ஆசியா பசிபிக் 55 சதவீத வீழ்ச்சியையும் பதிவுசெய்துள்ளது.

**3. நூற்றுக்கணக்கான வலவம் திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கிய பிட் தீவு அமைந்துள்ள நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. நியூசிலாந்து ☑**

இ. ஜப்பான்

ஈ. இந்தோனேசியா



✓ நியூசிலாந்தின் பசிபிக் பெருங்கடலில் உள்ள பிட் தீவில் 240 வலவம் திமிங்கலங்கள் இறந்து கரையொதுங்கின. மனித நடமாட்டம் வெகு குறைவாக உள்ள பிட் தீவு மற்றும் சாதம் தீவுகள் தீவுக்கூட்டத்தில் இந்தத் திமிங்கலங்களின் இறந்த உடல் கண்டுபிடிக்கப்பட்டது. ஏற்கெனவே, அந்நாட்டின் கடற்கரையில் நிகழ்ந்த சில மர்மமான நிகழ்வுகளைத் தொடர்ந்து 215 திமிங்கலங்கள் இறந்தன.

**4. அழிந்துவரும் உயிரினமான தேவாங்கிற்கு (Slender Loris) இந்தியாவிலேயே முதன்முறையாக சரணாலயம் அமைக்கவுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

**அ. தமிழ்நாடு ☑** ஆ. அஸ்ஸாம்

இ. கோவா ஈ. கர்நாடகா



✓ அழிந்துவரும் உயிரினமான தேவாங்கிற்கு (Slender Loris) இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சரணாலயம் அமைக்கப்படவுள்ளது. கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட வனப்பகுதிகளில் 11,806 ஹெக்டேர் பரப்பை இணைத்து கடவூரில் தேவாங்கு சரணாலயம் உருவாக்கப்படும். பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின்படி, தேவாங்கு அழிந்துவரும் உயிரினமாக பட்டியலிடப்பட்டுள்ளது. இரவுநேரத்தில் உணவைத்தேடும் பாலூட்டியான இது தனது வாழ்நாளின் பெரும்பகுதியை மரங்களில் செலவிடுகிறது. வேளாண் பயிர்களுக்கு தீங்குவிளைவிக்கும் பூச்சிகளை வேட்டையாடி இயற்கை வேட்டையாடியாகத் திகழ்வதன்மூலம் அவை உழவர்களுக்கு உதவுகின்றன.

**5. CSIR–NITI ஆயோக் அறிக்கையின்படி, ஈய நச்சுத்தன்மையால் அதீத சுகாதார மற்றும் பொருளாதாரச் சுமையைத் தாங்குகிற நாடு எது?**

அ. ஆப்கானிஸ்தான்

ஆ. நேபாளம்

**இ. இந்தியா ☑**

ஈ. இலங்கை




✓ NITI ஆயோக் மற்றும் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR) ஆகியவை இணைந்து தயாரித்த ஓரறிக்கையின்படி, ஈய நச்சுத்தன்மையால் உலகிலேயே அதிக சுகாதார மற்றும் பொருளாதாரச் சுமையை இந்தியா தாங்கி வருகிறது. பீகார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ஜார்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அதீத சராசரி குருதி ஈய அளவைக் (Blood Lead Levels) கொண்டுள்ளன.

✓ UNICEF மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனமான பியூர் எர்த்தின் கடந்த 2020ஆம் ஆண்டைய அறிக்கையின்படி, உலகளவில் ஈய நச்சுத்தன்மையால் பாதிக்கப்பட்ட எண்ணூறு மில்லியன் குழந்தைகளுள் இந்தியாவில் பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் உள்ளனர். இதன் பொருள் இந்தியாவின் குழந்தைகளில் பாதிபேர் ஈய நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

**6. 2022ஆம் ஆண்டில் துரந்த் கோப்பையை வென்ற கால்பந்தணி எது?**

அ. மும்பை சிட்டி FC

**ஆ. பெங்களூரு FC ☑**

இ. சென்னையின் FC

ஈ. கேரளா பிளாஸ்டர்ஸ்

✓ பெங்களூரு FC–உம் அதன் அணித்தலைவர் சுனில் சேத்ரியும் இறுதிப்போட்டியில் மும்பை சிட்டி FC அணியை வீழ்த்தி தங்கள் முதல் துரந்த் கோப்பைக்கான கால்பந்து போட்டி பட்டத்தை வென்றனர். இதன்மூலம் 38 வயதான சுனில் சேத்ரி தனது முதல் துரந்த் கோப்பையை வென்றார். பெங்களூரு FC அணி கடந்த 2013ஆம் ஆண்டு முதல் துரந்த் கோப்பை வெற்றியைப் பதிவு செய்து வருகிறது.

**7. அண்மையில் எந்த நாட்டின் அதிபராக, ஜோனோ லோரென்சோ என்பவர் பதவியேற்றார்?**

அ. துருக்கி

ஆ. ஹங்கேரி

**இ. அங்கோலா ☑**

ஈ. மாலத்தீவுகள்



✓ மத்திய ஆப்பிரிக்க நாட்டின் தலைநகரமான லுவாண்டாவில் அங்கோலா நாட்டு அதிபராக ஜோனோ லோரென்சோ என்பார் இரண்டாம் முறையாக பதவியேற்றார். நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகளால் கடுமையாக சர்ச்சைக்குள்ளானது. 1975ஆம் ஆண்டில் போர்ச்சுகலில் இருந்து விடுதலை அடைந்ததிலிருந்து ஆட்சியிலிருந்து வரும் அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கம் தற்போதைய தேர்தலிலும் வெற்றி பெற்றது.

**8. 32 ஆண்டு சேவைக்குப் பிறகு அண்மையில் சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட கடற்படைக்கப்பல் எது?**



அ. INS அம்ரித்

**ஆ. INS அஜை ☑**

இ. INS அக்ஷய்

ஈ. INS அபையா

✓ இந்தியக் கடற்படைக் கப்பல் அஜை (P34) நாட்டிற்கு 32 ஆண்டுகால சிறப்பான சேவையாற்றிய பிறகு சமீபத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டது. அதன் பணி நீக்க விழா மும்பையில் உள்ள கடற்படைக் கப்பல் தளத்தில் நடைபெற்றது. INS அஜை என்பது மேற்குக் கடற்படைக் கட்டளையின் அபை வகை நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க்கப்பலாகும். இந்தக் கப்பல் 1990 ஜனவரி.24இல் பணிக்குச் சேர்க்கப்பட்டது. இது 1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது, 'ஆபரேஷன் தல்வார்' மற்றும் 2001இல், 'ஆபரேஷன் பராக்கிரமம்' உட்பட பல்வேறு பணிகளுக்கு அனுப்பப்பட்டது.

**9. "A watershed moment: transformative solutions to interlocking challenges" என்பது 2022இல் நடைபெற்ற எந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்?**



அ. SCO உச்சிமாநாடு – 2022

ஆ. WHO உலக சுகாதார அவை

இ. G20 உச்சிமாநாடு

**ஈ. ஐநா பொதுச்சபை அமர்வு ☑**

✓ ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77ஆவது அமர்வு (UNGA–77) அண்மையில் நியூயார்க்கில் தொடங்கியது. ஐநா பொதுச்சபை என்பது ஐநா அவையின் முதன்மையான கொள்கை உருவாக்கும் ஓர் அமைப்பாகும். COVID–19, கால நிலை மாற்றம் மற்றும் மோதல்கள் மற்றும் உலகளாவிய நிலைத்தன்மை மற்றும் நெகிழ்திறனைக் கட்டியெழுப்புவ –தற்கான தீர்வுகளின் தேவைபோன்ற நெருக்கடிகளை மையமாகக்கொண்டு, "A Watershed Moment: Transformative Solutions to Interlocking Challenges" இந்த ஆண்டு உச்சிமாநாட்டிற்கான கருப்பொருள் உள்ளது.

**10. சியாச்சின் பனிப்பாறைப் பகுதியில் செயற்கைக்கோள் வழியான அகலக்கற்றை அடிப்படையிலான இணைய சேவையைக் கொண்டுவருவதற்காக, இந்திய இராணுவம், கீழ்க்காணும் எந்நிறுவனத்துடன் கூட்டிணைந்தது?**

அ. ஏர்டெல்

ஆ. ஜியோ

**இ. BBNL ☑**

ஈ. வி!

✓ இந்திய இராணுவம், பாரத அகலக்கற்றை வலையமைப்பு நிறுவனத்துடன் (BBNL) இணைந்து சியாச்சின் பனிப் பாறைப்பகுதியில் செயற்கைக்கோள் வழியான அகலக்கற்றை (broadband) அடிப்படையிலான இணைய சேவையைக் கொண்டுவந்துள்ளது. இமயமலையின் கிழக்குக் காரகோரம் மலைத்தொடரில் 19,061 அடி உயரத்தில் சியாச்சின் பனிப்பாறை அமைந்துள்ளது. BBNL என்பது முற்றிலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான அகலக்கற்றை அடிப்படையிலான இணைய சேவையை வழங்கும் ஒரு நிறுவனமாகும். தொலைதூர கிராமங்களுக்குச் செயற்கைக்கோள்கள்மூலம் இணைய இணைப்பு வழங்கும், 'பாரத் நெட்' என்ற திட்டத்தின்கீழ் இது செயல்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதல் தேசிய நிலக்கரி மாநாடு மற்றும் கண்காட்சி தில்லியில் 2022 அக்.16, 17 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது**

நடுவண் நிலக்கரி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் இந்திய தேசிய குழு, "தற்சார்பு இந்தியாவை நோக்கி இந்திய நிலக்கரித்துறை" என்ற கருப்பொருளில் இரண்டு நாள் தேசிய மாநாட்டை, புது தில்லியில் அக்டோபர்.16, 17 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்துள்ளது. இந்த இரண்டு நாள் மாநாடு, கொள்கை இயற்றுவோர், பொது மற்றும் தனியார் சுரங்க நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் கலந்துரையாடவும், தற்சார்பு இந்தியா திட்டத்துடன் இந்திய நிலக்கரி துறையை இணைப்பதற்கு தேவையான திட்டங்களை வகுக்கவும் சரியான தளத்தை வழங்கும். மின்சார தயாரிப்பில் எரிபொருளில் தன்னிறைவு பெறுதல், தற்சார்பு இந்தியாவில் நிலக்கரிக்கான எஃகு தயாரிப்பு, தொழில்நுட்பம் & நிலைத்தன்மை ஆகியவை மாநாட்டின் கருப்பொருளாக இருக்கும்.

---

**2. ஏழாவது இந்தியா–பிரேசில் –தென்னாப்பிரிக்கா கடற்படை பயிற்சியில் INS தர்காஷ் பங்கேற்றது**

ஏழாவது இந்தியா–பிரேசில்–தென்னாப்பிரிக்கா கடற்படை பயிற்சி தென்னாப்பிரிக்காவின் எலிசபெத் துறைமுகத்தில் 2022 அக்.10 முதல் 12 வரை நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் ஏவுகணையை தாங்கிச்செல்லும் INS தர்காஷ், சேதக் ஹெலிகாப்டர் மற்றும் மார்கோஸ் சிறப்புப்படைகள் இந்திய கப்பற்படை சார்பில் பங்கேற்றன. கடல்சார் உறவுகளை வலுப்படுத்துதல், கூட்டு இராணுவ பயிற்சியை மேம்படுத்துதல், கடல்சார் குற்றங்களை முறியடித்தல், கடல் வழியான தொடர்புகளைப் பாதுகாத்தல் உள்ளிட்டவை இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

---

**1. தற்போது செயல்பாட்டில் உள்ள PSLV ஏவுகல அமைப்பிற்கு மாற்றாக ISROஆல் முன்மொழியப்பட்டுள்ள NGLV ஏவுகல அமைப்பில், 'N' என்பது எதைக் குறிக்கிறது?**

அ. New

**ஆ. Next ☑**

இ. Novel

ஈ. Node

✓ NGLV (Next–Gen Launch Vehicle) என்பது தற்போது செயல்பாட்டில் உள்ள PSLV (Polar Satellite Launch Vehicle) ஏவுகல அமைப்பிற்கு மாற்றாக எதிர்காலத்தில் வரவுள்ள ஏவுகல அமைப்பாகும். NGLV என்பது மூந்நிலைகொண்ட மிககனச்சுமையைத் தாங்கக்கூடிய மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஒரு ஏவுகலமாகும். இது, 10,000 கிகிராம் வரை புவிநிலை இடைப்பாதைக்கும் (GTO) 20,000 கிகிராம் வரை தாழ் புவி சுற்றுப்பாதைக்குக்கும் (LEO) கொண்டு செல்லும் திறன்கொண்டதாகும். இது அரை–கிரையோஜெனிக் உந்துவிசையைக் கொண்டு இயங்கும்.

**2. 'The most incredible world cup stories – Anecdotes from Football World Cup, From Uruguay in 1930 to today' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**அ. லூசியானோ வெர்னிக்கே ☑**

ஆ. இராபர்ட் லெவன்டோவ்ஸ்கி

இ. டியாகோ மரடோனா

ஈ. கிறிஸ்டியானோ ரொனால்டோ



✓ 'The most incredible world cup stories – Anecdotes from Football World Cup, From Uruguay in 1930 to today' என்பது அர்ஜென்டினாவைச் சேர்ந்த லூசியானோ வெர்னிக்கே என்பவர் எழுதிய நூலாகும். 'நியோகி புக்ஸ்' என்ற நிறுவனத்தால் இந்நூல் வெளியிடப்பட்டது. கால்பந்தாட்டத்தின் வேடிக்கையான, ஈர்ப்புமிக்க மற்றும் சர்ச்சைக்குரிய நிகழ்வுகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. FIFA உலகக்கோப்பையின் 22ஆம் பதிப்பானது, இந்த ஆண்டு (2022) கத்தாரால் நடத்தப்படவுள்ளது.

**3. 'பாரத் கிருஷி செயற்கைக்கோள் திட்டத்தின்' கீழ், இந்தியாவின் முழு வேளாண் பகுதியையும் உள்ளடக்குவதற்கு குறைந்தபட்சம் எத்தனை செயற்கைக்கோள்கள் தேவைப்படும்?**

**அ. 2 ☑**

ஆ. 3

இ. 4

ஈ. 5

✓ 'பாரத் கிருஷி செயற்கைக்கோள் திட்டம்' என்பது வேளாண் துறையில் ISRO மேற்கொள்ளும் ஓர் அர்ப்பணிப்பு மிகுந்த திட்டமாகும். இது வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசனம், பயிர் தரவு, வறட்சி புள்ளிவிவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கும். நாட்டின் முழு வேளாண் பகுதியையும் உள்ளடக்குவதற்கு குறைந்தபட்சம் இரண்டு செயற்கைக்கோளாவது தேவைப்படும்.

**4. உலக வனவுயிரி நிதியத்தால் வெளியிடப்பட்ட, 'Living Planet' என்ற அறிக்கையின்படி, கடந்த 50 ஆண்டுகளில் கண்காணிப்பின் கீழிருந்த வனவுயிரிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு சதவீதம் என்ன?**

அ. 34% ஆ. 46%

**இ. 69% ☑** ஈ. 72%

- ✓ WWF வெளியிட்ட, 'Living Planet' என்ற அறிக்கையின்படி, 1970 – 2018–க்கு இடையில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் கண்காணிப்பின் கீழிருந்த வனவுயிரிகளின் எண்ணிக்கை (பாலூட்டிகள், இருவாழ்விகள், மீன், ஊர்வன உட்பட) 69% குறைந்துள்ளது. இத்தகைய வீழ்ச்சிக்கான காரணம் கடுமையான மற்றும் அழிவுகரமான காலநிலை மாற்றம், மாசுபாடு, நிலம் மற்றும் வாழ்விட சீரழிவு, நோய்கள், ஆக்கிரமிப்பு இனங்கள் மற்றும் பல எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. பன்னாட்டு குற்றவியல் காவலமைப்பின் (INTERPOL) பொதுச்சபை நடைபெற்ற நகரம் எது?**

அ. பாரிஸ்

ஆ. திருநெல்வேலி

**இ. தில்லி ☑**

ஈ. சிங்கப்பூர்

- ✓ பன்னாட்டு குற்றவியல் காவலமைப்பு (INTERPOL) என்பது பிரான்ஸின் லியோனைத் தலைமையிடமாகக்கொண்ட ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இது 1923ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதுபோன்ற மாநாட்டை இந்தியா நடத்துவது 1997ஆம் ஆண்டிற்குப்பின் இது 2ஆம் முறையாகும். INTERPOLஇன் பொதுச்சபையானது 4 ஆண்டு பதவிக்காலம் கொண்ட ஒரு தலைவரின் கீழ் உள்ளது. அதன் தற்போதைய தலைவராக ஐக்கிய அரபு அமீரகத்தின் அகமது நசீர் அல்–ரைசி உள்ளார்.

**6. 2022ஆம் ஆண்டில் வந்த, 'பன்னாட்டு காதுகேளாதோர் வாரத்திற்கான' கருப்பொருள் என்ன?**

அ. Leaving No One Behind

**ஆ. Building Inclusive Communities for All ☑**

இ. Sustainability and Inclusivity

ஈ. Accessible Technologies

- ✓ செப்டம்பர் மாதத்தில் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி அம்மாதம் முடிவடையும் முழு வாரமும் ஒவ்வோர் ஆண்டும் பன்னாட்டு காது கேளாதோர் வாரமாக அனுசரிக்கப்படுகிறது. 2022இல், செப்டம்பர்.19 முதல் செப்டம்பர்.25 வரை பன்னாட்டு காது கேளாதோர் வாரம் அனுசரிக்கப்பட்டது. "Building Inclusive Communities for All" என்பது நடப்பு 2022இல் வரும் பன்னாட்டு காது கேளாதோர் வாரத்திற்கான கருப்பொருளாகும். இந்த அனுசரிப்பு என்பது உலக காதுகேளாதோர் கூட்டமைப்பின் ஒரு முனைவாகும்; இது முதன்முதலில் கடந்த 1958இல் ரோமில் தொடங்கப்பட்டது.

**7. ஆசிய பசிபிக் கருத்துக்களத்தின் நிர்வாகக்குழுவின் உறுப்பினராக இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**



அ. நீதியரசர் இரஞ்சன் கோகோய்

ஆ. நீதியரசர் சதாசிவன்

**இ. நீதியரசர் அருண் குமார் மிஸ்ரா ☑**

ஈ. நீதியரசர் N V இரமணா

- ✓ தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவரும், ஓய்வுபெற்ற நீதியரசருமான அருண் குமார் மிஸ்ரா, ஆசிய பசிபிக் கருத்துக்களத்தின் நிர்வாகக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணியின் (GANHRI) பணியகத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடு –க்கப்பட்டுள்ளார். GANHRI என்பது உலகின் மிகப்பெரிய மனித உரிமை வலையமைப்புகளுள் ஒன்றாகும்.

**8. உலகின் முதல் சிவிங்கிப்புலி மறுவாழ்வு திட்டத்தைத் தொடங்கியுள்ள நாடு எது?**



அ. வங்காளதேசம்

**ஆ. இந்தியா ☑**

இ. ஜப்பான்

ஈ. ஹங்கேரி

✓ 'மீண்டும் சிவிங்கிப்புலி' திட்டத்தின்கீழ் நமீபியாவில் இருந்து எட்டுச்சிறுத்தைகள் கொண்டுவரப்பட்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இரு வெவ்வேறு கண்டங்களுக்கு இடையே ஒரு மாமிச உண்ணியை இடமாற்றம் செய்யும் உலகின் முதல் மறுவாழ்வுத் திட்டமாகும் இது. சிவிங்கிப்புலி மித்ராஸ் மற்றும் சிவிங்கிப்புலிகள் புனர்வாழ்வு மேலாண்மை குழுவின்படி, எட்டுச்சிறுத்தைகளில் ஐந்து பெண்ணும் மூன்று ஆணும் ஆகும்.

**9. 'இந்தியாவின் முதல் ஸ்வச் சுஜல் பிரதேசம்' என அறிவிக்கப்பட்டுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ. கேரளா

ஆ. ஹிமாச்சல பிரதேசம்

இ. அஸ்ஸாம்

**ஈ. அந்தமான் மற்றும் நிக்கோபார் ☑**

✓ நடுவண் ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளை இந்தியாவின் முதல் ஸ்வச் சுஜல் பிரதேசமாக அறிவித்தார். இந்தியாவின் முதல் "தூய மற்றும் சுஜல் பிரதேசம்" என்பதற்கான சான்றிதழை துணைநிலை ஆளுநர் அட்மிரல் DK ஜோஷியிடம் நடுவண் ஜல் சக்தி அமைச்சர் வழங்கினார். அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் யூனியன் பிரதேசத்தின் அனைத்து கிராமங்களும் ஹர் கர் ஜல் மற்றும் ODF (திறந்தவெளி மலங்கழித்தலற்ற) பிளஸ் எனச் சான்று பெற்றுள்ளன.

**10. 2022 – பன்னாட்டு அமைதி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. End racism; Build peace ☑**

ஆ. Anti-casteism for peace

இ. Equality and Inclusivity

ஈ. Humans for Peace

✓ 'பன்னாட்டு அமைதி நாளானது' செப்.21 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது இந்த நாள் முழுவதும் 24 மணி நேரமும் அகிம்சை மற்றும் போர்நிறுத்தத்தை கடைப்பிடிக்கிறது. "End racism; Build peace – இனவெறிக்கு முற்றுப்புள்ளி; அமைதியைக் கட்டியெழுப்புங்கள்" என்பது 2022ஆம் ஆண்டில் வந்த பன்னாட்டு அமைதி நாளுக்கானக் கருப்பொருளாகும். இனவெறி மற்றும் இனப்பாகுபாடு இல்லாத உலகத்தை உருவாக்கும் நோக்கத்திற்காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆசிய மகளிர் டி20 சாம்பியன் இந்தியா: 7ஆவது முறையாக பட்டம் வென்றது**

ஆசிய மகளிர் டி20 கிரிக்கெட் போட்டியின் இந்தியா 7ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. வங்கதேசத்தின் சைலெட் நகரத்தில் ஆசிய மகளிர் டி20 கோப்பை போட்டிகள் நடைபெற்றன. இதன் இறுதிப்போட்டி இந்தியா–இலங்கை அணிகள் இடையே நடைபெற்றது.

ஆட்ட, தொடர் நாயகி:

ரேணுகா சிங் ஆட்ட நாயகியாகவும், தீப்தி சர்மா தொடர் நாயகியாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

**7ஆவது முறையாக சாம்பியன்:** இதுவரை எட்டு முறை நடைபெற்ற ஆசிய டி20 கோப்பை போட்டிகளில் இந்தியா 7ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

---

**2. சர்வதேச பட்டினி குறியீட்டில் இந்தியாவுக்கு 107ஆவது இடம்**

சர்வதேச பட்டினி குறியீடு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சர்வதேச, பிராந்திய, தேசிய அளவில் பசியால் வாடும் மக்களின் நிலைகுறித்து கண்டறிவதற்கு இந்த அறிக்கை பெரிதும் உதவுகிறது. தரவுகள் திரட்டப்பட்ட 121 நாடுகளுக்கான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் இந்தியா 107ஆவது இடத்தில் உள்ளது. கடந்த 2020இல் இந்தியா 94ஆவது இடத்தில் இருந்தது.

பசி விவகாரத்தில் இந்தியா, 'தீவிர அபாயம்'கொண்ட நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தெற்காசியாவில் ஆப்கானிஸ்தான் தவிர மற்ற அனைத்து நாடுகளும் இந்தியாவைவிட சிறப்பாகச் செயல்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமாக, உயரத்துக்குத் தகுந்த எடை இலாத குழந்தைகள் உலகளவில் இந்தியாவில்தான் அதிகம் உள்ளதாக அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அறிக்கையின் முக்கிய விவரங்கள்:

**பட்டியலில் முதல் 3 நாடுகள்**

பெலாரஸ்

போஸ்னியா

சிலி

**இந்திய அண்டை நாடுகளின் நிலை**

| | | |
|---|---|---|
| இலங்கை – 64 | நேபாளம் – 81 | பாகிஸ்தான் – 99 |
| மியான்மர் – 71 | வங்கதேசம் – 84 | ஆப்கானிஸ்தான் – 109 |

**இந்தியாவின் நிலை**

2022 – 107 (121 நாடுகள்)

2021 – 101 (116 நாடுகள்)

2020 – 94 (107 நாடுகள்)

---

**3. உலக துப்பாக்கி சுடுதல்: தங்கம் வென்று ருத்ராங்ஷ் சாதனை**

உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் ருத்ராங்ஷ் பாட்டீல் தங்கப்பதக்கம் வென்றார். அந்தப் பிரிவின் இறுதிச்சுற்றில் ருத்ராங்ஷ் 17–13 என்ற புள்ளிகள் கணக்கில் இத்தாலியின் டேனிலோ டெனிஸ் சொலாஸோவை வீழ்த்தி முதலிடம் பிடித்தார். இது அவரின் முதல் உலக சாம்பியன்ஷிப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை ருத்ராங்ஷ் பெற்றுள்ளார். முன்னதாக இதே பிரிவில் அபினவ் பிந்த்ரா 2006ஆம் ஆண்டு குரோஷியாவில் நடைபெற்ற போட்டியில் தங்கத்தை தனதாக்கியிருந்தார்.

**1. SARS–CoV–2 வைரஸுக்கு எதிரான இந்தியாவின் முதல் மாற்று மருந்தின் பெயர் என்ன?**



**அ. VINCOV–19 ☑** ஆ. ANTICOV–19

இ. COVEX–19 ஈ. NOCOV–19

✓ VINCOV–19 என்னும் SARS–CoV–2 வைரஸுக்கு எதிரான இந்தியாவின் முதல் மாற்று மருந்தானது தற்போது சந்தை அங்கீகாரம் பெறவும் கட்டம்–3 மருத்துவ பரிசோதனைகளுக்கும் தயார்நிலையில் உள்ளது. ஹைதராபாத் பல்கலைக்கழகம், செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் மற்றும் நோயெதிர்ப்பு நிறுவனமான VINS பயோப்ராடக்ட்ஸ் லிட் ஆகியவற்றின் கூட்டு முயற்சியான இந்த மருந்து அண்மையில் கட்டம்–2 சோதனைகளை நிறைவேற்றியது. இந்தியாவில் உள்ள பல்வேறு மையங்களில் இருநூற்றுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இடையே இது ரீதியான சோதனை நடத்தப்பட்டது.

**2. நெய்பியு ரியோ என்பவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் முதலமைச்சராக உள்ளார்?**



**அ. நாகாலாந்து ☑**

ஆ. மணிப்பூர்

இ. மேகாலயா

ஈ. மிசோரம்

✓ நாகாலாந்து மாநில முதலமைச்சர் நெய்பியு ரியோ 2022 அக்டோபர்.14 அன்று மாநில மக்களுக்கான உலகளாவிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கினார். நடுவணரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் இணைந்து முதலமைச்சரின் உடல்நலக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் நோக்கம், மருத்துவமனையில் சேர்க்கும் செலவுகள் காரணமாக ஏற்படும் நிதிக் கஷ்டங்களைத் தணிப்பதாகும். இந்தத் திட்டம் CMHIS ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர், மற்றும் CMHIS (பொது) என மூவகைப்படுத்தப்பட்டுள்ளது.

**3. 2022 அக்டோபரில் நடைபெற்ற ஆறாவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வி அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்ற நகரம் எது?**



அ. காத்மாண்டு, நேபாளம்

**ஆ. ஹனோய், வியட்நாம் ☑**

இ. சிங்கப்பூர்

ஈ. கோலாலம்பூர், மலேசியா

✓ 2022 அக்.14 அன்று வியட்நாமின் ஹனோயில் நடைபெற்ற 6ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வியமைச்சர் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது. கல்வியமைச்சகத்தின் இணைச்செயலர் (பன்னாட்டு ஒத்துழைப்பு) நீதா பிரசாத் அவர்கள் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர், தேசிய கல்விக் கொள்கை – 2020இன் முகன்மை முனைவுகள் மற்றும் உறுப்புநாடுகளுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இந்தியாவின் கூட்டு முனைவுகள் குறித்து விளக்கமுற தெரிவித்தார்.

**4. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் யார்?**

அ. இந்தியக்குடியரசுத்தலைவர் **ஆ. இந்தியப்பிரதமர் ☑**

இ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சர் ஈ. செயலர், அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகமானது கடந்த 1942 செப்டம்பரில் இந்திய அரசாங்கத்தால் ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. இது இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பாக உருவெடுத்துள்ளது. இந்தியப்பிரதமர் அதன் தலைவராகப் பணியாற்றுகிறார். சமீபத்தில், பிரதமர் நரேந்திர மோதி, 2022 அக்டோபர்.15 அன்று புது தில்லியில் நடந்தேறிய அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழக (CSIR) சங்கத்தின் கூட்டத்திற்கு தலைமைதாங்கினார்.

**5. ஆசிய கடலோரக் காவல் முகமைகளின் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற நகரம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. மும்பை

இ. கொல்கத்தா

ஈ. சென்னை

✓ 2022 அக்டோபர்.15 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஆசிய கடலோரக் காவல்படை முகமைகளின் 18ஆவது தலைவர்கள் கூட்டத்தில் பாதுகாப்பு துறை அமைச்சர் இராஜநாத் சிங் உரையாற்றினார். இந்திய கடலோரக் காவற் படை, ஆசிய கடலோரக் காவல்படை முகமைகளின் செயலகத்துடன் இணைந்து 18ஆவது கூட்டத்தை வரும் 18ஆம் தேதி வரை நடத்துகிறது. பதினெட்டு நாடுகள் மற்றும் இரண்டு சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்த மொத்தம் 55 பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கின்றனர்.

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற போகிபீல் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. சிக்கிம்


**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. உத்தரகாண்ட்

ஈ. மேற்கு வங்காளம்

✓ இந்தியாவின் மிகநீளமான 4,000 கிமீ நீளமான ஆற்றுவழி கப்பல் சேவையானது 2023ஆம் ஆண்டில் தொடங்கும் என நடுவண் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அண்மையில் அறிவித்தார். உத்தரபிரதேசத்தின் வாரணாசி மற்றும் அஸ்ஸாமில் உள்ள போகிபீல் இடையே ஆற்று வழி கப்பல் சேவை இயக்கப்படும். இந்த நீர்வழி கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகளை இந்தோ–வங்கதேச புரோட்டோகால் வழித்தடத்தின் ஊடாக இணைக்கும். வடகிழக்கு எல்லைப்புற இரயில்வேயால் (NFR) கட்டப்பட்ட போகிபீல் பயணிகள் படகுப் போக்குவரத்துச் சேவையையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

**7. எந்தக்கோளின் நிலவுகள், 'கலீலிய நிலவுகள்' என்று அழைக்கப்படுகின்றன?**



அ. சனி

**ஆ. வியாழன் ☑**

இ. வெள்ளி

ஈ. புதன்

✓ 'கலீலிய நிலவுகள்' அல்லது 'கலீலிய செயற்கைக்கோள்கள்' வியாழனின் நான்கு பெரிய நிலவுகளான ஐயோ, யூரோபா, கனிமீடு மற்றும் கேலிஸ்டோ ஆகும். இவை நான்கும் முதலில் 1609–1610இல் கலீலியோ கலீலியால் கண்டறியப்பட்டது. NASAஇன் கூற்றுப்படி, செப்.26 அன்று, வியாழன் கடந்த 59 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பூமிக்கு மிக அருகில் வந்தது. பைனாகுலர்மூலம் பார்க்கும்போது வியாழன் கோளின் வளையமும் மூன்று அல்லது நான்கு கலீலிய நிலவுகளும் தெரியும்.

**8. 2022ஆம் ஆண்டு உலக நிதியியல் மையங்கள் குறியீட்டில் முதலிடம் பிடித்த நகரம் எது?**

அ. ஹாங்காங் ஆ. லண்டன்

**இ. நியூயார்க் ☑** ஈ. ஷாங்காய்

✓ உலகளாவிய நிதியியல் மையங்கள் குறியீட்டின் (GFCI) சமீபத்திய தரவரிசையில் நியூயார்க் முதலிடத்தைப்பிடித்தது மற்றும் நான்காவது ஆண்டாக உலகின் மிகவும் விரும்பப்படும் நிதியியல் மையமாக அது உள்ளது. லண்டன் இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது; சிங்கப்பூர் ஹாங்காங்கைப் பின்னுக்குத் தள்ளி மூன்றாவது

இடத்தைப் பிடித்தது. டோக்கியோவிற்கு பதிலாக பாரிஸ் முதல் 10 இடங்களுக்குள் வந்தது. இருப்பினும் உக்ரைன் மீதான படையெடுப்பு மற்றும் மேற்கத்திய நாடுகளின் உறவுகளைத் துண்டித்ததன் விளைவாக மாஸ்கோ 22 இடங்கள் கீழே தள்ளப்பட்டு 73ஆவது இடத்தில் உள்ளது. GFCI லண்டனைச் சார்ந்த மதியுரையகமாகும். இந்தக் குறியீடு சீன மேம்பாட்டு நிறுவனமான Z/Yenஆல் தொகுக்கப்பட்டது.

**9. 2022 – உலக காண்டாமிருக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Conservation of Rhinos

ஆ. Sustainability and Awareness

**இ. Five Rhino Species Forever ☑**

ஈ. Say No to Poaching

✓ பெரிய ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம், சுமத்ரா காண்டாமிருகம், ஜாவா காண்டாமிருகம், கருப்பு காண்டாமிருகம் மற்றும் வெள்ளை காண்டாமிருகம் உள்ளிட்ட 5 காண்டாமிருகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.22 அன்று உலக காண்டாமிருக நாள் கொண்டாடப்படுகிறது. "Five Rhino Species Forever" என்பது இந்த ஆண்டு (2022) உலக காண்டாமிருக நாளுக்கானக்கருப்பொருளாகும். வேட்டையாடுதல், காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை வாழ்விடங்களில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக காண்டாமிருக இனம் அழிவின் விளிம்பில் உள்ளது.

**10. எந்தப் பொதுத்துறை நிறுவனத்திற்கு, அண்மையில், 'மகாரத்னா' அந்தஸ்து வழங்கப்பட்டது?**

अ. பாரத் மின்னணு நிறுவனம்

ஆ. இந்திய எண்ணெய் நிறுவனம்

**இ. REC லிட் ☑**

ஈ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம்

आर ई सी
REC
असीमित ऊर्जा, अनन्त संभावनाएं
Endless energy. Infinite possibilities.

✓ முன்னர் கிராமப்புற மின்மயமாக்கல் கழகம் என்று அழைக்கப்பட்ட நடுவண் பொதுத்துறை நிறுவனமான REC லிட், நிறுவனத்திற்கு, 'மகாரத்னா' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணையை, நிதியமைச்சகத்தின்கீழுள்ள, பொதுத்துறை நிறுவனங்கள் துறை வெளியிட்டுள்ளது. REC என்பது வங்கி சாரா நிதி நிறுவனமாகும்; இது இந்தியா முழுவதும் மின்துறை நிதி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. 'மகாரத்னா' அந்தஸ்து வழங்குவதன்மூலம், REC நிறுவனமானது தொழில்நுட்ப கூட்டு முனைவுகள் அல்லது பிற உத்திசார் கூட்டணிகளில் இணைய முடியும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் அலுமினியம் சரக்கு ரயில்: இரயில்வேயில் இணைப்பு**

முதல்முறையாக உள்நாட்டிலேயே அலுமினியம்கொண்டு உருவாக்கப்பட்ட இரயில்பெட்டிகளைக்கொண்ட சரக்கு இரயில் இந்திய இரயில்வேயில் இணைக்கப்பட்டது. ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் இந்த இரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டன. இந்த இரயில் பெட்டிகளால் 14,500 டன் கரியமில வாயு வெளியேற்றம் தடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்த இரயிலால் அதிக பாரத்தை சுமந்துசெல்ல முடியும். துருப்பிடிக்காமல் நீண்டகாலம் தாக்குப் பிடிக்கும். 100 சதவீதம் மறுசுழற்சி செய்யக்கூடியவை.

---

## 2. 'ஸ்மார்ட் காவலர்' புதிய செயலி அறிமுகம்

தமிழ்நாட்டுக் காவல்துறையில் 'ஸ்மார்ட் காவலர்' என்ற புதியசெயலி மூலம் மின்னணு ரோந்துப்பணி என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த 'ஸ்மார்ட் காவலர்' செயலி, காவல்துறையில் களப்பணியாற்றும் அலுவலர்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அவர்களது களப்பணிகளின்போது நிகழும் சம்பவங்களை உடனுக்குடன் இந்தச் செயலிமூலம் பதிவு செய்வதற்கும், கள அலுவலர்களுக்கு ஏதேனும் பிரச்னை ஏற்பட்டாலோ அல்லது உடனடி உதவிகள் தேவைப்பட்டால், அதுகுறித்த தகவலை உடனடியாக உயரலுவலர்களுக்கு அவர்கள் தெரிவிக்க ஏதுவாக இந்தச் செயலி அமையும்.

---

**1. எந்த நிறுவனத்தின் MD & CEOஆக திலிப் அஸ்பே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. ஏர் இந்தியா

**ஆ. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் ☑**

இ. பாரத வங்கி

ஈ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

✓ இந்திய தேசிய கொடுப்பனவு கழகமானது (NPCI) திலீப் அஸ்பேவை ஐந்தாண்டு காலத்திற்கு அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், தலைமைச் செயல் அதிகாரியாகவும் (MD & CEO) மீண்டும் நியமித்துள்ளது. திலீப் அஸ்பே கடந்த 2018 ஜனவரியில் NPCIஇன் MD மற்றும் CEOஆக பொறுப்பேற்றார். NPCI என்பது இந்தியாவில் சில்லறை கொடுப்பனவுகள் மற்றும் தீர்வு அமைப்புகளை இயக்குவதற்கான ஓர் அமைப்பாகும்.

**2. 'ஒருங்கிணைந்த உயிரி சுத்திகரிப்பு ஆலை இயக்கத்தின் புத்தாக்க செயல்திட்டத்தை' அறிமுகப்படுத்திய நாடு எது?**

அ. அமெரிக்கா

**ஆ. இந்தியா ☑**

இ. வங்காளதேசம்

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்



✓ அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள பிட்ஸ்பர்கில் நடைபெற்ற உலகளாவிய தூய்மை எரிசக்தி செயல் மன்றத்தில், பிரேசில், கனடா மற்றும் இங்கிலாந்து நாடுகள் இணைந்து தயாரித்த ஒருங்கிணைந்த உயிரி சுத்திகரிப்பு ஆலை இயக்கத்தின் புத்தாக்க செயல்திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியது.

✓ உலக நாடுகளின் ஒத்துழைப்பை இந்தத்திட்டம் இலட்சியமாக கொண்டிருப்பதாகவும், இதனை அடைவதற்கும், அரசு மற்றும் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் எரிசக்தி ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் செயல்திறனிற்கு நிதி உதவியை அதிகரிப்பது அவசியம் என்றும் இந்தியா அப்போது தெரிவித்தது.

**3. அண்மையில் இந்திய கடற்படையால் அறிமுகப்படுத்தப்பட்ட, 'நிஸ்தார் மற்றும் நிபுன்' என்றால் என்ன?**

அ. நீர்மூழ்கிக்கப்பல்கள்

**ஆ. நீர்மூழ்குதலுக்கு உதவும் கப்பல்கள் ☑**

இ. ரோந்துக்கப்பல்கள்

ஈ. மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல்கள்



✓ இந்திய கடற்படையானது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட நீர்மூழ்குதலுக்குதவும் கப்பல்களை (Diving Support Vessels) விசாகப்பட்டினத்தில் வைத்து அறிமுகப்படுத்தியது. 'Nistar' & 'Nipun' என்று அழைக்கப்பெறும் இக்கப்பல்களை ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனம் கட்டியுள்ளது. இந்தக் கப்பல்கள் சிக்கலான நீர்மூழ்குதலுக்கு உதவும் அமைப்பு மற்றும் ஆழ்கடல் மீட்பு அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவை ஆழ்கடல் நீர்மூழ்குதல் மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் மீட்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

**4. இந்தியா மற்றும் இன்னும் பிற நான்கு ஆசிய நாடுகளால் நிறுவப்பட்ட APOA ஆனது கீழ்க்காணும் எந்தப் பொருளின் வர்த்தகத்துடன் தொடர்புடையது?**

அ. பருப்பு வகைகள் **ஆ. பனையெண்ணெய் ☑**

இ. இரப்பர் ஈ. பருத்தி



✓ இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச்சார்ந்த சமையல் எண்ணெய் வர்த்தக சங்கங்கள் ஆசிய பனையெண்ணெய் கூட்டணியை (APOA) அமைப்பதாக அறிவித்தன. தெற்காசியாவில் பனையெண்ணெயை இறக்குமதி செய்யும் ஐந்து முக்கிய நாடுகள் இவை.

✓ சால்வென்ட் எக்ஸ்ட்ராக்டர்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியாவின் தலைவர் அதுல் சதுர்வேதி, APOAஇன் முதல் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். பேரம் பேசும் ஆற்றலைப் பெறுவதும், இறக்குமதியை நிலையானதாக மாற்றுவதும் இந்தச் சங்கத்தின் முதன்மை நோக்கமாகும்.

**5. ஒவ்வோர் ஆண்டும், 'உலக நுரையீரல் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. செப்டம்பர்.25 ☑



ஆ. அக்டோபர்.05

இ. அக்டோபர்.10

ஈ. அக்டோபர்.15

✓ நுரையீரல் நலம் குறித்த அண்மைய சாதனைகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.25 அன்று உலக நுரையீரல் நாள் கொண்டாடப்படுகிறது. அனைத்து வகையான புற்றுநோய்களிலும், நுரையீரல் புற்றுநோயின் சதவீதம் 12.8 சதவீதமாக உள்ளது. புற்றுநோயால் ஏற்படும் இறப்புகளில், நுரையீரல் புற்று நோயின் பங்கு 17.8% ஆகும். நுரையீரல் புற்றுநோய் வருவதற்கு 94% அளவுக்குப் புகைபிடித்தல் காரணமாக அமைகிறது. நுரையீரல் புற்றுநோயின் ஆபத்து புகைபிடிக்காதவர்களைவிட புகைப்பிடிப்பவர்களுக்கு 24 முதல் 36 மடங்கு அதிகமாக உள்ளது. "Lung Health for All" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப் பொருளாகும்.

**6. முதன்முறையாக, 'இராணி எலிசபெத் II ஆண்டின் சிறந்த பெண்மணி' விருதை வென்றவர் யார்?**

அ. சுயெல்லா பிரேவர்மேன் ☑



ஆ. கரஞ்சீத் கௌர்

இ. நாக மூஞ்செட்டி

ஈ. ஹர்பிரீத் சண்டி

✓ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உள்துறைச் செயலர் சுயெல்லா பிரேவர்மேன், முதன்முறையாக வழங்கப்படும் 'இராணி எலிசபெத் II ஆண்டின் சிறந்த பெண்மணி' விருதை வென்றார். 42 வயதான அவர் இம்மாத தொடக்கத்தில் பிரிட்டிஷ் பிரதமர் லிஸ் டிரஸால் இங்கிலாந்து அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டார். இந்த விருதுகள் பிரிட்டனின் தெற்காசிய சமூகம் முழுவதுமுள்ள தனிநபர்களின் சாதனைகளை பரிந்துரைகள்மூலம் அங்கீகரிக்கின்றன.

**7. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் சட்டங்களைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. நீதியரசர் L நாகேஸ்வர இராவ் ☑



ஆ. நீதியரசர் A K சிக்ரி

இ. நீதியரசர் இரஞ்சன் கோகாய்

ஈ. நீதியரசர் சதாசிவன்

✓ இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் சட்டங்களைத் திருத்துவதற்கும் தேர்தல் குழுமத்தை உருவாக்குதற்குமாக முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் L நாகேஸ்வர இராவை உச்சநீதிமன்றம் நியமித்துள்ளது. இந்திய ஒலிம்பிக் சங்கம் அதன் நிர்வாகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக, வரும் டிசம்பர் மாதத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடத்த தவறினால், இந்தியா, பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்திலிருந்து விலக்கி வைக்கப்படும் என பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

**8. ஜெர்மனியைச் சார்ந்த PEN மையத்தின், "ஹெர்மன் கெஸ்டன் பரிசு" பெற்ற இந்திய எழுத்தாளர் மற்றும் கவிஞர் யார்?**

அ. அருந்ததி இராய்

**ஆ. மீனா கந்தசாமி ☑**

இ. ஓம் பிரகாஷ் வால்மீகி

ஈ. இராஜ் கௌதமன்



✓ இந்திய எழுத்தாளரும், கவியுமான மீனா கந்தசாமி இந்த ஆண்டுக்கான, 'ஹெர்மன் கெஸ்டன் பரிசைப்' பெறுவார் என ஜெர்மனியில் உள்ள PEN மையம் அறிவித்துள்ளது. துன்புறுத்தப்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் இதழாளர்களின் உரிமைகளுக்காக நிற்கும் ஆளுமைகளை, 'ஹெர்மன் கெஸ்டன் பரிசு' கௌரவிக்கிறது. தி ஜிப்சி காடஸ், வென் ஐ ஹிட் யூ: ஆர், எ போர்ட்ரைட் ஆஃப் தி ரைட்டர் ஆஸ் எ யங் வைஃப், ஐயன்காளி, தமிழ்ப்புலிகள் மற்றும் டச் மற்றும் Ms மிலிட்டன்சி போன்ற கவிதைகள் அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளாம்.

**9. அண்மையில் நடைபெற்ற துலீப் கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. ஹாக்கி

**ஆ. கிரிக்கெட் ☑**

இ. டென்னிஸ்

ஈ. பூப்பந்து




✓ மேற்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டலம் இடையேயான துலீப் கோப்பைக்கான இறுதிப்போட்டி அண்மையில் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாநகரத்தில் நடைபெற்றது. இது இந்தியாவில் நடைபெறும் உள்நாட்டளவிலான முதல்தர கிரிக்கெட் போட்டியாகும். இந்த ஆண்டு நடந்த போட்டியில் மேற்கு மண்டலம் 294 ரன்கள் வித்தியாசத்தில் தெற்கு மண்டலத்தை வீழ்த்தி பட்டத்தை வென்றது. மேற்கு மண்டல கிரிக்கெட் அணியின் கேப்டனாக அஜிங்க்யா இரஹானே விளங்கினார்.

**10. 2022 – தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Rethinking Tourism ☑**

ஆ. Rural and Community Centric Tourism

இ. Accessible Tourism

ஈ. Anti-Racism Tourism



✓ சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் விளைவுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.27 அன்று நாடு முழுவதும் உலக சுற்றுலா நாள் கொண்டாடப்படுகிறது. "Rethinking Tourism" என்பது இந்த ஆண்டு (2022) உலக சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1980ஆம் ஆண்டு முதல், ஐநா உலக சுற்றுலா அமைப்பு செப்.27ஆம் தேதியை உலக சுற்றுலா நாளாக அனுசரித்து வருகிறது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக சந்திரசூட் நியமனம்**

உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக DY சந்திரசூட் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சந்திரசூட்டை தலைமை நீதிபதியாக குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு நியமித்துள்ளதாக நடுவண் சட்டத்துறை அமைச்சர்

கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் ஐம்பதாவது தலைமை நீதிபதியாக நவ.9 அன்று DY சந்திரசூட் பதவியேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பொறுப்பில் இருப்பார்.

---

**2. விடைபெற்றது மங்கள்யான்: மங்கள்யானின் பயண நிறைவு குறித்த தலையங்கம்**

தேசம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கிடையில் உலகளவில் இந்தியாவைத் தலைநிமிர்ந்து பெருமைப்பட வைக்கும் சாதனைகளும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. செவ்வாய் கிரகத்துக்கான தனது எட்டாண்டு பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வரலாறாகி இருக்கிறது மங்கள்யான். இஸ்ரோவின் (இந்திய விண்வெளி ஆய்வு மையம்) மற்றொரு சாதனையாக நிலைபெறுகிறது 'மங்கள்யானின்' பயண நிறைவு.

2013 நவ.5 அன்று ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து PSLV ஏவுகணையின்மூலம் விண்வெளியில் செலுத்தப்பட்டது 'மங்கள்யான்' விண்கலம். அடுத்த ஓர் ஆண்டுக்குள் செவ்வாயின் புவியீர்ப்பு எல்லையைச் சென்றடைந்தது. ₹450 கோடி செலவில் விண்வெளியில் இஸ்ரோவால் செலுத்தப்பட்ட 'மங்கள்யான்', செவ்வாய் கிரகத்தை சென்றடைந்ததே கூட வல்லரசு நாடுகளை வியந்து நோக்க வைத்தது.

மனித இன விண்வெளி ஆய்வின் முதல்படியாக கருதப்படுகிறது செவ்வாய் கிரகத்துக்கான பயணம். செவ்வாயில் நிலவும் சூழல், அந்தக்கிரகத்தின் நீராதாரம், அதன் பூகோள அமைப்பு உள்ளிட்டவை குறித்து தெரிந்துகொள்வதுதான் 'மங்கள்யானின்' நோக்கம்.

செவ்வாயில் மனிதன் வாழ்வதற்கான தட்பவெப்ப நிலை, தேவையான நீராதாரம் போன்றவை காணப்படுகிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்கான முயற்சியில் பல்வேறு நாடுகள் முனைப்பு காட்டி வந்த நிலையில், இந்தியாவும் தனது பங்குக்கு, எந்தவொரு அந்நிய சக்தியின் உதவியும் இல்லாமல் செலுத்திய விண்கலம்தான் அது. பல முயற்சிகள் தோல்வியடைந்த பின்தான் அமெரிக்கா, ரஷ்யா தொடங்கிய வல்லரசு நாடுகளால் செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்ப முடிந்தது. ஆனால், முதல் முயற்சியிலேயே இந்தியாவால் இலக்கை எட்ட முடிந்தது என்பது மிகப் பெரிய வெற்றி. அதன் பிறகுதான் உலக நாடுகள் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சியை வியந்து பாராட்டத் தலைப்பட்டன.

'சிவப்புக்கோள்' என்றழைக்கப்படும் செவ்வாயை ஒருமுறை சுற்றிவர 'மங்கள்யானுக்கு' 76.72 மநேரம் பிடித்தது. ஆறு மாதங்கள்தான் 'மங்கள்யான்' தாக்குப்பிடிக்கும் என்றுதான் ஆரம்பத்தில் இஸ்ரோ விஞ்ஞானிகள் கணித்தனர். ஆனால், ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் சற்றும் சளைக்காமலும், எந்தவிதப் பின்னடைவையும் சந்திக்காமலும் செவ்வாய் கிரகத்தில், 'மங்கள்யான்' தன்னுடைய பணியைத் தொடர்ந்ததை மிகப்பெரிய வெற்றி என்று கொண்டாடுவதில் நியாயம் உள்ளது. அவ்வப்போது ஏற்பட்ட கிரகணங்களால் 'மங்கள்யானின்' மின்கலன்களின் வீரியம் குறையாமல் இருந்திருந்தால், மேலும் சில ஆண்டுகள்கூட தனது ஆய்வை அந்த விண்கலம் மேற்கொண்டிருக்கக்கூடும்.

எட்டு ஆண்டுகளில், 'மங்கள்யான்' எத்தனையோ புதிய தகவல்களை செவ்வாய் கிரகம் குறித்து உலகுக்கு வழங்கி இருக்கிறது. 2015 ஜூலை.14–ஆம் தேதி செவ்வாய் குறித்த முதல் நிழற்படம், 'மங்கள்யான்'மூலம் பெறப்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்து 1,100–க்கும் அதிகமான படங்களை, 'மங்கள்யான்' அனுப்பித்தந்தது.

அந்தப்படங்களின் அடிப்படையில் செவ்வாய் குறித்த புரிதல் மட்டுமல்லாமல், அந்தக் கிரகத்தின் உருவம் குறித்தும் இஸ்ரோ பல கணிப்புகளையும், உண்மைகளையும் அறிந்துகொள்ள முடிந்தது. செவ்வாயின் துணைக் கிரகமான 'டிமோஸ்' கிரகத்தின் நிழற்படத்தை முதன்முதலாக எடுத்ததும், உலகுக்களித்ததும் நமது விஞ்ஞானிகள் அனுப்பிய 'மங்கள்யான்' என்னும்போது நாம் பெருமிதம் அடையலாம்.

2023இல் சந்திரனை இலக்காக்கி 'சந்திரயான்' மூன்று விண்கலத்தை ஏவத்திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தியாவின் முதலாவது 'சந்திரயான்' 2008இல் விண்ணில் செலுத்தப்பட்டது. சந்திரனில் தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தது அந்த முயற்சி. 2019இல், 'சந்திரயான்–2' செலுத்தப்பட்டது. ஆனால், சந்திரனில் இறங்கும்போது சில கோளாறுகள் ஏற்பட்டு அம்முயற்சி தோல்வி அடைந்தது.

அந்தத்தவறுகளை எல்லாம் திருத்தி மீண்டும் ஒருமுறை விண்கலத்தை சந்திரனுக்கு அனுப்பும் முயற்சியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் முழுமூச்சில் செயல்படுகின்றனர். 'சந்திரயான்–3' வெற்றி அடைந்தால், அதைத் தொடர்ந்து மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பும் 'ககன்யான்' முயற்சிக்கு இப்போதே திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் விண்வெளிக் கனவுகளுக்கு நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் வழங்கியுள்ளது 'மங்கள்யான்' வெற்றி. 'சந்திரயான்-3', 'ககன்யான்' என்று விண்ணை வசப்படுத்தக் காத்திருக்கும் இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு நன்றி செலுத்த தேசம் கடமைப்பட்டிருக்கிறது!

---

**3. இந்தியாவில் 41.5 கோடி பேர் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டனர்**

இந்தியாவில் கடந்த 2005-06 முதல் 2019-21 வரையிலான காலகட்டத்தில் சுமார் 41.5 கோடி பேர் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டுள்ளதாக ஐநா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்முக ஏழ்மை குறியீட்டை ஐநா வளர்ச்சித் திட்டம் (UNDP) ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து வெளியிட்டது. இந்தியாவில் கடந்த 2005-06 முதல் 2019-21 வரையிலான காலகட்டத்தில் சுமார் 41.5 கோடி பேர் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2005-06 முதல் 2015-16 வரையிலான காலகட்டத்தில் சுமார் 27.5 கோடி பேரும், 2015-16 முதல் 2019-2021 வரையிலான காலகட்டத்தில் சுமார் 14 கோடி பேரும் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டனர்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள ஏழை மக்களின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் பாதியளவு குறைக்க வேண்டும் என்ற நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை எளிதில் எட்டிவிட முடியும் என ஐநா நம்பிக்கை தெரிவித்துள்ளது. பன்னாட்டளவில் 111 நாடுகளில் சுமார் 120 கோடி பேர் ஏழ்மை நிலையிலுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள -து. அவர்களில் சுமார் 59.3 கோடி பேர் 18 வயதுக்குக் குறைவான சிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு மக்கள்தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே இந்தியாவில்தான் அதிக எண்ணிக்கையிலான ஏழைகள் (22.89 கோடி) உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் 9.7 கோடி பேர் சிறார்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கடுத்து நைசீரியாவில் 9.67 கோடி ஏழைகள் உள்ளனர். இந்தியாவில் பிகார், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**4. பிரபல மருத்துவர் மஹாலனோபிஸ் காலமானார்**

"ORS" எனப்பரவலாக அறியப்படும் உப்பு-சர்க்கரை கரைசலைக் கண்டறிந்ததில் முக்கியப் பங்கு வகித்த மருத்துவர் திலீப் மஹாலனோபிஸ் (88) உடல்நலக்குறைவால் கொல்கத்தாவில் காலமானார். காலரா உள்ளிட்ட நோய்களால் வயிற்றுப்போக்கு அதிகரிக்கும்போது உடலில் அதிகப்படியான நீரிழப்பு ஏற்படும். அதன்காரணமாக நோயாளிகள் உயிரிழப்பதற்கும் வாய்ப்புள்ளது. காலரா பரவலின்போது அதிக அளவிலான நோயாளிகளின் உயிரிழப்புக்கும் இதுவே காரணமாக அமைந்தது.

அதைத் தடுப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டார் திலீப் மஹாலனோபிஸ். ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சியில் ஈடுபட்ட அவர், உப்பு-சர்க்கரை கரைசலைக் கண்டறிந்தார். அதன்மூலமாக உடலின் ஆற்றலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை விரைவில் வழங்க முடியும் என அவர் ஆராய்ச்சியின்மூலமாக உறுதிசெய்தார். 'உப்பு-சர்க்கரை கரைசலின் தந்தை' என இவர் அறியப்படுகிறார்.

---

**5. BCCI தலைவராக ரோஜர் பின்னி நியமனம்**

BCCI அமைப்பின் தலைவராக முன்னாள் வீரர் ரோஜர் பின்னி நியமிக்கப்பட்டுள்ளார். 2019 அக்டோபரில் BCCI தலைவராக முன்னாள் கேப்டன் சௌரவ் கங்குலியும் செயலாளராக ஜெய் ஷாவும் தேர்வானார்கள். சமீபத்தில் BCCI விதிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ள BCCI-க்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியது. அதன்படி கங்குலி, ஜெய் ஷா ஆகிய இருவரும் தங்களுடைய பதவிகளில் மேலும் மூன்று ஆண்டு காலம் பணியாற்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனினும் BCCIஇன் தலைமைப்பொறுப்புகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 1983இல் உலகக்கோப்பை வென்ற இந்திய அணியைச் சேர்ந்த ரோஜர் பின்னி (67), BCCI தலைவர் பதவிக்காக வேட்புமனு தாக்கல்செய்தார். இந்த நிலையில் மும்பையில் நடைபெற்ற BCCI ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் BCCI தலைவராக போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

---

### 6. பென்ஸிமா, புடெலாஸுக்கு 'பேலோன் தோர்' விருது

கால்பந்து விளையாட்டு உலகில் மதிப்புமிக்கதாக இருக்கும் 'பேலோன் தோர்' விருதை 2022ஆம் ஆண்டில் ஆடவர் பிரிவில் பிரான்ஸின் கரிம் பென்ஸிமாவும், மகளிர் பிரிவில் ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸும் வென்றனர். இதில் பென்ஸிமா முதல் முறையாக இந்த விருதை வென்றிருக்கும் நிலையில், புடெலாஸ் தொடர்ந்து 2ஆவது முறையாக அதை கைப்பற்றியிருக்கிறார். மகளிர் பிரிவில் இருமுறை இந்த விருதை வென்ற முதல் வீராங்கனை புடெலாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

சாம்பியன்ஸ் லீக் கால்பந்தில் ரியல் மாட்ரிட் அணிக்காக சிறப்பாக விளையாடி 44 கோல்கள் அடித்ததன் அடிப்படையில் பென்ஸிமாவும், பார்சிலோனா FC அணியில் அட்டகாசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 42 கோல்கள் ஸ்கோர் செய்ததன் பேரில் புடெலாஸும் இந்த விருதுக்குத் தேர்வாகியுள்ளனர். கடந்த 1956–க்குப் பிறகு இந்த விருதைப்பெறும் மூத்த வீரர் (34) வீரர் என்ற பெருமையை பென்ஸிமா பெற்றுள்ளார். மேலும், இந்த விருதைப் பெறும் 5ஆவது பிரான்ஸ் வீரர் அவர்.

இந்த விருதானது, 'பிரான்ஸ் புட்பால்' என்ற பிரான்ஸ் செய்தி நிறுவனத்தால் கடந்த 1956 முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. கால்பந்து செய்தியாளர்கள், பயிற்சியாளர்கள், தேசிய அணிகளின் கேப்டன்கள் ஆகியோர் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.

---

**1. 2022ஆம் ஆண்டுக்கான உலக பட்டினிக் குறியீட்டில் குறைந்த மதிப்பெண் பெற்றுள்ள நாடு எது?**



அ. குவைத்

ஆ. போஸ்னியா

**இ. ஏமன் ☑**

ஈ. ஆப்கானிஸ்தான்

✓ உலக பட்டினிக் குறியீட்டு மதிப்பெண்கள் ஊட்டச்சத்துக்குறைபாடு, குழந்தைகளிடையே காணப்படும் வளர்ச்சி குன்றிய நிலை, குழந்தைகளிடையே காணப்படும் இளைத்தல் நோய் மற்றும் குழந்தை இறப்பு முதலான நான்கு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சீனாவும் குவைத்தும் ஆசிய நாடுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளன. தெற்காசியப் பிராந்தியம் உலகிலேயே அதிக பட்டினி நிலை, அதிக குழந்தைகளிடையே காணப்படும் வளர்ச்சி குன்றிய விகிதம் மற்றும் இளைத்தல் நோய் விகிதம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஐந்துக்கும் குறைவான மதிப்பெண்களுடன் 17 நாடுகள் கூட்டாக 1 மற்றும் 17–க்கு இடையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 2022 – உலக பட்டினிக் குறியீட்டில் ஏமன் நாடு கடைசி இடத்தில் உள்ளது.

**2. ISROஇன் NGLVஇல் உள்ள NG என்பது எதைக் குறிக்கிறது?**



**அ. Next Generation ☑**

ஆ. Nexus Gamma

இ. Necessary Guidelines

ஈ. New Generation

✓ ISRO (இந்திய விண்வெளி ஆய்வு மையம்) கடந்த 1980ஆம் ஆண்டுகளில் உருவாக்கிய முனைய துணைக்கோள் ஏவுகலத்திற்கு (Polar Satellite Launching Vehicle – PSLV) மாற்றாக Next Generation Launching Vehicle (NGLV) என்று பொருள் வரும் அடுத்த தலைமுறை ஏவுகலத்தை தற்போது உருவாக்கி வருகிறது.

**3. 2022 அக்டோபரில் ISROஇன் (இந்திய விண்வெளி ஆய்வு மையம்) தலைவராக உள்ளவர் யார்?**



அ. R N சுப்ரமணியம்

ஆ. G மகாலக்ஷ்மி

**இ. S சோமநாத் ☑**

ஈ. S சந்திரா இராஜசேகர்

✓ ISRO தலைவர் ஸ்ரீதர பணிக்கர் சோமநாத், வலியமலையில் அமைந்துள்ள திரவ முற்செலுத்த அமைப்பு மையத்தில் (LPSC) '2022 – பொறியாளர்கள் மாநாடு' நிகழ்வையொட்டி நடந்த செய்தியாளர் சந்திப்பின்போது, புதிய NGLVஇன் அறிமுகம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். NGLV ஆனது, புவிநிலை இடைப்பாதைக்கு பத்து டன் எடை வரை கொண்டுசெல்லும் கனரக–ஏவுகலமாக இருக்கும். NGLV அரை–கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத் –துகிறது; இந்தத் தொழில்நுட்பம் திறமையானதும் செலவு குறைந்ததாகவும் விளங்குகிறது.

**4. இந்திய அரசால் SCG திட்டத்தை நிறுவ தேர்வு செய்யப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ. பீகார்

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. உத்தர பிரதேசம்

✓ இந்திய நிலக்கரி நிறுவனமானது BHEL, IOCL மற்றும் GAIL (இந்தியா) நிறுவனம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஒடிஸா, சத்தீசுகர் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் திட்டமிடப்பட்ட மேற்பரப்பு நிலக்கரி வாயுவாக்க திட்டங்களை (SCG) நிறுவ இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. திட்டமிடப்பட்ட SCG திட்டங்கள், ₹35,000 கோடி மொத்த மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ளன.

**5. ஐநா பல பரிமாண வறுமைக்குறியீட்டின்படி, உலகளவில் அதிக ஏழை மக்களைக்கொண்ட நாடு எது?**



அ. காங்கோ

ஆ. நைஜீரியா

**இ. இந்தியா ☑**

ஈ. இந்தோனேசியா

✓ ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித்திட்டம் (UNDP) மற்றும் OPHI ஆகியவற்றால் வெளியிடப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீட்டு அறிக்கையின்படி, 2005–06 மற்றும் 2019–21–க்கு இடையில் இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை சுமார் 415 மில்லியனாக குறைந்துள்ளது. உலகளவில் இந்தியாவில் அதிக ஏழைகள் உள்ளனர் (228.9 மில்லியன்), அதைத் தொடர்ந்து நைஜீரியா (96.7 மில்லியன்) உள்ளது.

**6. அண்மையில் தொடங்கப்பட்ட, 'பிரதமர் பாரதிய ஜன் ஊர்வரக் பரியோஜனா'வுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

**ஆ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑**

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

रसायन एवं
उर्वरक मंत्रालय
MINISTRY OF
CHEMICALS
AND FERTILIZERS
सत्यमेव जयते

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி இரண்டு நாள் பிரதமர் கிசான் சம்மான் சம்மேளன்–2022ஐ தேசிய தலைநகரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் தொடங்கி வைத்தார். வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழ், 'பிரதமர் பாரதிய ஜன் ஊர்வரக் பரியோஜனா – ஒரே நாடு ஒரே உரம்" திட்டத்தையும் அவர் தொடங்கினார். இத் திட்டத்தின்கீழ், நிறுவனங்கள் அனைத்து மானிய உரங்களையும், 'பாரத்' என்ற ஒரே பெயரின்கீழ் சந்தைப்படுத்த வேண்டும்.

**7. ஃப்ரீடம் ஹவுஸின் இன்டர்நெட் ஃப்ரீடம் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ. 24

ஆ. 58

இ. 71

**ஈ. 51 ☑**

✓ அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனமான ஃப்ரீடம் ஹவுஸின் கூற்றுப்படி, நாட்டில் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கும் முனைவுகளைத் தொடர்ந்து இந்தியாவின் இணைய சுதந்திர மதிப்பெண் 2 புள்ளிகள் அதிகரித்து 51ஆக உயர்ந்துள்ளது. 2021ஆம் ஆண்டில் இணைய சுதந்திரத்தில் இந்தியாவின் மதிப்பெண் 49ஆக இருந்தது. நாட்டில் குறைவான இணையத்தடைகள் நிலவுவதே இந்த மதிப்பெண் முன்னேற்றத்திற்குக் காரணமாகும்.

**8. உலக வறுமை ஒழிப்பு நாளுக்கானக் கருப்பொருள் யாது?**

அ. Dignity for all in practice ☑

ஆ. Leaving None behind

இ. SDG 1 Poverty

ஈ. Eradication of Poverty First

✓ வறுமையினால் உலக அளவில் ஏற்படும் சிக்கல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அக்.17ஆம் தேதி உலக வறுமை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. "Dignity for all in practice" என்பது நடப்பாண்டில் (2022) வரும் உலக வறுமை ஒழிப்பு நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1992ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அக்.17ஆம் தேதியை உலக வறுமை ஒழிப்பு நாள் எனக் குறிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஐநா ஆனது, 'கண்ணியம்' என்பது ஓர் அடிப்படை உரிமை என்றும் அது பிற அடிப்படை உரிமைகளின் அடிப்படை என்றும், மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் 'கண்ணியத்திற்கான உரிமை உண்டு' என்றும் கூறுகிறது.

**9. புனைகதைக்கான 2022 – புக்கர் பரிசை வென்ற ஷெஹான் கருணாதிலகா சார்ந்த நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. இலங்கை ☑**

இ. வங்காளதேசம்

ஈ. நேபாளம்

✓ 'தி செவன் மூன்ஸ் ஆஃப் மாலி அல்மேடா' புதினத்துக்காக இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலகாவுக்கு 2022ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புதினம் ஒரு நுண்புலத் திகில் வகையைச் சார்ந்ததாகும்; இந்தப் புதினம் அதன் தலைப்பில் உள்ள நிழற்படக்காரரின் கதையை விவரிக்கிறது. 1992இல் புக்கர் பரிசை வென்ற மைக்கேல் ஒண்டாட்ஜேவைத் தொடர்ந்து இலங்கையில் பிறந்து இவ்விருதைப்பெறும் இரண்டாவது எழுத்தாளராக கருணாதிலகா விளங்குகிறார்.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, NROL–91 என்பதை ஏவிய நாடு எது?**




அ. சீனா

ஆ. ரஷ்யா

இ. இஸ்ரேல்

**ஈ. அமெரிக்கா ☑**

✓ NROL–91 என்ற உளவுச்செயற்கைக்கோளை அமெரிக்கா ஏவியது. யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் (ULA) டெல்டா IV கனரக ஏவுகலம் கலிபோர்னியாவில் இருந்து அமெரிக்காவுக்கான செயற்கைக்கோளை ஏவியது. தேசிய உளவு அலுவலகம் (NRO) என்பது அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைசார்ந்த ஒரு நிறுவனமாகும்; இது நாட்டின் உளவுச் செயற்கைக்கோள்களை வடிவமைக்கிறது, உருவாக்குகிறது, ஏவுகிறது மற்றும் இயக்குகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நடுவணரசின் ஓய்வூதியதாரர்களுக்கான, "வாழ்க்கை வசதியை" இலக்காக கொண்ட ஓய்வூதியதாரர்களுக்கான பவிஷ்யா 9.0 ஒருங்கிணைந்த இணையதளத்தை நடுவண் இணையமைச்சர் Dr ஜிதேந்திர சிங், பாரத வங்கியுடன் இணைந்து தொடங்கி வைத்தார்.**

மத்திய பணியாளர் நலன், ஓய்வூதியர் நலன் மற்றும் பிரதமர் அலுவலக இணையமைச்சர் Dr ஜிதேந்திர சிங், ஓய்வூதியதாரர்களுக்கான ஒருங்கிணைந்த, "பவிஷ்யா 9.0" இணையதளத்தை தொடங்கிவைத்தார். பவிஷ்யா 9.0 பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது ஓய்வூதியதாரர்களின் "வாழ்க்கை வசதியை" மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஓய்வூதியம் வழங்கும் மீதமுள்ள 16 வங்கிகளும் ஓய்வூதியதாரர்க–ளுக்கான ஒருங்கிணைந்த இணையதளத்துடன் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளும்.

**1. அண்மையில் அறிவிக்கப்பட்ட துர்காவதி புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ. மேற்கு வங்காளம்

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. ஆந்திரப் பிரதேசம்

✓ மத்திய பிரதேச வனவுயிரி வாரியம் துர்காவதி புலிகள் காப்பகம் என அழைக்கப்படும் பன்னா புலிகள் காப்பகத்தின் (PTR) புலிகளுக்கான புதிய காப்பகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கென்–பெட்வா ஆறுகளை இணைப்பதால் 2,339 சதுர கிமீ பரப்பளவுள்ள இந்தப் புதிய புலிகள் காப்பகத்தின் ¼ பங்கு நீரில் மூழ்கும். துர்காவதியுடன் பன்னா புலிகள் காப்பகத்தை இணைக்கும் பசுமை வழிச்சாலை, புலிகள் அனைத்தும் இந்தப் புதிய காப்பகத்திற்கு இயற்கையாக செலவதற்காக உருவாக்கப்படவுள்ளது.

**2. 'இந்திய நகர்ப்புற வீட்டுவசதி மாநாடு–2022' நடத்தப்படும் மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

**இ. குஜராத் ☑**

ஈ. கர்நாடகா

✓ குஜராத் மாநிலத்தின் இராஜ்கோட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள 'இந்திய நகர்ப்புற வீட்டுவசதி மாநாடு–2022' என்ற மூன்று நாள் நிகழ்ச்சியை பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார். இந்த மாநாடு தொழில்நுட்பங்களை விளக்கிக் காட்டுவதற்கான ஒரு தளத்தை வழங்கும். அத்துடன் நாட்டின் வெவ்வேறு புவி–காலநிலை பகுதிகளுக்கு ஏற்ற வீட்டு கட்டுமானத்திற்கான பல்வேறு பொருட்கள் மற்றும் செயல்முறைகளை விவாதிக்கும். 'கலங்கரை விளக்கம்' திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 1100 வீடுகளையும் பிரதமர் அப்போது அர்ப்பணித்தார்.

**3. 'காலநிலை வெளிப்படைத்தன்மை அறிக்கை – 2022'இன்படி, வெப்பம் தொடர்புடைய தொழிலாளர் திறன் குறைப்பினால் ஏற்பட்ட வருமான இழப்பால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு எது?**

அ. இந்தோனேசியா

ஆ. சவூதி அரேபியா

**இ. இந்தியா ☑**

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

Climate Transparency

✓ 'காலநிலை வெளிப்படைத்தன்மை அறிக்கை–2022' G20 நாடுகளிலுள்ள காலநிலை பகுப்பாய்வு அமைப்புகளின் கூட்டாண்மைமூலம் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, இந்தத் துறைகளில் வருமான இழப்பால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் இந்தியா (GDPஇல் 5.4%), இந்தோனேசியா (GDPஇல் 1.6%), மற்றும் சவுதி அரேபியா (GDPஇல் 1%). வெப்பம் தொடர்பான தொழிலாளர் திறன் குறைப்பினால் ஏற்படும் வருவாய் இழப்புகள் சேவைகள், உற்பத்தி, வேளாண்மை மற்றும் கட்டுமானம் ஆகியவற்றில் மிக அதிகமாக உள்ளது.

**4. வெளியுறவு அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'தலைவர்கள் மாநாட்டை' நடத்தும் நகரம் எது?**

அ. சென்னை ஆ. காந்திநகர்

**இ. கேவாடியா ☑** ஈ. மதுரை

विदेश मंत्रालय
MINISTRY OF
EXTERNAL AFFAIRS

✓ கேவாடியாவில் நடந்த 10ஆவது தூதரக தலைவர்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி பங்கேற்றார். வெளியுறவு அமைச்சகத்தினால் இது ஏற்பாடு செய்யப்பட்டது. ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ்

முன்னிலையில் கேவாடியாவில் மிஷன் லைப் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) திட்டத்தை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார். குஜராத்தின் அதாலாஜ், திரிமந்திரில் மிஷன் ஸ்கூல் ஆஃப் எக்ஸலன்ஸ் ஆகியவற்றையும் இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.

**5. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டு பயிற்சி வானூர்தியான HTT–40'ஐ உருவாக்கிய அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. HAL ☑**

இ. BEL

ஈ. ISRO



✓ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் (HAL) வடிவமைத்து உருவாக்கிய உள்நாட்டு பயிற்சி விமானமான HTT–40'ஐ இந்தியப்பிரதமர் நரேந்திர மோதி அறிமுகம் செய்து வைத்தார். இது குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் நடந்த 12ஆம் இராணுவ கண்காட்சியின்போது (DefExpo) இந்திய அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தனியார் தொழிற்துறையின் ஒத்துழைப்புடன் 60 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டுப் பொருட்களுடன் தயாரிக்கப்பட்டதாகும்.

**6. ஷியான்–14 மற்றும் ஷியான்–15 என்ற சோதனை செயற்கைக்கோள்களை ஏவிய நாடு எது?**

அ. ஈரான்

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

**இ. சீனா ☑**

ஈ. வட கொரியா



✓ சீனா ஷியான்–14 மற்றும் ஷியான்–15 என்ற இரண்டு சோதனை செயற்கைக்கோள்களை அண்மையில் ஏவியது. இந்தச்செயற்கைக்கோள்கள் தமக்கென முன்னமைக்கப்பட்ட சுற்றுப்பாதையில் நுழைந்தன. ஷியான்–14 என்கிற செயற்கைக்கோள் அறிவியல்பூர்வ பரிசோதனைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைச் சரிபார்ப்பதற்கென பயன்படுத்தப்படும். அதே வேளையில் ஷியான்–15 என்கிற செயற்கைக்கோள் நில அளவீடு, நகர்ப்புற திட்டமிடல் மற்றும் பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு ஆகிய துறைகளில் தரவுகளை வழங்கும்.

**7. அண்மையில் ஓய்வுறுவதாக அறிவித்த ஜூலன் கோஸ்வாமி சார்ந்த விளையாட்டு எது?**

அ. டென்னிஸ்

**ஆ. மட்டைப்பந்து ☑**

இ. பூப்பந்து

ஈ. சுவர்ப்பந்து



✓ லார்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிரான தனது கடைசி சர்வதேச போட்டியில் விளையாடிய இந்திய பெண் கிரிக்கெட் வீராங்கனை ஜூலன் கோஸ்வாமி சமீபத்தில் தனது ஓய்வை அறிவித்தார். ஜூலன் கோஸ்வாமி இந்திய பெண்கள் அணிக்காக 12 டெஸ்ட், 204 ஒருநாள் மற்றும் 68 T20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் 255 ODI விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 2007ஆம் ஆண்டில், ஜூலன் கோஸ்வாமி, ICCஇன் ஆண்டின் சிறந்த மகளிர் கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியப் பெண் கிரிக்கெட் வீராங்கனை ஆனார். அவர், 2010இல் மதிப்புமிக்க, 'அர்ஜுனா விருதைப்' பெற்றார்.

**8. உச்சநீதிமன்றத்தின் கூற்றுப்படி, அதன் வழக்குகளின் நேரடி ஒளிபரப்பு, எந்தத் தளத்தில் கிடைக்கப்பெறும்?**

அ. வலையொளி

**ஆ. தேசிய தகவலியல் மையம் (NIC) ☑**

இ. மைகௌ

ஈ. திறந்தநிலை அரசாங்க தரவு (OGD)

✓ வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக NIC தளத்தினூடாக 3 தனித்தனி அரசியல் சாசன அமர்வுகளை நேரலையில் ஒளிபரப்புவதற்காக உச்சநீதிமன்றம் முடிவுசெய்துள்ளது. எதிர்காலத்தில் மத்திய பிரதேச மாநில உயர் நீதிமன்றத்தைப்போலவே உச்சநீதிமன்றமும் தனக்கென தனி OTTஐப் பெறுவதற்கான செயல்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவு (EWS) ஒதுக்கீடு வழக்கு, சிவசேனா வழக்கில் விரிசல் மற்றும் அகில இந்திய பார் தேர்வின் செல்லுபடி வழக்கு உள்ளிட்ட 3 வழக்குகள் நேரலையாகவுள்ளன.

**9. 2022 முதல் நடைமுறைக்கு வரும் அயல்நாட்டு வர்த்தகக் கொள்கையின் காலவரையறை என்ன?**




அ. 2014-2019

**ஆ. 2015-2020 ☑**

இ. 2016-2021

ஈ. 2016-2022

✓ அயல்நாட்டு வர்த்தகக்கொள்கை (2015–20) அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதி ஊக்குவிப்பு அவை மற்றும் முன்னணி ஏற்றுமதியாளர்கள் யாவரும் தற்போதிருக்கும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையையே தொடர வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். 2015–20 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையை 2022 செப்.30 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க நடுவணரசு முடிவுசெய்துள்ளது; இது 2022 அக்டோபர்.01 முதல் நடைமுறைக்கு வரும்.

**10. 2022 – உலக ஆறுகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



**அ. The importance of Rivers to Biodiversity ☑**

ஆ. The importance of Rivers to Sustainability

இ. The importance of Rivers to Universe

ஈ. The importance of Rivers to Climate Change

✓ நீர்நிலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவுமாக உலக ஆறுகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் வரும் நான்காவது ஞாயிற்றுக்கிழமையில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 2022 செப்டம்பர்.25 அன்று இந்த நாள் வந்தது. இந்த ஆண்டு உலக ஆறுகள் நாளின் கருப்பொருள், "The importance of Rivers to Biodiversity" என்பதாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னையில் போக்குவரத்து நெரிசலை தெரிந்துகொள்ள கைப்பேசி செயலி அறிமுகம்**

சென்னையில் போக்குவரத்து நெரிசலை தெரிந்துகொள்ள கைப்பேசி செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் தற்போது குடிமராமத்துப்பணிகள் நடைபெறுவதால், பல்வேறு சாலைகள் குறுகலாகியுள்ளன. சில இடங்களில் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தடுக்க, தனியார் நிறுவனத்துடன் இணைந்து சென்னை போக்குவரத்துக் காவல்துறை, 'RoadEase (சாலை எளிமை)' என்ற கைப்பேசி செயலியை உருவாக்கியுள்ளனர்.

---

**2. பாதுகாப்புத்துறையில் 5 பில்லியன் டாலர் ஏற்றுமதிக்கு இலக்கு: இராஜ்நாத் சிங்**

வரும் 2025ஆம் ஆண்டுக்குள் இந்திய பாதுகாப்புத்துறையில் 5 பில்லியன் டாலர்கள் (₹41,366 கோடி) மதிப்பிலான ஏற்றுமதியை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

### 3. நாளை விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி எம்–3!

பிரிட்டனின் 36 செயற்கைக்கோள்களுடன் GSLV M–3 கனரக இராக்கெட்டை வரும் ஞாயிற்றுக்கிழமை (அக்.23) விண்ணில் செலுத்துவதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) திட்டமிட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டுக்காக செயல்படுத்தப்படவுள்ள இந்தத்திட்டமானது ISROஇன் 'நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம்' மற்றும் பிரிட்டனின் 'ஒன் வெப்' நிறுவனம் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது.

GSLV மார்க்–3 இராக்கெட் 43.5 மீ உயரமும், 640 டன் எடையும் கொண்டது. அதனை வடிவமைக்கும் பணிகளும், செயற்கைக்கோள்களை நிறுவும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. இதையடுத்து திட்டமிட்டபடி விண்ணில் செலுத்தப்படும் என்று ISRO தெரிவித்துள்ளது. உலகின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்றான 'ஒன் வெப்' நிறுவனமானது அரசு, வர்த்தகம், கல்வி பயன்பாட்டுக்கான தொலைத்தொடர்பு சேவைக்காக இந்தச் செயற்கைக்கோள்களை அனுப்பவிருக்கிறது. இந்தியாவின் பார்தி தொலைத்தொடர்பு சேவை நிறுவனமானது 'ஒன் வெப்' நிறுவனத்தின் முக்கிய பங்குதாரராகவும், முதலீட்டாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

---

### 4. 'அக்னி பிரைம்' ஏவுகணை சோதனை வெற்றி

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, நடுத்தர தொலைவு இலக்குகளைத் தாக்கவல்ல, 'அக்னி பிரைம்' ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. ஒடிஸாவின் பாலசோர் பகுதியில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து ஏவப்பட்டு இந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. திட எரிபொருளைக்கொண்டு முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அந்த ஏவுகணை வெற்றிகரமாகச் செயல்பட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி–மேம்பாட்டு அமைப்பு (DRDO) தயாரித்த அந்த நவீன தலைமுறை ஏவுகணையானது, நடுத்தர தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கியழிக்கும் வல்லமைகொண்டது.

---

### 5. CMDA எல்லை ஐந்து மடங்காக அதிகரிப்பு: அரசாணை வெளியீடு

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) எல்லை ஐந்து மடங்காக விரிவடைந்துள்ளது. இதற்கான உத்தரவை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. அதன்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லை 1189 சதுர கிலோ மீட்டரிலிருந்து 1221 கிராமங்களை புதிதாக இணைத்து 5,904 சதுர கிலோமீட்டர் அளவுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் நிர்வாக எல்லை சென்னை மாவட்டம் தவிர்த்து அருகில் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கி 1189 சதுர கிலோமீட்டர் அளவுக்கு தற்போது அமைந்துள்ளது.

---

### 6. இத்தாலியின் பிரதமரானார் ஜியார்ஜியா

இத்தாலியின் முதல் பெண் பிரதமராக தீவிர வலதுசாரிக் கொள்கையைக்கொண்ட ஜியார்ஜியா மெலோனி பதவி ஏற்றார். அவரது தலைமையில் அமையவிருக்கும் அரசுதான், இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய இத்தாலியின் முதல் தீவிர வலதுசாரி அரசு என்பது குறிப்பிடத்தக்கது. கொடுங்கோன்மையர் முசோலினியின் தேசிய பாசிச கட்சியின் வழித்தோன்றலான சுதந்திர மக்கள் கட்சியிலிருந்து பிரிந்து உருவானதுதான் ஜியார்ஜியா மெலோனி தலைமையிலான இத்தாலியின் சகோதரர்கள் கட்சியாகும். அவ்வகையில், பாசிசத்துடன் தொடர்புடைய ஜியர்ஜியோ இத்தாலியின் பிரதமராகியிருப்பது ஐரோப்பிய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1. பிரதமர் கிராம சதக் யோஜனா (PMGSY)–III தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ. மேற்கு வங்காளம்

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**



இ. மகாராஷ்டிரா

ஈ. ஆந்திரப் பிரதேசம்

✓ பிரதமர் கிராம சதக் யோஜனா (PMGSY)–IIIஐ ஹிமாச்சல பிரதேசத்தின் சம்பாவில் பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார். பிரதமர் கிராம சதக் யோஜனா (PMGSY)–III ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் சுமார் 3125 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்தும். ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் தொலைதூரத்தொகுதிகளில் உள்ள 440 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்காக இந்தக் கட்டத்தின்கீழ் ₹420 கோடிக்கு மேல் நடுவணரசு ஒதுக்கியுள்ளது.

**2. 2023 – FIFA மகளிர் உலகக்கோப்பைக்காக வெளியிடப்பட்ட சின்னத்தின் பெயர் என்ன?**

அ. நீனா

ஆ. போகோயோ

**இ. தசுனி ☑**

ஈ. அப்பு

✓ அடுத்த ஆண்டு (2023) ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ள FIFA மகளிர் உலகக்கோப்பையின் அதிகாரப்பூர்வ சின்னமாக பென்குயின் தசுனி வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளை நடத்தும் இரண்டு நாடுகளிலும் காணப்படும் யூடிப்டுலா என்றவொரு சிற்றினத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தசுனி, டாஸ்மான் கடலையும் 'ஒற்றுமை' என்ற சொல்லையும் ஒருங்கிணைக்கும் வண்ணம் உள்ளது. 'தசுனி' என்பது கடற்கரையில் சிறார்களுடன் விளையாடிய பிறகு கால்பந்தை நேசிக்கும் ஒரு 15 வயது நடுகள கால்பந்தாட்ட ஆளுமையையும் குறிக்கும் வண்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**3. லிஸ் டிரஸ் என்பவர் அண்மையில் எந்த நாட்டின் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்?**

அ. இந்தோனேசியா

ஆ. சவூதி அரேபியா



**இ. இங்கிலாந்து ☑**

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ பழைமைவாத கட்சியின் கொள்கைகளால் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டு கட்சியில் பிளவு ஏற்பட்டதையடுத்து அந்தக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக பிரித்தானிய பிரதமர் லிஸ் டிரஸ் அறிவித்தார். 45 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்த லிஸ் டிரஸ், மீண்டும் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை இங்கிலாந்தின் பிரதமராகவும் பழைமைவாத கட்சியின் தலைவராகவும் தொடர்ந்து இருப்பேன் என்றும் அறிவித்தார்.

**4. ஆசியாவின் மிகப்பெரிய அமுக்கப்பட்ட உயரி வாயு ஆலை திறக்கப்பட்ட மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. இராஜஸ்தான்



**ஆ. பஞ்சாப் ☑**

இ. பீகார்

ஈ. சத்தீஸ்கர்

✓ நடுவண் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, பஞ்சாப் மாநிலம் சங்ரூரில் உள்ள லேராககாவில் ஆசியாவின் மிகப்பெரிய அமுக்கப்பட்ட உயிரி வாயு ஆலையைத் திறந்து வைத்தார். சங்ரூரில் உள்ள இந்த ஆலையானது ஜெர்மனியின் முன்னணி பயோஎனெர்ஜி நிறுவனங்களில் ஒன்றான வெர்பியோ AGஆல் ₹220 கோடி அந்நிய நேரடி முதலீட்டில் திறக்கப்பட்டது. சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்த இது தற்போது நாளொன்றுக்கு ஆறு டன் அமுக்கப்பட்ட உயிரி வாயுவை உற்பத்தி செய்கிறது.

**5. பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) விருதுகள் 2021இல் முதலிடத்தைப் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. மத்திய பிரதேசம்

✓ 'பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) விருதுகள் 2021இல்' உத்தர பிரதேச மாநிலம் முதலிடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து மத்திய பிரதேசமும் தமிழ்நாடும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. குஜராத் ஐந்து சிறப்புப் பிரிவு விருதுகளைப் பெற்றது, ஜம்மு–காஷ்மீர் ஆனது தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூவுடன் இணைந்து 'சிறந்த செயல்திறன் கொண்ட UT' எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1.23 கோடி வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் 64 இலட்சம் வீடுகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன; மீதமுள்ளவை இறுதிக்கட்டங்களில் உள்ளன.

**6. ஒவ்வொரு ஆண்டும், 'உலக வளர்ச்சித் தகவல் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. அக்டோபர்.24 ☑**

ஆ. அக்டோபர்.27

இ. அக்டோபர்.31

ஈ. நவம்பர்.03

✓ ஐக்கிய நாடுகள் அவையானது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்.24 அன்று உலக வளர்ச்சித்தகவல் நாளை உலகம் முழுவதும் கொண்டாடுகிறது. பல்வேறு நாடுகளிலுள்ள வளர்ச்சியைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் மற்றும் அவற்றை கையாளுவதற்கான தீர்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1972இல், ஐநா பொதுச்சபை உலக வளர்ச்சித் தகவல் நாளை நிறுவியது.

**7. இந்தியாவின் முதல், 'புலம்பெயர் கண்காணிப்பு அமைப்பு' தொடங்கப்பட்ட நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. மும்பை ☑**

இ. காந்தி நகர்

ஈ. கௌகாத்தி

✓ இந்தியாவின் முதல், 'புலம்பெயர் கண்காணிப்பு அமைப்பானது' மும்பையில் தொடங்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது புலம்பெயர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களை ஒரே அமைப்பில் உடனே வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. வலைத்தள அடிப்படையிலான இப்புலம்பெயர் கண்காணிப்பு அமைப்பு புலம்பெயர்ந்த பயனாளிகளின் இயக்கங்களை தனிப்பட்ட அடையாள எண்கள்மூலம் கண்காணிக்கும்.

**8. அண்மையில் ஏவப்பட்ட புதிய தலைமுறை நடுத்தர தொலைவுக்குத் தாக்கும் ஏவுகணையின் பெயர் என்ன?**



அ. ஆகாஷ் பிரைம்

**ஆ. அக்னி பிரைம் ☑**

இ. ககன் பிரைம்

ஈ. நரன் பிரைம்

✓ இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட புதிய தலைமுறை நடுத்தர தொலைவுக்குத் தாக்கும் ஏவுகணையான 'அக்னி பிரைம்' (அக்னி–P) ஏவுகணையை ஒடிஸா கடற்கரையிலிருந்து சோதனை செய்தது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கூற்றுப்படி, 'அக்னி பிரைம்' என்பது 1,000 முதல் 2,000 கிமீ வரை சென்று தாக்கும் திறன்கொண்ட அக்னி வகை ஏவுகணைகளின் புதிய மேம்பட்ட வகையாகும்.

**9. 'தேசிய அறிவுசார் சொத்து விருதுகள் – 2021 மற்றும் 2022'ஐ வென்ற நிறுவனம் எது?**

அ. IISc பெங்களூரு

**ஆ. ஐஐடி மெட்ராஸ் ☑**

இ. ஐஐடி பம்பாய்

ஈ. எய்ம்ஸ், புது தில்லி

✓ இந்திய தொழில்நுட்பக்கழகம் – மெட்ராஸ் (IIT–M), 'தேசிய அறிவுசார் சொத்து விருதுகள் – 2021 மற்றும் 2022'ஐ வென்றுள்ளது. காப்புரிமை தாக்கல், மானியங்கள் மற்றும் வணிகமயமாக்கலுக்கான இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனமாக IIT–M நிறுவனம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விருது மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் தொழிற்துறை & உள்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான துறையால் வழங்கப்படுகிறது.

**10. 2020ஆம் ஆண்டிற்கான தாதாசாகேப் பால்கே விருதை வென்றவர் யார்?**



அ. இரஜினிகாந்த்

ஆ. கமல்ஹாசன்

**இ. ஆஷா பரேக் ☑**

ஈ. மு க ஸ்டாலின்

✓ கடந்த 2020ஆம் ஆண்டிற்கான, 'தாதாசாகேப் பால்கே' விருதுக்கு மூத்த நடிகை ஆஷா பரேக் தேர்வு செய்யப்பட்டு, புது தில்லியில் நடைபெறும் தேசிய திரைப்பட விருது விழாவில் அவருக்கு அவ்விருது வழங்கப்படவுள்ளது. தமிழ்த் திரையுலகின், 'சூப்பர் ஸ்டார்' இரஜினிகாந்த், 2021ஆம் ஆண்டுக்கான, 'தாதாசாகேப் பால்கே' விருதைப் பெற்றார். 52ஆவது 'தாதாசாகேப் பால்கே' விருதுபெற்ற ஆஷா பரேக், 95–க்கும் மேற்பட்ட படங்களில் பணியாற்றியதோடு, 1998–2001 வரை நடுவண் திரைப்பட சான்றிதழ் வாரியத்தின் தலைவராகவும் இருந்தார். கடந்த 1954ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த விருதுகளை தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 7ஆவது ஆயுர்வேத நாள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.**

ஏழாவது ஆயுர்வேத நாள் 23-10-2022 அன்று இந்தியாவிலும், பன்னாட்டளவிலும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு, "ஹர் தின் ஹர் கர் ஆயுர்வேதம்", அதாவது ஆயுர்வேதத்தின் நன்மைகள் அனைத்து மக்களுக்கும் சென்றடைய உறுதியேற்று செயல்பட வேண்டும் என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.

### 2. GSLV Mk–3 ஏவுகணை LVM–3 எனப் பெயர்மாற்றம்

விண்ணுக்கு மிக அதிக எடையை தாங்கிச்செல்லும் திறன்கொண்ட புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் செலுத்து வாகனமான, 'GSLV Mk–3' ஏவுகணையின் பெயரை 'LVM–3' (செலுத்து வாகனம் Mk–3) என இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) பெயர்மாற்றம் செய்துள்ளது. இந்தியாவின் விண்ணுக்கு மனிதர்களை அனுப்பும் விண்வெளி திட்டத்திலும் இந்த LVM–3 இராக்கெட்தான் பயன்படுத்தப்படவுள்ளது.

---

### 3. தஞ்சைப் பெரிய கோவிலில் இராஜராஜ சோழனின் 1037ஆவது சதய விழா

தஞ்சைப்பெரிய கோவிலில் இராஜராஜ சோழனின் 1037ஆவது சதய விழாவில் பந்தக்கால் முகூர்த்தம் நடப்பட்டது. உலகப் புகழ்பெற்ற தஞ்சைப் பெரிய கோவிலை கட்டிய மாமன்னர் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில், இராஜராஜ சோழனுக்குச் சதய விழாவாக கொண்டாடப்படுகிறது. இரண்டு நாள்கள் சிறப்பாக விழா கொண்டாடுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு சதய விழா வரும் நவ.2 & 3 தேதிகளில் நடைபெறுகிறது. இதையொட்டி, பெரிய கோவிலில் பந்தக்கால் முகூர்த்தம் நடப்பட்டது.

---

**1. சிறார்களுக்கு எதிரான இணையவெளிக் குற்றங்களைத் தடுப்பதற்காக, 'குஞ்சாப்' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**




அ. மேற்கு வங்காளம்

**ஆ. கேரளா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. ஆந்திரப் பிரதேசம்

✓ கேரள மாநிலத்தில் குழந்தைகளுக்கு எதிரான இணையவெளிக் குற்றங்களைத்தடுக்கும் வகையில், 'குஞ்சாப்' என்ற திறன்பேசி செயலியை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார். சிறார் சுரண்டல் குறித்து, 'குஞ்சாப்' செயலிமூலம் புகாரளிக்கலாம். புதிதாக நியமிக்கப்பட்ட குழந்தைகள் நலக்குழு மற்றும் சிறார் நீதி வாரியத்தின் உறுப்பினர்களுக்கான பயிற்சியையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

**2. ஐக்கிய நாடுகள் அவையானது ஆண்டுதோறும் எந்த மாதத்தில், 'ஆயுதக்குறைப்பு வாரத்தை' அனுசரிக்கிறது?**




அ. டிசம்பர்

ஆ. நவம்பர்

**இ. அக்டோபர் ☑**

ஈ. செப்டம்பர்

✓ ஐக்கிய நாடுகள் அவையானது ஒவ்வோர் ஆண்டும் அக்.24 முதல் அக்டோபர்.30 வரை ஆயுதக்குறைப்பு வாரமாகக் கொண்டாடுகிறது. கடந்த 1945 அக்.24இல் ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்டது. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கடந்த 1978ஆம் ஆண்டில் ஆயுதக்குறைப்பு குறித்த சிறப்புக்கூட்டத்தை நடத்தியதோடு ஆயுதக்குறைப்பு வாரத்தை முதன்முதலில் அனுசரித்தது. ஐக்கிய நாடுகளின் ஆயுதக்குறைப்பு ஆணையம் கடந்த 1952இல் நிறுவப்பட்டது. இது உலக நாடுகளின் ஆயுதப்படைகள் மற்றும் அவற்றின் ஆயுதங்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கான ஆவணங்களை உருவாக்கும் பணியை மேற்கொள்கிறது.

**3. பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை முறையே 17 சதவீதம் மற்றும் 7 சதவீதமாக உயர்த்துவதற்கான அவசரச்சட்டத்தை இயற்றிய மாநிலம் எது?**



அ. ஜார்கண்ட்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. கர்நாடகா ☑**

ஈ. ஒடிஸா

✓ கர்நாடக மாநிலத்தில் உள்ள பட்டியலினத்தோருக்கான இடஒதுக்கீட்டை 15 சதவீதத்தில் இருந்து 17 சதவீதமாகவும், பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை 3 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாகவும் உயர்த்துவதற்கான அவசரச் சட்டத்துக்கு கர்நாடக மாநில ஆளுநர் தாவர்சந்த் கெலாட் ஒப்புதல் அளித்துள்ளார். பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான அவசரச்சட்டத்திற்கு கர்நாடக மாநில அமைச்சரவையும் ஒப்புதலளித்துள்ளது.

**4. மரபணு மாற்றப்பட்ட இந்திய கடுகு இனமான, '*Brassica juncea*'ஐ வணிக ரீதியாக பயிரிட அனுமதித்த நாடு எது?**



அ. அமெரிக்கா

ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. வங்காளதேசம்

✓ ஆஸ்திரேலியாவில் உள்ள ஒழுங்குமுறை ஆணையம், மரபணு மாற்றப்பட்ட இந்திய கடுகு இனமான, '*Brassica juncea*' வணிக ரீதியாக பயிரிட ஒப்புதல் அளித்துள்ளது. மரபணு மாற்றப்பட்ட இந்திய கடுகு வணிகரீதியாக பயிரிட அனுமதிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். மரபணு மாற்றப்பட்ட (GM) கடுகு பயிரிடலுக்கான அனுமதிக்காக இந்தியாவும் காத்துக்கொண்டுள்ளது. கனோலா (*Brassica napus*) வணிக பயன்பாட்டிற்காக அனுமதி பெற்ற ஒரே GM வகை கடுகாகும்.

### 5. 2022 – உலக போலியோ நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Positive Pregnancy

**ஆ. A healthier future for mothers and children ☑**

இ. Eradication of Polio

ஈ. Brighter and better future.




✓ போலியோ சொட்டு மருந்து மற்றும் போலியோ ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.24 அன்று உலக போலியோ நாள் அனுசரிக்கப்படுகிறது. போலியோவால் பாதிக்கப்பட்ட நாடுகளில் தடுப்பூசிகளை வழங்குவதில் முன்களப் பணியாளர்களின் பணிகளை இந்நாள் எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆண்டு, உலக போலியோ நாளின் முதன்மை கருப்பொருள், "A healthier future for mothers and children" என்பதாகும். முதல் போலியோ தடுப்பூசியை உருவாக்கிய குழுவின் தலைமை ஆராய்ச்சியாளராக இருந்த ஜோனாஸ் சால்க் பிறந்ததை நினைவுகூரும் வகையில், கடந்த 1985ஆம் ஆண்டு உலக போலியோ நாள் நிறுவப்பட்டது.

### 6. 2022இல் இராணுவப் பணியாளர்களின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**அ. Lt Gen அனில் சௌகான் (ஓய்வு) ☑**

ஆ. Lt Gen ஹரி குமார்

இ. Lt Gen மனோஜ் பாண்டே

ஈ. Lt Gen வினோத் G கந்தாரே (ஓய்வு)



✓ Lt Gen அனில் சௌஹானை (ஓய்வுற்றவர்) இராணுவத்தின் அடுத்த படைத்தளபதியாக நியமிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அவர் இந்திய அரசின் இராணுவ விவகாரத் துறையின் செயலாளராகவும் செயல்படுவார். ஏறக்குறைய நாற்பதாண்டுகளுக்கும் மேலான அவரது இராணுவ வாழ்க்கையில், அவர் பல்வேறு பதவிகளில் பணியாற்றினார். 2021இல் ஓய்வுபெறும் வரை 2019இலிருந்து கிழக்குப் படையின் தலைமைத்தளபதியாக அவர் பணியாற்றினார்.

### 7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பாந்தவ்கர் வனக்காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா




✓ இந்திய தொல்பொருள் ஆய்வு மையமானது (ASI) மத்திய பிரதேசத்தில் உள்ள பாந்தவ்கர் புலிகள் காப்பகத்தில் 9ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்திய மிகப்பெரிய வர்ஹா சிற்பம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தொல்லெச்சங்களைக் கண்டறிந்துள்ளது. பொ ஆ 2ஆம் நூற்றாண்டு முதல் பொ ஆ 5ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்திய இருபத்தாறு குகைகள், சைத்திய வடிவ கதவுகள் மற்றும் கற்படுக்கைகள்கொண்ட கலங்கள் போன்ற பௌத்த மதத்தின் மகாயான பிரிவின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மற்ற கண்டுபிடிப்புகளுள் கல் விளையாட்டுகள், நீர் வடிகட்டி அமைப்பு, நாணயங்கள் மற்றும் பிராமி கல்வெட்டுகள் ஆகியவை அடங்கும்.

**8. 2022 – உலக இருதய நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. COVID and Heart

ஆ. Use Heart for Every Heart ☑

இ. Heart and Sustainability

ஈ. Heart and Humanity




✓ உலக இருதய நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.29 அன்று இருதய நலம் மற்றும் இருதய நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடைப்பிடிக்கப்படுகிறது. "Use Heart for Every Heart" என்பது நடப்பு (2022) ஆண்டில் வரும் உலக இருதய நாளுக்கானக்கருப்பொருளாகும். ஒவ்வோர் ஆண்டும் 18.6 மில்லியன் உயிர்களைக் கொல்லும் இருதய நோய் மற்றும் பக்கவாதம் ஆகியவை மனித இறப்புகளில் முக்கியமான காரணிகளாக உள்ளன.

**9. சமீபத்திய உச்சநீதிமன்ற ஆணையின்படி, எத்தனை வாரங்கள் வரை அனைத்து பெண்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமான கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு உரிமை உண்டு?**

அ. 20

ஆ. 24 ☑

இ. 30

ஈ. 32




✓ அனைத்து பெண்களும் பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமான கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு உரிமை உண்டு என்றும், இந்த விவகாரத்தில் திருமணமான மற்றும் திருமணமாகாத பெண்களுக்கு இடையேயான வேறுபாடு அரசியலமைப்புக்கு எதிரானது என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. திருமணமாகாத பெண்களும் ஒருமித்த உறவின் காரணமாக 20-24 வாரங்களுக்குள் கருக்கலைப்பு செய்ய உரிமை உண்டு என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நீதியரசர் DY சந்திரசூட் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு, மருத்துவச்சூல் முற்றுவிப்பு சட்டத்தின்கீழ், வண்புணர்வின் வரையறையில் திருமணத்துக்குப் பிறகான வல்லுறவும் அடங்கும் எனத் தீர்ப்பளித்தது.

**10. உலகின் முதல் CNG முனையம் அமைக்கப்படவுள்ள இந்திய மாநிலம் எது?**

அ. ஹரியானா

ஆ. அஸ்ஸாம்

இ. குஜராத் ☑

ஈ. பீகார்



✓ உலகின் முதல் CNG முனையம் மற்றும் பிரவுன்ஃபீல்ட் துறைமுகத்திற்கான அடிக்கல்லை குஜராத் மாநிலம் பாவ் நகரில் பிரதமர் நரேந்திர மோதி நாட்டினார். 20 ஏக்கர் பரப்பளவில் சுமார் ₹100 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல அறிவியல் மையத்தையும் பிரதமர் அப்போது திறந்து வைத்தார்.

**1. 2022 – தேசிய கடல்சார் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Sustainable Maritime Activities

**ஆ. Sustainable Shipping beyond COVID-19 ☑**

இ. Climate Change and Shipping

ஈ. Ship for Global Growth

✓ ஒவ்வோர் ஆண்டும் ஏப்.5 அன்று இந்தியா தனது தேசிய கடல்சார் நாளைக்கொண்டாடுகிறது. இந்த ஆண்டு (2022) இந்தியா தனது 59ஆவது தேசிய கடல்சார் நாளைக் கொண்டாடியது. "Sustainable Shipping beyond COVID-19" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வந்த தேசிய கடல்சார் நாளுக்கானக் கருப்பொருளாகும். பன்னாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடந்த 1964ஆம் ஆண்டில் இந்த நாள் முதன் முதலாக கடைப்பிடிக்கப்பட்டது. இந்திய கடல்சார் தொழிற்துறைக்கு முக்கியப் பங்காற்றியவர்களைக் கௌரவிக்கும் வகையில் விருது வழங்கும் விழாவும் இந்நாளின்போது நடத்தப்படுகிறது.

**2. கோல்டன் பென் ஆஃப் ஃப்ரீடம் விருது பெற்ற கெஸெட்டா வைபோர்சா என்பது கீழ்க்காணும் எந்த நாட்டைச் சார்ந்த நாளேடாகும்?**

அ. உக்ரைன்

**ஆ. போலந்து ☑**

இ. ஸ்வீடன்

ஈ. ரஷ்யா

✓ போலந்து நாளேடான, 'Gazeta Wyborcza' ஆனது உலக செய்தி வெளியீட்டாளர்கள் சங்கத்தால் 'கோல்டன் பென் ஆஃப் ஃப்ரீடம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த விருது தற்போது ஸ்பெயினின் சராகோசாவில் நடைபெற்று வரும் 2022 – உலக செய்தி ஊடக மாநாட்டின்போது அறிவிக்கப்பட்டது. 'கோல்டன் பென் ஆஃப் ஃப்ரீடம்' என்பது WAN-IFRAஆல் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு விருது ஆகும். இது பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

**3. 'இந்திய சுற்றுலா புள்ளிவிவரங்கள் – 2022'இன்படி, அயல்நாட்டுப் பயணிகளால் அதிகம் பார்வையிடப்பட்ட நினைவுச்சின்னம் எது?**



அ. தாஜ்மஹால்

ஆ. செங்கோட்டை

**இ. மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச்சின்னங்களின் குழுமம் ☑**

ஈ. குதுப்மினார்

✓ நடுவண் சுற்றுலா அமைச்சகம், 'இந்திய சுற்றுலா புள்ளிவிவரங்கள் – 2022' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. உலக சுற்றுலா நாளில் இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர் ஜக்தீப் தங்கர் இதனை வெளியிட்டார். தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச்சின்னங்களின் குழுமம் 2021-22 இடைப்பட்ட காலத்தில் அயல்நாட்டுப் பார்வையாளர்களால் அதிகமுறை கண்டு களிக்கப்பட்ட நினைவுச் சின்னமாகும். தாஜ்மஹால் உள்நாட்டுப் பார்வையாளர்களுக்கு அதிகமுறை கண்டுகளிக்கப்பட்ட நினைவுச்சின்னம் ஆகும். செங்கோட்டை மற்றும் குதுப் மினார் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

**4. கீழ்க்காணும் எந்த மூன்று இரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**



அ. புது தில்லி, அகமதாபாத் மற்றும் CSMT மும்பை ☑

ஆ. புது தில்லி, சென்னை மற்றும் CSMT மும்பை

இ. புது தில்லி, அகமதாபாத் மற்றும் வாரணாசி

ஈ. புது தில்லி, கொச்சி மற்றும் சென்னை

✓ பிரதமர் நரேந்திர மோதி தலைமையிலான நடுவணமைச்சரவை, புது தில்லி, அகமதாபாத் மற்றும் CSMT மும்பை ஆகிய மூன்று முதன்மை இரயில் நிலையங்களை மறுவடிவமைப்பு செய்வதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஏறக்குறைய ₹10,000 கோடி முதலீட்டில், சூரிய ஆற்றல், நீர்ப்பாதுகாப்பு மற்றும் மறுசுழற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட பசுமைக்கட்டட நுட்பங்களைப்பயன்படுத்தி அம்மூன்று நிலையங்கள் மறுவடிவமைக்கப்படும். அவை மெட்ரோ மற்றும் பேருந்துபோன்ற பிற பொதுப்போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைக்கப்படும். இந்த மூன்று முதன்மை இரயில் நிலையங்களையும் சேர்த்து 199 இரயில் நிலையங்களின் மறுசீரமைப்புக்கான மொத்த செலவு ₹60,000 கோடியாக உள்ளது.

**5. தனது முதல் கிளவுட் பிராந்தியத்தை கிரேக்கத்தில் அமைப்பதாக அறிவித்துள்ள நிறுவனம் எது?**

அ. அமேசான் ஆ. மைக்ரோசாப்ட்

இ. கூகிள் ☑ ஈ. மெட்டா

✓ உலக கிளவுட் கம்ப்யூட்டிங் மையமாக தன்னை மாற்றிக்கொள்வதற்கான முயற்சிகளை கிரேக்கம் மேற்கொண்டு வரும் இந்நிலையில், ஆல்பாபெட் நிறுவனத்தின் கூகுள் தனது முதல் கிளவுட் பகுதியை கிரேக்கத்தில் அமைப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் கிரேக்கத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் $2.13 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பங்களிக்கும் என்றும் 2030ஆம் ஆண்டுக்குள் சுமார் 20,000 பணிவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கிளவுட் பிராந்தியமானது தரவு மையங்களின் தொகுப்பைச்சுற்றி அமைந்துள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனம் கிரேக்கத்தில் தரவு மைய மையத்தை உருவாக்க முடிவு செய்துள்ளது.

**6. 2022 – சர்வதேச மொழிபெயர்ப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. A world without barriers ☑

ஆ. Accessibility and Translation

இ. Translation includes All

ஈ. Strengthening Peace



✓ உலகெங்கும் உள்ள மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழியியல் வல்லுநர்களின் பணியைப்போற்றும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்.30 அன்று சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2022) சர்வதேச மொழிபெயர்ப்பு நாளுக்கானக் கருப்பொருள், "A world without barriers – தடைகள் இல்லாத உலகம்" என்பதாகும். செப்.30 பைபிள் மொழிபெயர்ப்பாளர் புனித ஜெரோமின் விழாவுடன் ஒத்திசைந்துபோகிறது.

**7. UN SDG அதிரடி விருதுகளுள், 'சேஞ்ச்மேக்கர்' விருதை வென்ற இந்தியர் யார்?**



அ. சிருஷ்டி பக்ஷி ☑

ஆ. கபில் மண்டலெவல

இ. அமித் சரோகி

ஈ. கைஃப் அலி

✓ இந்தியாவைச் சேர்ந்த பெண்ணுரிமை ஆர்வலரான சிருஷ்டி பக்ஷி, UN SDG அதிரடி விருதுகளுள், 'சேஞ்ச்மேக்கர்' விருதை வென்றுள்ளார். பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சமத்துவமின்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஓராண்டுக்குள் நாடு முழுவதும் 3800 கிலோ மீட்டர் அவர் பயணம் செய்துள்ளார். "பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்டதற்காகவும், பொது இடங்களுக்குப் பாதுகாப்பான அணுகலை வழங்க வாதிட்டதற்காகவும்" அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

**8. சிறந்த சாகச சுற்றுலாத்தலமாகவும், முழுமையான சுற்றுலா வளர்ச்சிக்காகவும் முதற்பரிசை வென்றுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. கோவா

**ஈ. உத்தரகாண்ட் ☑**

✓ நடுவண் சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து சிறந்த சாகச சுற்றுலாத்தலம் என்பதற்காகவும், முழுமையான சுற்றுலா வளர்ச்சிக்காகவும் உத்தரகாண்ட் இரு பிரிவுகளில் முதல் பரிசைப்பெற்றது. உலக சுற்றுலா நாளையொட்டி, இந்தியக் குடியரசுத்துணைத்தலைவர் ஜக்தீப் தங்கர் 2018–19க்கான தேசிய சுற்றுலா விருதுகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது நிழற்படம் மற்றும் காணொளிப் போட்டி ஒன்றையும் அவர் தொடங்கி வைத்தார்.

**9. உலக ரேபிஸ் நாளானது கீழ்க்காணும் எந்த அறிவியலாளரின் நினைவு நாளை அனுசரிக்கிறது?**



**அ. லூயிஸ் பாஸ்டர் ☑**

ஆ. சர் ஐசக் நியூட்டன்

இ. ஆண்டன் வான் லீவன்ஹூக்

ஈ. வில்ஹெம் இரான்ட்ஜென்

✓ ரேபிஸ் தடுப்புகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அந்நோயை ஒழித்துக்கட்டுவதில் முன்னேற்றம் காணவுமாக ஒவ்வோர் ஆண்டும் செப்.28 அன்று 'உலக ரேபிஸ் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளானது முதல் ரேபிஸ் தடுப்பூசியை உருவாக்கிய பிரெஞ்சு வேதியியலாளரும் நுண்ணுயிரியலாளருமான லூயிஸ் பாஸ்டரின் நினைவு நாளைக் குறிக்கின்றது.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுகபைகா ஆறு பாயும் மாநிலம் எது?**



**அ. ஒடிசா ☑**

ஆ. மேற்கு வங்காளம்

இ. பீகார்

ஈ. உத்தரகாண்ட்

✓ சுகபைகா வடிகால் கால்வாய் திட்டத்திற்குப் புத்துயிரூட்டுவதற்காக 2023 மார்ச் மாதத்திற்குள் ₹49.67 கோடி நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஒடிசா மாநில அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது. குறைந்த பட்சம் கட்டாக் மாவட்டத்தின் மூன்று வளர்ச்சித் தொகுதிகளின் குடிநீர்த் தட்டுப்பாட்டை குறைக்க வேண்டியாவது, இறந்த இவ்வாற்றுக்கு புத்துயிரளிக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கதேசத்தில் 'சித்ரகாங் புயல்' கரையைக் கடந்தது**

வங்கதேசத்தில் டிங்கோனா மற்றும் சாண்ட்விப் இடையே பரிசால் பகுதிக்கு அருகில் சித்ரகாங் புயல் கரையைக் கடந்தது. வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுமண்டலம், சித்ரகாங் புயலாக வலுவடைந்தது. சித்ரகாங் புயல் வங்கதேசத்தில் கரையைக் கடந்துள்ளது. இப்புயல் மேலும் வலுவிழந்து வடகிழக்கு மாநிலங்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

**1. 'நீலக்கொடி சான்று பெற்ற கடற்கரைகள்' பட்டியலில் சேர்க்கப்பட்ட மினிகாய் துண்டி கடற்கரை மற்றும் கத்மத் கடற்கரை அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. மகாராஷ்டிரா

ஆ. கேரளா

**இ. இலட்சத்தீவுகள் ☑**

ஈ. அந்தமான் நிக்கோபார்

✓ இலட்சத்தீவுகளின் மினிகாய் துண்டி கடற்கரை மற்றும் கத்மத் கடற்கரை ஆகிய இரண்டு கடற்கரைகள், 'நீலக்கொடி சான்று பெற்ற கடற்கரைகள்' பட்டியலில் சேர்க்கப்பட்டன. இது சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை (FEE)மூலம் உலகின் தூய்மையான கடற்கரைகளுக்கு வழங்கப்படும் சுற்றுச்சூழல்சார் சான்றாகும். இதன்மூலம், இந்தியாவில் இப்போது பன்னிரு கடற்கரைகள் நீலக்கொடி சான்றின்கீழ் சான்றளிக்கப்பட்டுள்ளன. 729 கடற்கரைகளுடன் ஸ்பெயின், நீலக்கொடி சான்று பெற்ற கடற்கரைகள்கொண்ட நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

**2. ஒருமுறை சொத்து வரி பொறுத்தருளும் திட்டமான, 'சம்ரித்தி'யை அறிவித்துள்ள மாநிலம்/UT எது?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. புது தில்லி ☑**

இ. ஜம்மு காஷ்மீர்

ஈ. குஜராத்

सत्यमेव जयते
Government of the National Capital Territory of Delhi

✓ தில்லியின் துணை நிலை ஆளுநர் வினை குமார் சக்சேனா அண்மையில் ஒருமுறை சொத்து வரி பொறுத்தருளும் என்ற திட்டத்தை அறிவித்தார். தில்லியில் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நகராட்சி வருவாயை வலுப்படுத்துதல் மற்றும் பெருக்குதல் (Strengthening & Augmentation of Municipal Revenue for Infrastructure Development in Delhi – SAMRIDDHI) 2022–23 என்ற திட்டத்தின்கீழ், தேசிய தலைநகர பிராந்தியத்தில் (NCR) வசிக்கும் மக்கள் கடந்த ஐந்தாண்டுகளில் தாங்கள் செலுத்தாத, நிலுவையில் உள்ள வரிகளை அபராதம் ஏதும் இல்லாமல் செலுத்த முடியும்.

**3. 'COP27: 27ஆவது வருடாந்த காலநிலை குறித்த ஐநா கூட்டத்தை' நடத்தும் நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. எகிப்து ☑**

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. சீனா

COP27
SHARM EL-SHEIKH
EGYPT 2022

✓ காலநிலை குறித்த 27ஆவது வருடாந்திர ஐநா கூட்டம், COP27 (உறுப்புநாடுகளின் மாநாடு) எகிப்தின் ஷர்ம்–எல்–ஷேக்கில் நவ.6–18 வரை நடைபெறுகிறது. ஆப்பிரிக்காவில் பருவநிலை மாநாடு நடத்தப்படுவது இது ஐந்தாவது முறையாகும். கரியமிலவாயு உமிழ்வைக் குறைத்தல், காலநிலை மாற்றத்திற்கு தயாராக இருக்கவும் அதனைச் சமாளிக்கவும் நாடுகளுக்கு உதவுதல் மற்றும் பருவநிலை நடவடிக்கைகளுக்கு வளரும் நாடுகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிதியைப்பெறுதல் முதலிய மூன்று முதன்மை பகுதிகளில் COP27 ஆனது கவனம் செலுத்தும்,.

**4. மரபியல் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவானது (GEAC) வணிகரீதியான சாகுபடிக்கு கீழ்க்காணும் எதன் மரபணு மாற்றப்பட்ட (GM) பதிப்பை அங்கீகரித்துள்ளது?**

அ. கத்தரிக்காய் **ஆ. கடுகு ☑**

இ. பருத்தி ஈ. தக்காளி



✓ மரபியல் பொறியியல் மதிப்பீட்டுக்குழுவானது மரபணு மாற்றப்பட்ட கடுகை வணிகரீதியான சாகுபடி செய்வதற்கான தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. தில்லி பல்கலைக்கழகத்தின் உணவுப்பயிர்களின் மரபணு கையாளுதல் மையம் மற்றும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தால் உருவாக்கப்பட்ட இந்தக் கடுகு வகை, தொழில்நுட்ப ரீதியாக தாரா கடுகு ஹைப்ரிட்–11 (DMH–11) என அழைக்கப்படுகிறது. உயிரி தொழில்நுட்பத் துறையின் நிதி ஆதரவும் இதற்கு வழங்கப்பட்டது.

**5. 2022 – NDC தொகுப்பறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ. WEF

ஆ. UNEP

**இ. UNFCCC ☑**

ஈ. உலக வங்கி

✓ காலநிலை மாற்றம் தொடர்பான ஐநா கட்டமைப்பு கூட்டமைப்பின் (UNFCCC) '2022 – NDC தொகுப்பறிக்கை', உலக நாடுகள் உலகளாவிய பைங்குடில் இல்ல வாயு வெளியேற்றத்தை குறைத்து வருகின்றன என்பதைக் காட்டுகிறது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் வெப்பநிலை உயர்வை 1.5°C அளவுக்குக் கட்டுப்படுத்த இந்த முயற்சிகள் போதுமானதாக இல்லை என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கை விடுக்கிறது.

**6. 2022இல், 'இந்தியன் மொபைல் காங்கிரஸை' நடத்திய நகரம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. அகமதாபாத்

இ. மும்பை

ஈ. சென்னை

✓ 2022ஆம் ஆண்டு புது தில்லியில் நடைபெற்ற, 'இந்திய மொபைல் காங்கிரஸ்' நிகழ்வினில், தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் 5G சேவை அறிமுகப்படுத்தப்படும் என்று பிரதமர் நரேந்திர மோதி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். பார்தி ஏர்டெல் மற்றும் ஜியோபோன்ற முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய நகரங்களில் 5G சேவைகளை வெளியிடுவதாக உறுதிசெய்துள்ளன.

**7. அஜை குமார் ஸ்ரீவஸ்தவா என்பார் கீழ்க்காணும் எந்தப் பொதுத்துறை வங்கியின் MD & CEO ஆக உள்ளார்?**

அ. இந்தியன் வங்கி

**ஆ. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ☑**

இ. கனரா வங்கி

ஈ. பாரத வங்கி

✓ இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (IOB) தற்போதைய நிர்வாக இயக்குநரான அஜைகுமார் ஸ்ரீவஸ்தவாவை வங்கியின் நிர்வாக இயக்குநராகவும், தலைமைச் செயல் அதிகாரியாகவும் நடுவணரசு நியமித்துள்ளது. அவர் 2023 ஜனவரி.1 முதல் 3 ஆண்டுகள் வரை அப்பதவியிலிருப்பார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு பொதுத்துறை வங்கியாகும்.

**8. ஆண்டுதோறும், 'சர்வதேச முதியோர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




**அ. அக்டோபர்.01 ☑**

ஆ. அக்டோபர்.02

இ. அக்டோபர்.03

ஈ. அக்டோபர்.04

✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.1ஆம் தேதி உலக முதியோர் நாளாக அனுசரிக்கப்படுகிறது. முதியவர்களின் பங்களிப்பை கௌரவிக்கும் நோக்கத்துடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளில் கவனஞ்செலுத்தும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் இந்த நாள் உருவாக்கப்பட்டது. "Resilience of Older Persons in a Changing World" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வந்த உலக முதியோர் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**9. 2021–22 நிலவரப்படி உலக சந்தைக்கு பாஸ்மதி அரிசியை ஏற்றுமதி செய்வதில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**



அ. சீனா

ஆ. ஈரான்

**இ. இந்தியா ☑**

ஈ. இஸ்ரேல்

✓ 2021–22இல் ₹26,416 கோடி மதிப்புள்ள 3,948,161 மெட்ரிக் டன் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ததன்மூலம், உலக சந்தைக்கு பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்வதில் இந்தியா முன்னணியில் உள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI) சமீபத்தில் ஹரியானா மற்றும் பஞ்சாபில் புதிதாக வெளியிடப்பட்ட மூன்று IARI பாஸ்மதி வகைகளைப் பற்றிய கருத்துக்களைப் பெறுவதற்காக, 'கிசான் சம்பர்க் யாத்ராவை' ஏற்பாடு செய்தது. பூசா பாஸ்மதி 1847, பூசா பாஸ்மதி 1885 மற்றும் பூசா பாஸ்மதி 1886 ஆகிய இரகங்கள் நுண்ம இலைக்கருகல் நோய் மற்றும் கொள்ளை நோய்களுக்கு உள்ளமைந்த எதிர்ப்பைக் கொண்டுள்ளன.

**10. சமீப செய்திகளில் இடம்பெற்ற, *Anopheles stephensi* ஆனது எந்த நோயுடன் தொடர்புடைய உயிரினமாகும்?**



அ. டெங்கு

**ஆ. மலேரியா ☑**

இ. சிக்குன்குனியா

ஈ. தக்காளிக்காய்ச்சல்

✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) ஆப்பிரிக்காவில் மலேரியா பரவுவதைத் தடுக்க புதிய முனைவுகளைத் தொடங்கியுள்ளது. நகர்ப்புற சூழல்களில் மலேரியா நோயைப் பரப்புவதற்கான முதன்மை காரணியாக *Anopheles stephensi* உள்ளது. இந்த முனைவானது ஆப்பிரிக்க கண்டத்தில் *Anopheles stephensi*–ஐ ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. WHO ஆனது உலகளாவிய கடத்திகள் கட்டுப்பாட்டு மறுமொழி (Global Vector Control Response) 2017–2030ஐயும் வெளியிட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காசி தமிழ்ச்சங்கமம்**

பல நூற்றாண்டுகளாக நீடித்திருக்கும் தமிழ் கலாச்சாரம் மற்றும் காசிக்கு இடையேயான தொடர்புகளை மீண்டும் கண்டறியவும் உறுதிசெய்யவும் கொண்டாடவும் பாரதிய பாஷா சமிதி ஒரு முன்மொழிவை கண்டுள்ளது. அதன்படி 2022 நவ.16 முதல் டிச.19 வரை வாரணாசியில் ஒருமாத கால காசி தமிழ்ச்சங்கமத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய கலாச்சாரத்தின் இரண்டு தொன்மையான பகுதிகளின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் அறிஞர்களும் கருத்துப்பரிமாற்றம் செய்வது கருத்தரங்குகள், விவாதங்கள் நடத்துவதும் இந்த இருபகுதிகளுக்கு இடையேயான தொடர்புகள் மற்றும் பகிரப்பட்ட மாண்புகளை வெளிக்கொண்டு வருவதும் இதன் நோக்கமாகும். ஞானம் மற்றும் கலாச்சார பாரம்பரியங்களின் இரண்டு பகுதிகளை மிக நெருக்கமாக கொண்டுவருவது இதன் விரிவான நோக்கமாகும். நமது பகிரப்பட்ட பாரம்பரியத்தை புரிந்துகொள்வதும், இருபகுதிகளின் மக்களிடையேயான உறவை ஆழப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

**1. 'முன்னுரிமைகொண்ட பூஞ்சை நோய்க்கிருமிகளின் பட்டியலை' வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. UNEP

**ஆ. WHO ☑**

இ. UNFCCC

ஈ. NASA

✓ ஊடுருவல் பூஞ்சை நோயின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் விதமாக, உலக நலவாழ்வு அமைப்பு (WHO) அண்மையில் முன்னுரிமைகொண்ட பூஞ்சை நோய்க்கிருமிகளின் பட்டியலை வெளியிட்டது. முன்னுரிமை கொண்ட பூஞ்சை நோய்க்கிருமிகளின் பட்டியல் 19 பொதுவான பூஞ்சை நோய்க்கிருமிகளை மூன்று முன்னுரிமை கொண்ட அடுக்குகளாக வகைப்படுத்துகிறது. கிரிப்டோகாக்கஸ் நியோஃபார்மன்ஸ், அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ், கேண்டிடா அல்பிகான்ஸ் மற்றும் கேண்டிடா ஆரிஸ் முதலான நான்கு பூஞ்சை நோய்க்கிருமிகளைக் கொண்ட 'முதன்மை குழு' மிகவும் ஆபத்துடையதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. COVID தொற்றுக்கு எதிராக முதல் 'உள்ளிழுக்கக்கூடிய தடுப்பூசி'யை அறிமுகப்படுத்திய நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஜப்பான்

ஈ. அமெரிக்கா

✓ உள்ளிழுக்கக்கூடிய COVID-19 தடுப்பூசியை சீனா தனது மக்களுக்கு வழங்கத் தொடங்கியுள்ளது. ஷாங்காய் நகர நிர்வாகத்தின் கூற்றுப்படி, ஏற்கெனவே தடுப்பூசி போட்டவர்களுக்கு இத்தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் இலவசமாக வழங்கப்படும். இது இதழ்கள் வழியாக சுவாசிக்கப்படும் வகையிலான அமைப்பைக் கொண்டுள்ளது. 'ஊசியிலா' தடுப்பூசிகள் நலிவடைந்த சுகாதார அமைப்புகளைக்கொண்ட நாடுகளில் தடுப்பூசி விகிதங்களை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. இந்தியா, சமீபத்தில், எப்பிராந்திய கூட்டமைப்புடனான உறவின் 30ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடியது?**

அ. SAARC

**ஆ. ASEAN ☑**

இ. G20

ஈ. G8

✓ வேளாண்மை மற்றும் வனத்துறை தொடர்பான ஏழாவது ஆசியான்–இந்தியா அமைச்சர்கள் கூட்டமானது நடுவண் வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தலைமையில் நடைபெற்றது. ஆசியான்–இந்தியா உறவுகளின் 30ஆம் ஆண்டு விழாவும் அந்தக் கூட்டத்தில் கொண்டாடப்பட்டது. ஆசியான்–இந்தியா கூட்டுறவின் (ஆண்டு 2021–2025) நடுத்தர கால செயல்திட்டத்தின்கீழ் செயல்பாடுகளின் முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட்டது. புருனே தாருஸ்ஸலாம், கம்போடியா, இந்தோனேசியா, லாவோ பிடிஆர், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் வேளாண் அமைச்சர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**4. பன்னாட்டு உள்நாட்டு வான்போக்குவரத்து அமைப்பின் விமானப் போக்குவரத்துக் குழுவின் (ATC) தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**




**அ. Dr ஷெபாலி ஜுனேஜா ☑** ஆ. விவேக் ஜோஹ்ரி

இ. சுபைர் ரியாஸ் கமிலி ஈ. அர்ச்சனா பாண்டே திவாரி

- ✓ பன்னாட்டு உள்நாட்டு வான்போக்குவரத்து அமைப்பின் விமானப் போக்குவரத்துக் குழுவின் (ATC) தலைவராக Dr ஷெஃபாலி ஜுனேஜா நியமிக்கப்பட்டார். 28 ஆண்டுகளுக்குப்பின், இந்தியா, குழுவின் தலைவராக உள்ளது. மேலும் இந்தியா இதுவரை இரண்டு முறை மட்டுமே ATC–க்கு தலைமை தாங்கியுள்ளது. ATC என்பது ஐநா சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும். இது வான்போக்குவரத்து விஷயங்களில் கவுன்சிலின் ஆலோசனை அமைப்பாக உள்ளது.

**5. கீழ்க்காணும் எந்த நாட்டின் அறிவியலாளர், பன்னாட்டு விண்வெளி கூட்டமைப்பின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர்?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. உக்ரைன்

ஈ. வங்காளதேசம்

- ✓ ISROஇன் மூத்த அறிவியலாளர் Dr AK அனில் குமார், பாரிஸில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி கூட்டமைப்பின் (IAF) வருடாந்திர மாநாட்டின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வதேச விண்வெளி கூட்டமைப்பு 72 நாடுகளில் 433 உறுப்பினர்களைக்கொண்ட உலகின் முன்னணி விண்வெளி ஆலோசனை அமைப்பாகும். IAF அமைதியான நோக்கங்களுக்காக விண்வெளி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது மற்றும் அறிவியல் தகவல்களை பரப்புவதை அது ஆதரிக்கிறது.

**6. மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் MyGovஇன் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. இறையன்பு, இஆப

**ஆ. ஆகாஷ் திரிபாதி, இஆப ☑**

இ. உதய சந்திரன், இஆப

ஈ. அமீர் சுபானி, இஆப

- ✓ மத்திய பிரதேச கேடரின் 1998ஆம் ஆண்டுத் தொகுதி இஆப அதிகாரியான ஆகாஷ் திரிபாதி, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் MyGovஇன் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) நியமிக்கப்பட்டுள்ளார். துணை தேர்தல் ஆணையராக மூத்த அதிகாரி அஜை பாது நியமிக்கப்பட்டுள்ளார். பல்வேறு சேவைகளை சேர்ந்த 35 அரசு ஊழியர்கள் நடுவணரசின் பல்வேறு துறைகளில் இணைச்செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**7. "Mind the Gap. Leave No One and No Place Behind" என்பது அக்டோபரில் கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**

**அ. உலக வாழ்விட நாள் ☑**

ஆ. உலக சகோதரத்துவ நாள்

இ. உலக புலம்பெயர்ந்தோர் நாள்

ஈ. உலக குழந்தைகள் நாள்

- ✓ உலக வாழ்விட நாளானது அக்டோபர் மாதத்தின் முதல் திங்களன்று அனுசரிக்கப்படுகிறது; இது நகர்ப்புற அக்டோபர் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்த ஆண்டு இது அக்.3 அன்று வந்தது. "Mind the Gap. Leave No One and No Place Behind" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வந்த உலக வாழ்விட நாளுக்கானக் கருப்பொருளாகும். உலக வாழ்விட நாளானது முதன்முதலில் கடந்த 1986ஆம் ஆண்டின்போது கென்யாவின் நைரோபியில், "Shelter is my right" என்ற கருப்பொருளின்கீழ் கொண்டாடப்பட்டது.

**8. ஆண்டுதோறும், 'சர்வதேச அகிம்சை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. அக்டோபர்.01

**ஆ. அக்டோபர்.02 ☑**

இ. அக்டோபர்.03

ஈ. அக்டோபர்.04




✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.2ஆம் தேதி சர்வதேச அகிம்சை நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்தச்சிறப்பு நாள் 'மகாத்மா' காந்தியடிகளின் பிறந்தநாளைக் குறிக்கிறது. இந்த நாளின் முக்கிய நோக்கம் அகிம்சை பற்றிய விழிப்புணர்வை பரப்புவதாகும். 2007ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (UNGA) சர்வதேச அகிம்சை நாளை நினைவுகூரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த ஆண்டு, "Say No to Violence" என்ற முழக்கத்தை ஐநா தெரிந்தெடுத்துள்ளது.


**9. 'ஆப்டிமஸ்' என்பது எந்த நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்மாதிரி எந்திர மனிதனாகும்?**

அ. கூகிள்

ஆ. ஆப்பிள்

**இ. டெஸ்லா ☑**

ஈ. மெட்டா



✓ டெஸ்லா தலைமைச் செயலதிகாரி எலான் மஸ்க், செயற்கை நுண்ணறிவு மென்பொருள் மற்றும் உணரிகளை அதன் மகிழுந்துகளின் தன்னியக்க இயக்கி உதவி அம்சங்களுடன் பகிர்ந்துகொள்ளும், 'ஆப்டிமஸ்' என்ற முன் மாதிரி ரோபோவை அறிமுகப்படுத்தினார். 'ஆப்டிமஸ்' ஆனது மில்லியன் கணக்கில் உற்பத்திசெய்யும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 2.3kWh மின்கலத்தைக் கொண்டுள்ளது. டெஸ்லா SoCஇல் இயங்கும் இது Wi-Fi மற்றும் LTE இணைப்பைக் கொண்டுள்ளது.

**10. பாரத்ஸ்கில்ஸ் கருத்துக்களமானது கீழ்க்காணும் எந்த நடுவண் அமைச்சகத்தின்கீழ் தொடங்கப்பட்டது?**

அ. கல்வி அமைச்சகம்

**ஆ. திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் ☑**

இ. MSME அமைச்சகம்

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்




✓ தலைமைப் பயிற்சி இயக்குநரகமானது 'பாரத்ஸ்கில்ஸ் கருத்துக்களத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய அம்சம் திறன் கற்றோர்க்கான நூல்கள், குறிப்புகள், காணொளிகள், வினா வங்கி ஆகியவற்றைப் பகிர அனுமதிக்கிறது. இது தலைமைப் பயிற்சி இயக்குநரகத்தால் உருவாக்கப்பட்ட 'பாரத்ஸ்கில்ஸ்' கற்றல் தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தலைமை அமைப்பாகும். இது தேசிய அளவில் உள்ள தொழிற்பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக உள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சிங்கப்பூர்-இந்திய கடல்சார் இருநாட்டு கூட்டு நடவடிக்கை 'சிம்பெக்ஸ்-2022'**

இந்திய கடற்படை 29ஆவது சிங்கப்பூர்-இந்திய கடல்சார் இருநாட்டு கூட்டு நடவடிக்கை 'சிம்பெக்ஸ்-2022'ஐ விசாகப்பட்டினத்தில் அக்.26-30 வரை நடத்துகிறது. 'சிம்பெக்ஸ்-2022' 2 கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

சிங்கப்பூர் குடியரசின் கடற்படையைச் சேர்ந்த RSS ஸ்டால்வார்ட் என்ற போர்க்கப்பலும், RSS விஜிலென்ஸ் என்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான கப்பலும் இந்த கூட்டு நடவடிக்கையில் கலந்து கொள்வதற்காக கடந்த 2022 அக்.25 அன்று விசாகப்பட்டினத்திற்கு வந்தடைந்தது. இந்த கூட்டு நடவடிக்கையில் திறன்மிக்க நிபுணர்கள் குழு இருநாட்டு கடற்படை சார்ந்த முக்கிய முடிவுகள் தொடர்பான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. கடந்த 1994 ஆம் ஆண்டு, 'சிம்பெக்ஸ்' கூட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சிங்க ராஜா கூட்டு நடவடிக்கை என்று அழைக்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக இந்தக் கூட்டு நடவடிக்கையில் பல்வேறு புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதன் நோக்கமானது இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இந்திய பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆகும்.

---

## 2. 2–ஆவது நாடு

சர்வதேச கிரிக்கெட்டில் இருபால் கிரிக்கெட்டர்களுக்கும் சம ஊதியம் வழங்கும் நாடுகளின் வரிசையில் 2ஆவதாக இணைகிறது இந்தியா. அத்தகைய முதல் நாடாக நியூஸிலாந்து இந்த ஆண்டில் ஏற்கெனவே முந்திக்கொண்டது. ஆஸ்திரேலியாவும் சம ஊதிய முறையை அமல்படுத்த பரிசீலித்து வருகிறது.

---

**1. 'இந்தியாவின் வேலைவாய்ப்புக் கண்ணோட்டம்' என்ற அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑**

இ. தொழிலாளர் பணியகம்

ஈ. பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு

✓ புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய புள்ளியியல் அலுவலகமானது (NSO), இந்தியாவின் வேலைவாய்ப்புக் கண்ணோட்டம் குறித்த செய்திக்குறிப்பை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை 2017 செப்டம்பர் முதல் 2022 ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கியது. இது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதித் (EPF) திட்டம், ஊழியர்களின் மாநிலக் காப்பீட்டுத்திட்டம் (ESI) மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆகியவற்றின் பயனாளிகளின் எண்ணிக்கையைப் பற்றிய தகவல்களைப் பயன்படுத்துகிறது. அறிக்கையின்படி, 5,81,56,630 புதிய பயனாளிகள் EPF திட்டத்தில் இணைந்துள்ளனர்.

**2. NASAஇன் சமீபத்திய திட்டமான, 'டிராகன்பிளை' கீழ்க்காணும் எந்தக்கோளை ஆய்வதற்காக தொடங்கப்பட்டது?**



அ. செவ்வாய்

ஆ. வியாழன்

**இ. சனி ☑**

ஈ. வெள்ளி

✓ NASAஇன் டிராகன்பிளை சுற்றகவூர்தியானது 2034ஆம் ஆண்டில் சனியின் நிலவான டைட்டனில் உள்ள செல்க் கிரேட்டர் பகுதியை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. காசினி விண்கலம் அதன் பதிமூன்றாண்டுகால சனி அமைப்பு ஆராய்ச்சியின் பலனாக சில ரேடார் படங்களை அனுப்பியுள்ளது. 'டிராகன்பிளை' வெளிப்புற சூரிய குடும்பத்தில் உள்ள ஒரு வான்பொருளை ஆயும் உலகின் முதல் பறக்கும் எந்திரமாகவும் உள்ளது.

**3. SIMBEX என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் கடல்சார் இருதரப்பு பயிற்சியாகும்?**




அ. இலங்கை

ஆ. ஸ்வீடன்

இ. சுவிட்சர்லாந்து

**ஈ. சிங்கப்பூர் ☑**

✓ விசாகப்பட்டினத்தில் நடைபெறும் சிங்கப்பூர்–இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சியில் (SIMBEX) இந்தியா மற்றும் சிங்கப்பூர் கடற்படைகள் பங்கேற்கின்றன. இந்திய கடற்படையானது SIMBEX–2022இன் 29ஆவது பதிப்பை இரு கட்டங்களாக நடத்துகிறது. விசாகப்பட்டினத்தில் துறைமுகம் கட்டமும் வங்காள விரிகுடாவில் கடல் கட்டமும் என இரு கட்டங்களாக நடைபெறும். கடந்த 1994இல் தொடங்கிய SIMBEX பயிற்சிகள் ஆரம்பத்தில், 'லயன் கிங்' என்று அழைக்கப்பட்டது.

**4. இந்திய வான்படைக்கு போக்குவரத்து விமானம் தயாரிக்கும் வசதி அமைக்கப்படவுள்ள நகரம் எது?**



அ. ஹைதராபாத்

**ஆ. வதோதரா ☑**

இ. காந்தி நகரம்

ஈ. பெங்களூரு

✓ வதோதராவில் இந்திய வான்படைக்கு போக்குவரத்து விமானங்கள் தயாரிக்கும் வசதி ஏற்படுத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. ஏர்பஸ் டிஃபென்ஸ் மற்றும் ஸ்பேஸ் எஸ்ஏ நிறுவனத்திடமிருந்து வாங்கப்படும் 56 C-295MW போக்குவரத்து விமானங்களில் 40 வதோதராவில் உள்ள புதிய வசதியில் தயாரிக்கப்படும். C-295 விமானம் ஐரோப்பாவிற்கு வெளியே தயாரிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். அவை இந்தியாவில் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் (TASL) மற்றும் TASL தலைமையிலான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) ஆகியவற்றின் டாடா கூட்டமைப்புமூலம் தயாரிக்கப்படும்.

**5. ஏவியேஷன் அனலிட்டிக்ஸ் நிறுவனமான, 'Official Airline Guide (OAG)'இன்படி, (2022 அக்டோபர் நிலவரப்படி) உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையம் எது?**



அ. ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑

ஆ. துபாய் பன்னாட்டு வானூர்தி நிலையம்

இ. டோக்கியோ பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஈ. இந்திரா காந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம், தில்லி

✓ ஏவியேஷன் அனலிட்டிக்ஸ் நிறுவனமான, 'Official Airline Guide (OAG)'இன் அறிக்கையின்படி, தில்லியில் உள்ள இந்திராகாந்தி பன்னாட்டு வானூர்தி நிலையமானது இருக்கை திறன் மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வானூர்திகளின் வருகைப்போக்கு ஆகியவற்றின் அடிப்படையில், பத்தாவது பரபரப்பான விமான நிலையமாகும். 2019 அக்டோபரில் அது 14ஆவது இடத்தில் இருந்தது. 2022 அக்டோபர் நிலவரப்படி உலகின் பரபரப்பான விமான நிலையம் ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா பன்னாட்டு வானூர்தி நிலையம் ஆகும். அது 47,47,367 பயணிகளுக்கு சேவை செய்துள்ளது. துபாய் பன்னாட்டு வானூர்தி நிலையம் இரண்டாமிடத்தையும், டோக்கியோ பன்னாட்டு வானூர்தி நிலையம் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளது.

**6. தொலைதூர கிராமங்களின் வளர்ச்சிக்காக, 'கிராம சேவை' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய பொதுத்துறை வங்கி எது?**

அ. கனரா வங்கி

**ஆ. பாரத வங்கி ☑**

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. பரோடா வங்கி

✓ காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பாரத வங்கி 4ஆவது கட்ட, 'SBI கிராம சேவை' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தமிழ்நாடு, ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உள்ள முன்னேற விழையும் மாவட்டங்களின் முப்பது தொலைதூர கிராமங்களை தத்தெடுப்பதாக SBI அறிவித்துள்ளது. கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் உட்கட்டமைப்புபோன்ற துறைகளில் வங்கி தீவிரமாக ஈடுபடவுள்ளது.

**7. தனது மாநிலத்தின் காவல்துறைக்காக, 'சத்ய நிஷ்தா' என்ற செயலியை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. கர்நாடகா

✓ ஹிமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர், மாநிலத்தின் காவல்துறைக்கான, 'சத்ய நிஷ்தா' என்ற செயலியை அறிமுகப்படுத்தி வைத்தார். இந்தச் செயலியானது, குற்றவாளிகளின் தரவுத்தளத்தை தயார்செய்யவும், மாவட்டத்தில் உள்ள பல்வேறு காவல்நிலையங்களின்கீழ் நடைபெறும் பல்வேறு குற்றங்களை ஆயவும் காவல் துறைக்கு உதவும். இது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான நபர்கள் பற்றிய தகவல்களின் தரவுத்தளமாக விளங்கும்.

**8. 2022 – உலக ஆசிரியர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Teaching Importance of Sustainability

ஆ. Teaching Equality

**இ. The change of education begins with teachers ☑**

ஈ. Leaving No one Behind

✓ உலகம் முழுவதும் அக்.5 அன்று 'உலக ஆசிரியர் நாள்' கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்களின் பங்களிப்புகளுக்கு நன்றிபாராட்டும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது. 2022ஆம் ஆண்டு உலக ஆசிரியர் தினத்தின் கருப்பொருள் "The change of education begins with teachers" என்பதாகும். 1994இல், UNESCO அக்.5ஆம் தேதியை உலக ஆசிரியர் நாளாக அறிவித்தது. கடந்த 1966ஆம் ஆண்டு இதே நாளில், ஆசிரியர்களின் நிலைகுறித்த UNESCO பரிந்துரையை பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான கூட்டம் ஏற்றுக்கொண்டது.

**9. 2026 – காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் நாடு எது?**




அ. இந்தியா

ஆ. இலங்கை

**இ. ஆஸ்திரேலியா ☑**

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ காமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பு (CGF) மற்றும் காமன்வெல்த் விளையாட்டு ஆஸ்திரேலியா ஆகியவை விக்டோரியா 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கான விளையாட்டுத் திட்டத்தை வெளியிட்டன. இது 20 விளையாட்டுகளையும் 26 துறைகளையும் கொண்டுள்ளது; இதில் ஒன்பது முழுமையாக ஒருங்கிணைந்த பாரா விளையாட்டுகளும் அடங்கும். பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப்போட்டியிலிருந்து சர்ச்சைக்குரிய வகையில் கைவிடப்பட்ட துப்பாக்கி சுடுதல், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக இந்தியாவின் வலிமையான விளையாட்டாக துப்பாக்கி சுடுதல் உள்ளது.

**10. 2021–22ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய சீனி உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் இருந்த நாடு எது?**



**அ. இந்தியா ☑**

ஆ. சீனா

இ. ஈரான்

ஈ. இஸ்ரேல்

✓ 2021–22ஆம் ஆண்டில், உலகின் மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் மற்றும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய சர்க்கரை ஏற்றுமதியாளராகவும் இந்தியா உள்ளது. செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த 2021–22 சந்தைப்படுத்தல் ஆண்டில் இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி 57% உயர்ந்து 109.8 இலட்சம் டன்னாக இருந்தது. இதன்மூலம் நாட்டிற்கு சுமார் ₹40,000 கோடி மதிப்பிலான அந்நிய செலாவணி வரத்து ஏற்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 29-10-2022 – உலக பக்கவாத நாள்.**

---

**2. 30-10-2022 – 'பசும்பொன்' முத்துராமலிங்கத் தேவரின் 115ஆம் பிறந்தநாள்.**

**3. கிராம சபையை கண்காணிக்க புதிய மென்பொருள்**

கிராமசபைக் கூட்ட நிகழ்வுகளைக் கண்காணிக்க, 'நம்ம கிராம சபை' என்ற பெயரில் மென்பொருள் உருவாக்கப்பட்–டுள்ளது. இதுதொடர்பாக ஊரக வளர்ச்சி, ஊராட்சித்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஒவ்வோர் ஆண்டும் நவ.1–ஆம் தேதி உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி, வரும் நவ.1 உள்ளாட்சிகள் நாள் கொண்டாடப்பட உள்ளது. இந்தத் தினத்தையொட்டி, கிராமசபைக் கூட்டங்கள், கண்காட்சிகள் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படும். மேலும், சிறந்த ஊழியா்களை அங்கீகரிப்பது, கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

**கண்காணிப்பு:** கிராமசபைக் கூட்ட நிகழ்வுகளை உடனுக்குடன் கண்காணிக்கும் வகையில், 'நம்ம கிராம சபை' என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தி கணினி, கைப்பேசி ஆகியவற்றின் வழியே கிராமசபை நிகழ்வுகளை கண்காணிக்கலாம். உள்ளாட்சிகள் தினத்தன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களில் ஊரகப்பகுதி மக்கள் உள்பட அனைவரும் கலந்துகொண்டு விவாதத்தில் பங்கேற்க வேண்டுமென அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. தனிநபர் பைங்குடில் வாயு வெளியேற்றத்தில் அதிக பங்களிப்பை வழங்கும் நாடு எது?**

அ. சீனா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ரஷ்யா

ஈ. இந்தியா




✓ "Emissions Gap Report 2022: The Closing Window" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) வெளியிட்டது. இந்தியாவின் தனிநபர் பைங்குடில் வாயு வெளியேற்றம் 2.4 tCO2e (டன் கரியமிலவாயுவுக்குச் சமம்) ஆக உள்ளது. இது கடந்த 2020ஆம் ஆண்டில் இருந்த உலக சராசரியான 6.3 tCO2eஐ விட மிகக்குறைவாகும். அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்த வெளியேற்றம் அதிக அளவாக 14 tCO2e என்ற அளவில் உள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து ரஷ்யாவும் (13 tCO2e) சீனாவும் (9.7 tCO2e) உள்ளன.

**2. '2022 அக்டோபருக்கான பண்டகச் சந்தைகள் கண்ணோட்ட அறிக்கையை' வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. பன்னாட்டு செலாவணி நிதியம்

**ஆ. உலக வங்கி ☑**

இ. உலக பொருளாதார மன்றம்

ஈ. இந்திய ரிசர்வ் வங்கி

THE WORLD BANK

✓ 2022 அக்டோபர் மாதத்திற்கான பண்டகச் சந்தைகள் கண்ணோட்ட அறிக்கையை உலக வங்கி அண்மையில் வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, அடுத்த ஈராண்டுகளில் உலகளவில் எரிசக்தி விலைகள் குறையும், ஆனால் இதுவரை இருந்துவரும் சராசரியைவிட அது அதிகமாக இருக்கும். எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் எரிசக்தி விலை 11 சதவீதமும், 2024இல் 12 சதவீதமும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

**3. 'கருடா VII' என்பது இந்திய வான்படையும் கீழ்க்காணும் எந்த நாடும் இணைந்து நடத்தும் ஓர் இருதரப்புப் பயிற்சி ஆகும்?**

அ. இலங்கை

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. ஜப்பான்

ஈ. ஆஸ்திரேலியா



✓ இந்திய வான்படை மற்றும் பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப்படை ஆகியவை ஜோத்பூரில் உள்ள விமானப்படை நிலையத்தில், 'கருடா VII' என்ற இருதரப்புப் பயிற்சியில் பங்கேற்கின்றன. இந்தப் பயிற்சியில், இந்தியா வான் படையானது Su–30 MKI, இரபேல், LCA தேஜாஸ் மற்றும் ஜாகுவார் போர் விமானங்கள் மற்றும் இலகுரக போர் உலங்கூர்தி மற்றும் Mi–17 உலங்கூர்திகளுடன் பங்கேற்கிறது. இது 'கருடா' என்னும் இந்த இருதரப்புப் பயிற்சியின் ஏழாவது பதிப்பாகும்.

**4. 2022 – இந்திய விண்வெளி மாநாடு நடத்தப்படும் நகரம் எது?**

அ. பெங்களூரு

ஆ. மும்பை

**இ. புது தில்லி ☑**

ஈ. ஹைதராபாத்

India Space Congress

✓ சாட்காம் தொழிற்துறை சங்கமானது (SIA இந்தியா) புது தில்லியில் மூன்று நாள் நடைபெறும் இந்திய விண்வெளி மாநாடு, 2022ஐ ஏற்பாடு செய்துள்ளது. இந்த மாநாட்டின் கருப்பொருள், "Leveraging Space to Power Next–Gen Communication & Businesses" என்பதாகும். இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO), பாதுகாப்பு அமைச்சகம், NITI ஆயோக், இன்–ஸ்பேஸ், நியூ ஸ்பேஸ் இந்தியா லிட் (NSIL) மற்றும் தொலைத்தொடர்புத்துறை ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெற்ற இம்மாநாட்டில் 30 நாடுகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் பங்கேற்றனர்.

**5. புலம்பெயர்வு மற்றும் போக்குவரவு தொடர்பான உயர்மட்ட பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து தலைமை வகித்த நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. ஆஸ்திரேலியா

இ. பிரான்ஸ்

ஈ. சீனா



✓ பிரஸ்ஸல்ஸில் புலம்பெயர்வு மற்றும் போக்குவரவு தொடர்பாக நடைபெற்ற ஆறாவது உயர்மட்ட பேச்சுவார்த்தைக்கு இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து தலைமைதாங்கின. பாதுகாப்பான, சீரான மற்றும் வழமையான குடியேற்றத்தை மேம்படுத்துவது தொடர்பான சிக்கல்கள்குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பார்வையர்களாக அழைக்கப்பட்ட பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளின் தூதரகப்பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தமது தூதரக உறவுகளின் 60 ஆண்டுகளைக்கொண்டாடின.

**6. IFSCAஆல் அமைக்கப்பட்ட, நிலையான நிதிகுறித்த நிபுணர்கள் குழுவின் தலைவர் யார்?**

அ. அஜய் தியாகி

ஆ. விரல் ஆச்சார்யா

இ. உர்ஜித் படேல்

**ஈ. CK மிஸ்ரா ☑**



✓ பன்னாட்டு நிதியியல் சேவை மையங்கள் ஆணையம் (IFSCA) 'நிலையான நிதிகுறித்த நிபுணர்களின் குழு'வை அமைத்தது. இந்திய அரசின் முன்னாள் செயலரான இக்குழுவின் தலைவர் CK மிஸ்ரா அதன் இறுதி அறிக்கையை IFSCA தலைவரிடம் சமர்ப்பித்தார். தன்னார்வ கரிமச்சந்தையை உருவாக்குதல், மாறுதல் பிணைப்புகளுக்கான கட்டமைப்பு, இடர்நீக்கு வழிமுறைகளை செயல்படுத்துதல் மற்றும் பசுமை நிதியியல் தொழில்நுட்பத்திற்கான ஒழுங்குமுறைக் களத்தை மேம்படுத்தல் ஆகியவை அந்தக்குழுவின் சில முக்கியமான பரிந்துரைகளுள் அடங்கும். நிலையான கடன் வழங்குவதற்காக பிரத்யேக MSME தளத்தை அமைக்கவும் அக்குழு முன்மொழிகிறது.


**7. 2022இல் இந்திய தேர்தல் ஆணையத்தின், 'தேசிய முகமாக' அறிவிக்கப்பட்ட நடிகர் யார்?**

**அ. பங்கஜ் திரிபாதி ☑**

ஆ. 'ஜெயம்' இரவி

இ. மனோஜ் பாஜ்பாய்

ஈ. ஹரிஷ் கல்யாண்



✓ இந்திய தேர்தல் ஆணையத்துடன் இணைந்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தின், 'தேசிய முகமாக' நடிகர் பங்கஜ் திரிபாதி அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டு வெளியான, 'நியூட்டன்' திரைப்படத்தில், அவர் தேசிய விருதை வென்றார். CRPF அதிகாரியாக அத்திரைப்படத்தில் நடித்த அவர் சத்தீஸ்கர் காடுகளில் தேர்தல்களை நடத்தும் பணியில் ஈடுபடும் வேடத்தில் நடித்தார்.

**8. 2022 அக்டோபரில், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் ஐந்தாவது கூட்டத்தை நடத்திய நாடு எது?**

அ. வங்காளதேசம்

**ஆ. இந்தியா ☑**

இ. நேபாளம்

ஈ. தாய்லாந்து

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் ஐந்தாவது கூட்டம் 2022 அக்.17–20 வரை புது தில்லியில் இந்தியாவால் நடத்தப்பட்டது. நடுவண் எரிசக்தி மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் RK சிங், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் ஐந்தாவது கூட்டத்தை தொடங்கிவைத்தார். பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் பேரவைத்தலைவர் பதவியை இந்தியா தற்போது கொண்டுள்ளது. இந்த ஐந்தாவது கூட்டம் மூன்று முக்கியமான பிரச்சினைகளில் பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் முனைவுகள்பற்றி விவாதிக்கும்; அவை ஆற்றல் அணுகல், ஆற்றல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் மாற்றம் ஆகும்.

**9. 2022ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா இராமானுஜன் பரிசைப் பெற்றவர் யார்?**

அ. K சிவன்



ஆ. சதீஷ் ரெட்டி

**இ. யுங்கிங் டாங் ☑**

ஈ. டெஸ்ஸி தாமஸ்

✓ 2022ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா இராமானுஜன் பரிசு, அமெரிக்காவின் பெர்க்லியில் அமைந்துள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் உதவிப்பேராசிரியரான யுன்கிங் டாங்கிற்கு வழங்கப்படும். பரிசுக்குழுவின் கூற்றுப்படி, விருது பெற்றவரின் படைப்புகள் அதிநவீன நுட்பங்களின் குறிப்பிடத்தக்க கலவையைக் காட்டுகின்றன. $10,000 மதிப்பு மிக்க இவ்விருது சண்முகா கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அகாதெமியால் (SASTRA) கடந்த 2005ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த விருது ஆண்டுதோறும் 32 வயது மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய கணிதத்துறையில் பங்களிக்கும் நபருக்கு வழங்கப்படுகிறது.

**10. 'SFURTI' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

அ. கலாச்சார அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. நிதியமைச்சகம்

✓ SFURTI (Scheme of Fund for Regeneration of Traditional Industries – பாரம்பரிய தொழில்களின் மீட்டுருவாக்கம் செய்வதற்கான நிதித் திட்டம்) ஆனது நடுவண் MSME அமைச்சகத்தால் கடந்த 2005ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது நாடு முழுவதும் தொழிற்துறை தொகுதிகளின் மேம்பாட்டை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. காதி மற்றும் கிராமப்புறத்தொழில்கள் ஆணையமானது (KVIC) காதி மற்றும் கிராமப்புறத்தொழில்கள் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்கான மைய முகமையாக உள்ளது. விடுதலை அமுதப்பெருவிழாவை நினைவுகூரும் வகையில், முதன்முறையாக, தில்லி ஹாட்டில் அண்மையில் 'SFURTI விழா' கொண்டாடப்பட்டது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 31–10–2022: தேசிய ஒற்றுமை நாள்.**

---

**2. உலகக் கோப்பை: ஸ்பெயின் சாம்பியன்**

இந்தியாவில் நடைபெற்ற 17 வயதுக்கு உள்பட்ட மகளிருக்கான உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி, நடப்பு சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டது. இறுதி ஆட்டத்தில் அந்த அணி 1–0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி, 2ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

**நைஜீரியா 3ஆம் இடம்:** இப்போட்டியில், 3ஆவது இடத்துக்காக நடைபெற்ற ஆட்டத்தில் நைஜீரியா 'பெனால்டி ஷூட் ஔட்' வாய்ப்பில் ஜெர்மனியை வீழ்த்தியது. முன்னதாக இரு அணிகளும் மோதிய ஆட்டம் 3–3 என்ற கோல் கணக்கில் டிரா ஆக, வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்டி ஷூட் அவுட் வாய்ப்பில், நைஜீரியா 3–2 என்ற கோல் கணக்கில் வென்றது.

---